Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 16/50

ஜன. 20 - 26, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S TAMIL WEEKLY முரசு 598


## பாதிக்கப்பட்ட பகுதிகளும் புனர்நிர்மாணப் பணிகளும்

## இலங்கையுடன் இந்திய - அமெரிக்க உறவுகள்



## இயல்பு வாழ்வுக்காக எதிர்நோக்க வேண்டிய சவால்கள்!

## ஆன்மீகம்



### ஆன்மீக வாழ்வே அமைதி தரும்!

எந்த மதமானாலும் அந்த மத அனுஷ்டானங்களைச் சிந்தை சிதறாது கடைப்பிடித்து வாழ முற்படும்போது பந்த பாசங்களோடும், அமைதியோடும், அன்புப் பிணைப்போடும் நிம்மதியாக வாழ நிச்சயம் இறையருள் கிட்டும்.

ஆன்மீகப் பரப்புரைகள் அனைவருக்கும் அவசியம் உணர்த்தப்படவேண்டிய அறிவுரைகள். தாரக மந்திரமாக அதனை உள்வாங்கி அதன்படி ஒழுகும்போது வாழ்க்கை வளம் நிறைந்து மங்களகரமாகத் தொடரும். மனம் நிம்மதி அடையும்.

'கலியுகம்' அநாகரீகத்தால் நிலைகுலைந்து அலைபாய்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் கொலை, கொள்ளை, பேரழிவுகள் உலகெங்கும் ஊழித் தாண்டவம் ஆடுவதை அவ்வப்போது அனைவரும் அறிவார்கள்.

பேராற்றல் நிறைந்த இறையருளை அனைவரும் வேண்டி ஆன்மீக வாழ்க்கை வாழ முற்பட்டால் நாடெங்கும் அமைதியேற்படும். அவலம் குறையும்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

### கர்த்தர் கருணையுள்ளவர்

ஆர்ப்பரிக்கும் அலை கடலும், வானுயர்ந்த மலைகளும், பசுமை நிறைந்த பிரபஞ்சமும் கர்த்தரின் படைப்புக்களே. தான் படைத்த உலகில் மனித இனத்தைத் தோற்றுவித்து உலகில் இறைசேத்தோடு இறையன்போடு வாழவே மனிதகுலம் கர்த்தரால் படைக்கப்பட்டது.

பாவச் சுமைகளிலிருந்து மனித குலத்தை மீட்க இயேசு பிறந்தார். சீர்கெட்ட சமுதாயம் அவரைப் பழித்தது. சிலுவையில் அறைந்தது. தேவனுக்குத் தண்டனையா? அதுவும் அவரால் படைக்கப்பட்ட மனிதனாலா? நடக்குமா? அவர் உயிர்த்தார். எல்லாம் வல்ல இயேசுவின் - கர்த்தரின் வல்லமைக்கு ஈடு உண்டோ?

அத்தகைய மகிமை மிக்க இறைவனைப் போற்றும் எண்ணம் அருகிவருவதால்தான் இயற்கை அனர்த்தங்களும், அழிவுகளும் மனித குலத்தை வாட்டி வதைக்கின்றன. உலக வாழ்வும் வீழ்வும் அவன் கையில் இருக்கும்போது அந்த ஆபத்பாந்தவனை தொழுதால் அனைத்தும் அனுகூலமாகும்.

"கர்த்தர் நமக்காக யாவையும் செய்து
முடிக்கும் வல்லமை மிக்கவர்;
அவர் கருணையுள்ளவர்'' என்றும் அவர் நாமம் போற்றி அமைதி காண்போம்.

-எம்.ஏ.எஸ்.சண்முகம், வத்தளை.

### அல்லாஹ்வின் படைப்புக்கள்

அல்லாஹ் எல்லா வஸ்துகளின் மீதும் ஆற்றலுள்ளவன். வாழ்வும், மரணமும் அவனது கையில்தான் உள்ளது. எல்லாப் படைப்பினங்களும் அவன் ஆற்றலாலே இயங்குகின்றன. நமது நாவுகள் பேசுபவற்றையும் எமது உறுப்புகள் செய்பவற்றையும் அவன் அறிவான். அது மட்டுமின்றி, நமது உள்ளம் மறைத்து வைப்பதையும் யாரும் அறியாவிடினும் அந்த வல்லவன் அறிவான்.

மனிதனுடைய வாழ்வுக்கு மிகப் பொருத்தமான வகையில் ஒரு தொட்டில் போன்று இப் பூமி அல்லாஹ்வினால் படைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் இவ்வுலகத்தை ஆறு நாட்களில்தான் படைத்தான் என்பதாக அல் குர்ஆனில் கூறுகின்றான், பூமியில் ஆழ் கடல்கள் அமைக்கப்பட்டிருப்பதும், மலைகளை அமைத்து புவிச் சமநிலையை பேணி இருப்பதும் அல்லாஹ்வின் அதிசயமிக்க திட்டங்களாகும். அல்லாஹ் அல் குர்ஆனில், "நாம் பூமியை விரிப்பாகவும், மலைகளை முளைகளாகவும் ஆக்கவில்லையா? (சூறத்துல் நப 6.7) என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் அல்லாஹ் படைத்த இப் பிரமாண்டமான படைப்புக்களை அதனதன் அளவுப்படி படைத்தான். உயர்தரமான படைப்பாக மனித வர்க்கத்தைப் படைத்து மனிதவர்க்கத்திற்குத் தேவையான அனைத்தையும் அவன் வழங்கியுள்ளான் அவனே. எல்லாப் பொருட்களையும் அதன் அதன் அளவுப்படி அமைத்தான். (புர்க்கான் - 02)

-றஸீன் றஸ்மீன், றஹ்மத்புரம்.

---

### கவிதைப் போட்டி இல.595




பரிசுக்குரிய கவிதை

#### கோரிக்கை

இந்தக்
கடல் கொந்தளிப்பின்
கோரக் காட்சிகளைக்
காணாமலிருக்க
ஆண்டவன் - என்
கால்களுக்குப் பதிலாய்
கண்களையே
பறித்திருக்கலாம்.

–எம்.அல்–அப்ஸர்,
ஏறாவூர் – 03.

## கவிதைப் போட்டி இல.598



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 26.01.2005

கவிதைப் போட்டி இல.598
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

#### வறுமையின் பிடியில்.....

எனக்கு மட்டுமா இந்த நிலைமை?
இதை விதியென்றா நினைக்கிறீர்கள்?
இல்லை! வாழ்க்கைப் போராட்டத்தில்
வறுமைக் கோட்டுக்குள்
தள்ளப்பட்டவர்களின் கருவில்
இருந்து பிறக்கும் ஒவ்வொருவருடைய
நிலைமையும் இதுதான்.

–ஆர்.ராஜபுலேந்திரன், கந்தகெதர.

#### யாரறிவார்?

உறவுகளின்
உயிர்களை
சூறையாடிய
சுனாமியே!
ஊனமான
என்னை மட்டும்
விட்டு வைத்த
சூட்சுமம்,
என்னவோ.

–சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

#### தடியும் தாயகமும்....!

வெடி நட்டவர் வேகம்
கொடி ஏற்ற
மட்டும்தான்....
விடி காலை ஒரு தாயகம்
விளங்கவில்லை எனக்கு...
தடி அளித்த வாழ்வைக்
கூட
அந்தத் தாயகம்
தரவில்லை
எமக்கு....!

–எஸ்.ஹனா, வவுனியா.

#### தஞ்சமடையுமிடம்

கவலைப்படாதே
கண்ணீர்
சிந்தாதே
ஊனம் என்று
ஏக்கம்
கொள்ளாதே
ஊன்று கோலில்
உனது
பயணம்
உறங்குமிடத்தில்
ஞானத் தியானம்.

–காமீம்
செய்னுலாப்தீன்,
கிண்ணியா – 05.

#### விட்டுச் சென்றதோ?

தாயையும் தந்தையையும்
காவிச் சென்ற சுனாமிக் கடலலை

ஊனமுற்றவன் என்பதற்காய்
இவனை மட்டும்
விட்டுச் சென்றதோ...?

–மீராமுகைதீன் ஹாலீத்,
ஏறாவூர் – 03.

#### எங்கேயடா செல்வது?

யுத்தத்தின் சோகமா?
சுனாமியின் தாக்கமா?
செல்வது எங்கேயடா?
செ(த்த)ன்றவர்களைத் தேடியா?

–ஆர்.தியாகராஜா,
பொகவந்தலாவ.

#### வியக்க வைத்தான்

சுனாமி அலை அடித்தபோது
கடற்கரையோரம் சிக்கினேன்
அசையாப் பொருட்கள் பறந்தன.
ஊனமுடைய என்னையும்
என் ஊன்று கோலையும்
மாபெரியோன் பாதுகாத்தான்.
ஊனத்தைப் பற்றிச்
சிந்திக்க வைத்தவன்
அனர்த்தத்தின் பின்
என்ன வியக்க வைத்தான்.

–அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.

#### தன்னம்பிக்கை

வாழ்க்கை வாழ்வதற்கே
என்று எண்ணி
வாழ்க்கை என்னும்
புயலுக்கு மையமாக
நிற்கின்றானே சிறுவன்

–கு.பாலரூபன், வவுனியா.

#### குறையிலும் நன்மை

கால் வலிமையுள்ளோர்
கடற்கோள் காண ஓடி
கடலலையில் மூழ்கி மடிய
கால் வலிமையற்ற நீ மட்டும்
ஓட முடியாததால்
உயிர் பிழைத்தாய்
குறையிலும் உண்டு நன்மை
உணர்ந்து கொள்.

–அ.சந்தியாகோ, கண்டி.

#### கலக்கிடாது...

வெள்ளத்தால்
வீழ்ந்தாலும்,
வெந்தணலால்
வெந்தாலும்
கள்ளமற்ற
உள்ளத்தைக்
கலக்கிடாது
கால் ஊனம்!

-நா.ஜெயபாலன், பிபிலை.




## உங்கள் பக்கம்

### பாதையின் அவலநிலை

கொழும்பு - 15, மட்டக்குளி விஸ்ட்வைக் வீதி 'ரெப்பானா'வுக்கு முன்னால் ஒரு வருடத்திற்கு மேலாகப் பாதை திருத்தப்படாமல் உள்ளது. பாதையில் பாரிய குழி, தண்ணீர் நிறைந்து குளம் போல் காட்சியளிக்கின்றது. பாதைக்கு அடியில் நீர்க் குழாய்கள் உடைந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நீர் விநியோக சபையால் இரண்டு மூன்று முறை திருத்தப்பட்டும் சரியாகவில்லை. காரணம் உரிய முறையில் திருத்தப்படாமையே. நன்றாகப் பழக்கப்பட்டவர்களைத் திருத்த வேலையில் ஈடுபடுத்திச் செய்யவேண்டும். இதனால் வீதியில் செல்பவர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். வாகனங்கள் செல்லும்போது சேற்று நீரால் உடைகள் வீணாகின்றன. இதனால் செல்லும் பயணங்கள்கூட தடைப்படுகின்றன. வாகனங்களும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பாதையைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனம் எடுக்குமாறு பொதுமக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

ஏ.எஸ்.எம்.ரவூப்,
மட்டக்குளி, கொழும்பு - 15.

## வாசக[ர்] சாலை

#### முரசே!

மலர் மொட்டு மனம் விட்டு
மலரும் முரசில் பட்டு
இதைத் தொட்டு
எழுதுவது கவி மெட்டு
முரசே நீ சுமந்து வரும்
விடயங்கள் அனைத்தும் என்னை
மட்டுமல்ல இந்தப் பாலைவனத்தில்
வாழும் உன் வாசகர்களாகிய
பல்லாயிரக்கணக்கான
வாசகர்களின் மனதில் குளிரூட்டிச்
செல்லும் உனக்கு என்
சார்பாகவும் உன் இரசிகர்களின்
சார்பாகவும் பல கோடி நன்றிகள்.
அத்தோடு முரசின் ஆசிரியர்
அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த
நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

–ரி.என்.ராசாத்தி, லெபனான்.

#### ஊடகத்தின் பண்பு

கடந்த 26.12.200இல் சுனாமியின் அவலங்கள் ஏற்படுத்திய பரிதாப படங்களை 596ஆவது முரசில் முற்பக்கத்திலும் இறுதிப்பக்கத்திலும் வெளியிட்டு இதன் ஏனைய பக்கங்களிலும் இவ்வனர்த்தத்திற்கு அனுதாபம் தெரிவித்தது அதன் ஆசியர் குழு வாசகர்களுக்கு வழங்கிய வசனங்கள் முரசின் முழு வெளிப்பாடு மட்டுமல்ல இதுவே ஊடகத்திற்குரிய உயரிய பண்பு.

எம்.சி.கலீல்,
கல்முனை –05.

#### மதிப்பிற்குரிய!

தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு!
வணக்கம். நான் தினமுரசுப் பத்திரிகையின் நீண்ட நாள் வாசகன். தினமுரசு சுமந்து வரும் ஆக்கங்கள் அருமையிலும் அருமை. வாரப் பத்திரிகையில் தினமுரசு பத்திரிகைக்கே மலையகப் பகுதிகளில் வரவேற்பு அதிகம். எந்தவொரு செய்தியையும் எவருக்கும் அஞ்சாது வெளியிடும் துணிச்சல் இப் பத்திரிகைக்கு உள்ளது. இது குறித்து இப் பத்திரிகையைப் பாராட்டாமல் இருக்கவே முடியாது.

எஸ்.ஏ.நேசன், கண்டி.

வியாழன் தோறும் - என்
வானம் விடிய
வீடு வரும் நண்பனே
வீறு கொண்ட - உன்
அரசியல் விமர்சனம்
சினிமா, சிறுகதை
என எல்லாம்
எனக்கு வெல்லம்
எண்ணங்கள் உன்னில்
அரங்கேறும் தேன்
கிண்ணம் யாவுடன்
வாழ்க உன் நட்பின்
வழிப் பயணம்
ஆயிரம் ஆயிரம்
நட்புள்ளங்களுடன்.

ரவிகாந்தன் (மதி),
நிலாவெளி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை முன்னெடுக்க முத்தரப்புக் கமிட்டிகள் தேவை

## -கனடிய அதிகாரி கருத்து

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இலங்கை அரசாங்கம் போதியளவு நிவாரண உதவிகளை அனுப்பி வைக்கத் தயங்குகிறதென்றும் இப் பகுதிகளுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாகவும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட வேண்டுமென்கிறார் கனடிய நிவாரணப் பணி அதிகாரியான பீட்டர் றோஜர்ஸ். இதற்காக இலங்கை அரசு, புலிகள் இயக்கம் மற்றும் சர்வதேசத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளடங்கிய முத்தரப்புக் கமிட்டிகள் நிறுவப்பட வேண்டுமென்று அவர் யோசனை தெரிவித்துள்ளார். "இயற்கை அனர்த்தம், மனிதனால் உருவாக்கப்பட்ட இன, மத, மொழி மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதி எல்லைகளைப் பார்த்துக் குறிவைத்துத் தாக்கவில்லை. சகலரையும் பாரபட்சமின்றிப் பாதித்துள்ளது. இந்த நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களும் அப்பாவிகளே! எனவே தமிழ்ச்செல்வன் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு இருக்கக்கூடிய ஒரேயொரு வழி இவ்வாறான முத்தரப்புக் கமிட்டிகளை உருவாக்குவதே எனத் தெரிவித்தார் றோஜர்ஸ்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் பன்முகப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதே. இப் பணிகளைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசாங்கம் உரிய முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாமைக்குப் பல நியாயமான காரணங்களும் இருக்கவே செய்கின்றன. அரசாங்கத்தின் நிவாரணப் பணியாளர்களோ அல்லது சர்வதேச மற்றும் உள்நாட்டுப் புனர்வாழ்வுப் புனரமைப்புப் பணியாளர்களோ புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அவர்களின் அனுமதியின்றி உட்செல்ல முடியாத நிலையிருக்கிறது. அரசாங்கப் பணியாளர்களை மட்டுமல்ல பல வெளிநாட்டு, உள்நாட்டுத் தொண்டர் களையும் புலிகள் உளவாளிகளென்ற சந்தேகக் கண்களுடனேயே பார்க்கின்றனர். அரசின் சமாதானச் செயலகம் ஊடாகவும் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு ஊடாகவும் வேறு சில மார்க்கங்களினூடாகவும் வன்னிப் பகுதிக்கு நிவாரணப் பொருட் கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனவென்று அரச தரப்பில் தெரிவிக்கபடுகிறது. இன்னமும் யுத்த முனைப்பைக் காட்டும் பல நாடுகளின் பயங்கரவாதப் பட்டியலில் இடம் பெற்றுள்ள - ஒரு போராட்ட அமைப்பிடம் வகை தொகையின்றி அரசு நிதிகளைக் கையளிக்க முடியாதென்பது நியாயமானதே. தமிழ் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்திலாவது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையென்ற தமது விட்டுக்கொடுக்காத யோசனையைப் புலிகள் கைவிட்டு, அந்த மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இவ்வாறான முத்தரப்புக் கமிட்டிகளை உருவாக்குவதே சாலச் சிறந்தது" என்றும் அவர் கூறினார்.

## அநாதைகளான குழந்தைகளைத் தத்தெடுக்க 2,065 விண்ணப்பங்கள்

கடற் கொந்தளிப்பினால் பெற்றோர்களை இழந்து அநாதைகளாகியுள்ள குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு இதுவரை 2,065 விண்ணப்பங்கள் செய்யப்பட்டுள்ளதாக சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்தார். பெற்றோரை இழந்த குழந்தைகளின் தொகையை விடத் தத்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் மிக அதிகமாகவிருப்பதாகவும் அவர் கூறினார். "பாதிக்கப்பட்ட குழந்தைகளை அவசரப்பட்டுத் தத்தெடுப்பது தவறானது. இக் குழந்தைகளை அவர்களின் சமூக மற்றும் குடும்பச் சூழலில் அவர்களின் நெருங்கிய உறவினர்களுடன் வாழ அனுமதிப்பதே சரியானதாகும். ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்குப் பின்னரே பிள்ளைகளைச் சுவீகாரம் செய்வது பற்றிச் சிந்திக்க வேண்டும்" என்று தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபையின் தலைவரான பேராசிரியர் ஹரேந்திர டீ சில்வா தெரிவிக்கிறார். "பிள்ளைகளைத் தத்தெடுப்பதென்ற போர்வையில் இப் பேரழிவைப் பயன்படுத்தி அவர்களைக் கடத்திச் சென்று அடிமைகளாக வேலை வாங்குவதற்கும், பாலியல் தொழிலாளர்களாகப் பயன்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன" என்று சிறுவர்களின் நலன் பேணும் போராளியான அருண் தம்பு கூறுகிறார்.

## மிருகங்களுக்கு மீள்குடியேற்றம்

கடல் பேரலைகளின் தாக்குதலிலிருந்து உயிர் தப்பி வேறிடங்களுக்கு ஓடிச்சென்று தஞ்சம் புகுந்த யால வனவிலங்குச் சரணாலயத்தைச் சேர்ந்த மிருகங்கள் இப்போது தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரத் தொடங்கியுள்ளன என்று குறிப்பிட்டார் சரணாலயப் பாதுகாப்பு அதிகாரியான வோல்டர் பெரேரா. "யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றப் பணிகளுக்கு எவ்வளவோ தடைகள் ஏற்பட்டவண்ணமேயுள்ளன. இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இதே நிலைதான். ஆனால் மிருகங்களுக்கு மட்டும் மீள்குடியேற்றம் சர்வசாதாரணமானது" என்கிறார் அவர்.

## கனடாவில் தமிழ் கோஷ்டிகள் மோதல் கோண்டாவில் இளைஞர் பலி

கனடா ஸ்காபுறோ நகரில் தமிழ் இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். யாழ். கோண்டாவிலைச் சேர்ந்த தனுசன் ஜெயக்குமரன் வயது (18) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

ஸ்காபுறோ நகரிலுள்ள தமிழர் ஒருவரின் வர்த்தக நிலையத்தில் பணிபுரிந்து வந்த தனுசன், கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஒன்பது மணிபோல் கடைக்குள் வந்த இரு தமிழ் இளைஞர்களால் வெளியே அழைக்கப்பட்டு, கடைவாசலில் வைத்துக் கத்தியால் குத்தப்பட்டார். பின்னர் காரொன்றில் கடத்தப்பட்டு இவர் பூங்கா ஒன்றினுள் கொண்டு செல்லப்பட்டுப் போடப்பட்டார். தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் பூங்காவில் கொலையாளிகளின் காரையும் தனுசனின் குற்றுயிராகக் கிடந்த உடலையும் கண்டுபிடித்தனர். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் அவர் உயிர்பிழைக்கவில்லை. அந்த இடத்திலேயே வைத்து ஜீவன் அற்புதராஜா (20), பிராங்களின் நேசராஜா (21) என்ற இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர். மூவரைத் தேடி வருகிறார்கள்.

தனுசன் 2000ஆம் ஆண்டு கனடாவிற்கு வந்தவர் என்றும் இலங்கையில் இருக்கும் பெற்றோரை கனடாவிற்கு ஸ்பொன்சர் செய்து அழைப்பதற்காக கடுமையாக வேலை செய்து வந்தவர் என்றும் கோஷ்டி மோதலொன்றிற்கு சாட்சியாக இருந்தார் என்றும் இதனால் ஒரு கோஷ்டியினால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் எனவும் தெரியவருகிறது.

## கனடாவில் புலிகளுக்காக நிதி சேகரிக்க முடியாது

"சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவே புலிகள் இயக்கத்தைக் கனடாவில் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்க வில்லையென்றபோதிலும், புலிகளுக்காக நிதி சேகரிப்பதை அனுமதிப்பதில்லையென்ற கொள்கையை நாம் உறுதியாகப் பின்பற்றி வருகிறோம்" என்று கனடியப் பிரதமர் போல் மார்ட்டின் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில் தெரிவித்தார். "சமாதான முன்னெடுப்புகளைப் பாதிக்கும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டாமென்று நாம் சகல தரப்பினராலும் கேட்கப்பட்டுள்ளோம்" என்றும் அவர் கூறினார்.

## தமிழ்ச்செல்வனின் கண்டனத்துக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் மறுப்பு

"சர்வதேச உதவிகள் தமிழர் பிரதேசத்துக்குக் கிட்டவில்லை, நம்பிக்கையான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடவில்லை" என்று வன்னிக்குச் சென்ற உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் ஜேம்ஸ் மொரிஸைச் சந்தித்துப் பேசிய பின்னர் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் புலிகளின் நலன்புரி முகவர் அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கே.பி.ரெஜி, இதற்கு நேரெதிரான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானைச் சந்தித்துப் பேசிய பின்னரே ரெஜி, அரசைப் பாராட்டும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முழுமையாகக் கடமையாற்ற முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. இருப்பினும் சில தடைகள் எமக்கு இருக்கின்றன. இதற்காக அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்ட முடியாது. அரசாங்க அதிபர்களுடன் கலந்தாலோசித்து, அவர்கள் அடையாளம் காட்டும் பகுதிகளில் அவர்களின் வழிகாட்டலுடனேயே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கடமையாற்றுகிறோம். சர்வதேச சமூகம் நேரடியாக எமக்கு உதவி செய்கிறது. உலக உணவுத் திட்டத்தின் கீழ் அகதி முகாம்களுக்கு நிவாரண உதவிகள் கிடைக்கின்றன" என்கிறார் ரெஜி. ஆனால், தமிழ்ச்செல்வன்

"தற்போது அரசாங்க அதிபர்கள் ஊடாக ஓரளவு நிவாரணப் பொருட்களும் உதவிகளும் வந்து சேருகின்றனவே தவிர, சர்வதேச சமூகம் இலங்கைக்கு அளித்துவரும் பாரிய உதவிகள் எவையும் தமிழர் தாயகப் பிரதேசத்துக்குத் திருப்பப்பட்டதாகவோ அல்லது பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகள் ஆக்கபூர்வமான முறையில் செய்யப்பட்டதாகவோ இதுவரை எங்களுக்குத் தெரியவில்லை" என்கிறார். தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கூறுவதையே தமிழ்ச்செல்வன் மறுக்கிறார்.

## ஈழவேந்தன் அல்லர்

மணல்காட்டுப் பேரழிவைப் பயன்படுத்தி கனடியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்த கொழும்பு, கறுவாக்காட்டு வாசியான கனகேந்திரன் என்பவர் ஈழவேந்தனாவென்று கேள்வி எழுப்பப்படுகிறது. முன்னாள் மத்திய வங்கி ஊழியரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் எம்.பி.யான ஈழவேந்தனின் இயற்பெயரும் கனகேந்திரன் தான். எழுபது வயதைத் தாண்டவிட்ட இவர், கொழும்பில் வேறு இடத்தில் வாழ்ந்தாலும் இவரின் புதல்விகள் இருவரும் பத்தாண்டுகளுக்கு மேலாகச் சென்னையில் வாழ்கிறார்களென்பது குறிப்பிடத் தக்கது.

## நோர்வேயின் சந்திப்புக்கு எதிர்ப்பு

இலங்கைக்கு வந்துள்ள நோர்வே தூதுக்குழுவினர் வன்னி சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கக் கூடாதென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் முழு நாடுமே ஈடுபடுத்தப்பட்டிருக்கும் இத் தருணத்தில் பிரபாகரனைச் சந்திக்க வேண்டிய தேவையெதுவும் கிடையாதென அவ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதற்கிடையில் இலங்கை அரசின் சமாதான செயலகம், நிவாரணப் பணிகள் பற்றி ஆராய்வதற்காகவே நோர்வே குழு வருகை தருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

## சம்பந்தனைச் சாடுகிறார் சங்கரி

"வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 31 பிரதிநிதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்கின்றார்கள். எம்மவர்கள் மட்டும் தமது கடமையைச் செய்யாது யார் யாரையோ திட்டித் தீர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். உடனடியாக வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து தமது பங்களிப்பைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் எதிர்கால சந்ததி. எம் எல்லோரையும் சபிக்கும் என்பதையும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாம் செய்யும் துரோகம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கரையோரப் பகுதிகளிலும் நிவாரணப் பணியினை மேற்கொள்ள வந்திருப்பவர்கள் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பினை பெற்றுக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## சங்கரி அனுதாபம்

"அரசியல் வாழ்வில் உறுதியான நிலைப்பாட்டினை எடுத்த ஈழத்து நாதனின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## நிவாரணம் கையளிப்பு

வரையறுக்கப்பட்ட கல்விசார் ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடனுதவிகள் வழங்கும் சங்க ஊழியர்களின் ஒருநாள் ஊதியம் மற்றும் பணிப்பாளர் சபையினது பங்களிப்புகள் என்பவற்றால் சேகரிக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதியில், கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அரிசி, குழந்தைகளுக்கான பால்மா போன்ற நிவாரணப் பொருட்கள் கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கையளிக்கப்பட்டன. கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக இச் சங்கம் ஐந்து கோடி ரூபாவுக்கான நிதியம் ஒன்றையும் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஆலோசனையின் பேரில் ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

## பாரிய இழப்புகளும் பணிகளும்

வடக்கு, கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மட்டுமல்ல அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போது 5,500 தொண்டர்களை நிவாரண மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடுத்தியிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.ரெஜி தெரிவித்தார். சுனாமி அலை தாக்கிய உடனேயே தாம் சுமார் பத்தாயிரம் பேரை மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தியதாகவும் அவர் கூறினார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட கடற் புலிகள் மரணமானதாகச் செய்திகள் வெளிவந்த அதேவேளை, பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

## சமரச முயற்சிகள்

சுய இலாபம் தேடுவதற்காகச் சுனாமிப் பிணங்களின் மேலாக அரசியல் நடத்த மாட்டேனென்று ஐ.தே.க.வின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா தெரிவித்த கருத்தினால் ஐ.தே.க.வுக்குள் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. டாக்டர் ராஜி சேனரட் னவுக்கும், கரு ஜெயசூரியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்தச் சர்ச்சையால் கட்சி பிளவுபடுவதைத் தடுப்பதற்காக சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரு தரப்பினரையும் அழைத்துப் பேசவுள்ளாரென்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# முரசம்

## அறிக்கைகளை விலக்கி செயற்பாட்டுக்கு இடங்கொடுங்கள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

சுனாமிப் பேரழிவிலிருந்து உயிர் தப்பிய மக்களுக்கு மீள்வாழ்வளிப்பது என்பது எல்லோராலும் இணங்கப்பட்ட முடிவுதான். இப்போது தேவையானது பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும், வாழ்க்கை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்வதும் மட்டுமே. உதவுங்கள் என்று உரத்துக் கூறுபவர்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து போய் மக்கள் நேரடியாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளைப் பக்க சார்பற்று இனங்காண்பதும் அதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்குவதும்தான்.

நினைத்ததற்கு மேலதிகமாகவே தொண்டர்களும், மருத்துவர்களும் மீட்புப் பணியில் உதவீ வருவது குறிப்பிடத் தக்கதாக உள்ளபோதும் இன்னும் இத் தேவை நிறையவே உள்ளது.

மீண்டுமொரு இயற்கை அனர்த்தத்திலிருந்தும் அவ்வப்போது விரட்டிக்கொண்டிருக்கும் யுத்த அரக்கனிடமிருந்தும் மக்களைக் காப்பதற்கு இரு வகையான தூர நோக்குத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

முன்னையது ஓரளவு சுலபம் - பின்னையது கடினம். ஆனால் பின்னையதைச் செய்வது காலத்துக்கு ஏற்றது. சுனாமிப் பேரழிவுக்குள் விளம்பரம் தேடியவர்கள் இதற்கு முன்வருவார்களா? வானொலியிலும், தொலைக்காட்சியிலும் திடீர் திடீரென்று தோன்றி சமாதானம் என்றும் நிவாரணம் என்றும் விளம்பரம் தேடியவர்கள் அதிகம் பேர். இப்போது அவர்கள் எங்கே என வலை வீசித் தேடுங்கள். மாட்டவே மாட்டார்கள். அவர்களை மீண்டும் காண்பதற்கு இன்னொரு சுனாமியோ பேச்சுவார்த்தையோ வர வேண்டும். காலத்துக்குக் காலம் மக்கள் முன் தோன்றி வாய் வீரம் பேசுவதும் இறுதி முடிவுகள் குறித்து மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரிக்கின்றபோது ஓடி ஒழிந்து கொள்வதுமான போக்குடைய இவர்களைப் பற்றி அப்போதே சுட்டிக்காட்டி இருந்தோம்.

'முரசு' வாசகர்கள் இதை அறிவார்கள். எனவே, உதவீகள் வந்து சேரவில்லை; பாரபட்சம் காட்டப்படுகின்றது என்று அறிக்கை விட்டுக்கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை.

பொது இணக்கப்பாட்டிற்கு முன்வருவதும் பணிகளில் பங்கெடுப்பதுமே அவசியமாகும். ஜனாதிபதி சந்திரிகாவும், புலிகளின் தலைவர் பிரபாகரனும் ஒரே விதமான வேண்டுகோளையே விடுத்துள்ளனர். வெறும் வாய்வீச்சில் இல்லாமல் இவ்வேண்டுகோள்கள் செயல் வடிவம் பெற வேண்டும் என்பது முக்கியத்துவம் பெறுகிறது. வேண்டுகோளும் - எண்ணமும் ஒரு நேர் கோட்டிலிருப்பது உண்மையென்றால் முரண்பாடுகள் எங்கிருந்து வெடிக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும்.

இது பாதிக்கப்பட்ட மக்களைப் பழைய வாழ்க்கைக்குக் கொண்டுவர மட்டுமல்ல, புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வொன்றைக் காணவும் உதவும்.

அரசும் - புலிகளும் நேர்கோட்டில் வருவதை விரும்பாத சில அரசியல் சக்திகள் கறுப்புத் துணி போர்த்திக்கொண்டு திரிவதை இனங்காண்பது அவசியம். அதேவேளை, புலிகளும் மனித உரிமைகளையும் ஜனநாயக விழுமியங்களையும் மதித்துச் செயலாற்ற முன்வருவது சமாதான முயற்சிகளுக்கு இன்னும் வலுச் சேர்க்கும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பாதிக்கப்பட்ட பகுதிகளும் புனர்நிர்மாணப் பணிகளும்

சுமார் பதினான்கு நாடுகளைத் தாக்கிய சுனாமிக் கடலலைகளால் இலங்கையில் பதினான்கு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் பேசும் மக்கள் பரந்தும் செறிந்தும் வாழும் வடக்கு, கிழக்கு உட்படத் தென்பகுதிகளையும் மிக மோசமாகப் பாதித்த இப் பேரழிவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை நாற்பதாயிரத்தைத் தாண்டலாமென்று பிந்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கிட்டத்தட்ட வீடு வாசல்களை இழந்தவர்களின் எண்ணிக்கையும் எட்டு இலட்சம் பேரை எட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணமே பேரலைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டபோதிலும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களே அதிகமான உயிரிழப்புகளையும் பாதிப்புகளையும் சந்தித்திருக்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வன்னியிலும் வடமராட்சி கிழக்கிலும் கூடப் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகளைப் பொறுத்தவரை இந்தோனேஷியாவுக்கு அடுத்தபடியாக இலங்கையே கூடிய அழிவுகளைச் சந்தித்த நாடாக இருக்கிறது. இதன் எதிரொலியாகப் பல்வேறு உலக நாடுகளும் சர்வதேசத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களும் தாராளமாகவே இலங்கைக்கு உதவத் தொடங்கியுள்ளன. தொடர்ந்தும் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக உதவிகள் வழங்கப்படுமென்றும் உறுதியளித்துள்ளன.



பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவியளிக்கவெனக் கூட்டப்பட்ட உலக மாநாட்டில் மேலும் உதவிகள் வழங்கப்படுமென்று உறுதியளிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சர்வதேசக் கடன்களை அறவிடுவதிலும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இலங்கையின் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துவதற்காக அரசாங்கம் குறுகியகால துரித நடவடிக்கைகளையும் நீண்டகால நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. அரசாங்கம் அனர்த்த முகாமைத்துவக் குழுவையும் மூன்று செயலணிக் குழுக்களையும் உருவாக்கியுள்ளது. நிவாரணப் பணிகளில் அரசாங்கம் படைவீரர்களைப் பயன்படுத்தக் கூடாதென்றும் நிவாரணப் பணிகள் பன்முகப்படுத்தப்பட வேண்டுமென்றும் தமிழர் தரப்புகளிலிருந்து கருத்துகள் உக்கிரமாகத் தெரிவிக்கப்படுகின்றன. இதேவேளை புனரமைப்புப் பணிகளில் இந்திய, அமெரிக்கப் படைகள் ஈடுபடுத்தப்பட்டமை குறித்தும் புலிச்சார்புத் தமிழ் ஊடகங்களும் புலிகளின் முகவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கூட விமர்சனங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் இரண்டாயிரம் அமெரிக்கக் கடற்படை வீரர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்படுனரென்று கூறப்பட்டபோதிலும் தற்போது அறுநூறு அமெரிக்க வீரர்களே இங்கு தங்கியுள்ளனர். மொத்தத்தில் 1500 பன்னாட்டுப் படைவீரர்களே தற்போது இங்கு தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கப் படை வீரர்களின் பிரசன்னத்தை இந்தியா வெளிப்படையாக எதிர்க்கவில்லையென்றபோதிலும் சிறிதளவாவது அதிருப்தியுற்றிருக்கும் என்பதை மறுக்க முடியாது. இலங்கையில் அமெரிக்கப் படை வீரர்களின் பிரசன்னம் பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங்கிடம் 'அவுட் லுக்' என்ற சஞ்சிகையின் நிருபர் கேட்டபோது, "இலங்கையில் அமெரிக்காவில் செயற்பாடுகள் கலந்துரையாடலின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன" என்று பட்டும் படாமலும் பதிலளித்துள்ளார். "இலங்கையில் ஏற்பட்டுள்ள பேரழிவுகளைக் கவனத்தில் கொண்டு பார்க்கையில், பாரியளவு உத்விகள் தேவைப்படுகின்றன. நிவாரணங்களை வழங்குவதற்காக இந்தியர்கள் ஓரளவு கூடிய அளவில் அங்குள்ளனர். இந்த முயற்சிக்குத் தம்மால் பங்களிக்க முடியுமென்று அமெரிக்கா நம்பினால் அவர்கள் தாராளமாக வரவேற்கப்படுகிறார்கள்'' என்று நட்வார்சிங் தெரிவித்துள்ளார். இலங்கையில் அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கையும் இங்கு அவர்கள் தங்கியிருக்கும் காலப் பகுதியும் கணிசமாகக் குறைக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

இலங்கையில் நிவாரணப் பணிகளுக்கென வந்திருக்கும் பெல்ஜியம் மற்றும் ஏனைய நாட்டுப் படைகளின் பிரசன்னம் பற்றிக் கேள்வி எழுப்பாத உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களும் அரசியல் சக்திகளும் அமெரிக்க, இந்தியப் படைகளின் விஜயம் பற்றிக் கேள்வி எழுப்புவதற்கு அரசியல், இராணுவ நலன்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இத்தாலி அரசாங்கம் நேரடியாகவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளமையை இலங்கை அரசாங்கம் கண்டித்துள்ளது. இதனால் பல நாடுகள் நேரடியாக உதவிகளையோ நிவாரணங்களையோ புலிகளுக்கு அனுப்பப் போவதில்லை. வெகு சில வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பணியாற்றுவதாகக் கூறப்படுகின்றபோதிலும் அரசாங்கமோ புலிகளோ கட்டுப்பாடற்ற செயற்பாடுகளை அனுமதிக்கப் போவதில்லை. புலிகளைப் பொறுத்தவரையில் நேரடியாக சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் தமது இயக்கத்துக்கு சட்டரீதியான சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுவிட முடியுமென்று நினைக்கின்றனர். மறுமுனையில் சட்டரீதியான அரசாங்கமொன்று இருக்கும் அதேவேளையில் இலங்கையின் ஐக்கியத்துக்கும் இறைமைக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் கட்டுப்பாட்டுப் பகுதிகளை வைத்திருக்கும் புலிகளுடன் எந்த நாடும் தொடர்புகளை வைத்திருக்க அனுமதிக்க முடியாதென்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது. இதனைத் தவறென்று நாம் கூறிவிட முடியாது. புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான இந்த இழுபறி நிலைக்கு ஏதாவதொரு வகையில் சமரசம் மேற்கொள்ளப் பட்டு நிவாரணமும், புனரமைப்புப் பணிகளும் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சென்றடைவதற் கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

**நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியில் நாட்டி லுள்ள சகல கட்சிகளுமே ஐக்கியப்பட்டு நிற்பதாக ஒரு வெளித் தோற்றப்பாடு காட்டப்பட்டாலும் உண்மை அதுவல்ல. புலிகளைப் போன்று நீருக்கு அடியில் நெருப்பைக் கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுனாமி அனர்த்தத்தையடுத்துப் பாதிக்கப்பட்ட மாத்தறைப் பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே முதலில் சென்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்குப் பிராந்தியம் அது.**



புலிகளின் நலன்புரி முகவர் அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு வெளிநாட்டு உதவிகளும் கிடைத்துள்ளன. அரசும் பல்வேறு வழிகளூடாக நிவாரணப் பொருட்களைப் புலிப் பகுதிகளுக்கு அனுப்பி வருகிறதென்று அரச தரப்பில் கூறப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தன்னார்வத் தொண்டர் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.





நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியில் நாட்டிலுள்ள சகல கட்சிகளுமே ஐக்கியப்பட்டு நிற்பதாக ஒரு வெளித் தோற்றப்பாடு காட்டப்பட்டாலும் உண்மை அதுவல்ல. புலிகளைப் போன்று நீருக்கு அடியில் நெருப்பைக் கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுனாமி அனர்த்தத்தையடுத்துப் பாதிக்கப்பட்ட மாத்தறைப் பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே முதலில் சென்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செல்வாக்குப் பிராந்தியம் அது. ரணிலின் விஜயத்தையடுத்து ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாகவே வெளியிட்ட அறிக்கையில், பாதிக்கப்பட்ட தென்பகுதிக்கு முதலில் சென்ற அரசியல்வாதி ரணிலேயென்று மார்தட்டிக்கொண்டோருக்குப் பின்னால், சோகத்தை முதலீடாக்கிப் பிரசாரம் செய்யும் தந்திரோபாயம் தென்படவில்லையா?

லண்டனில் பௌத்த விகாரையொன்றினை மையமாக வைத்து நிவாரணப் பொருட்களும் நிதிகளும் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காகச் சேகரிக்கப்படும் அதேவேளை, இலங்கை கிரிக்கெட் அமைப்பினால் உலக தரிசன இயக்கம் என்ற கிறிஸ்தவ அமைப்பினூடாக நிவாரணத்துக்கென நிதியுதவி வழங்கப்பட்டமையை ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த கட்சியும் ஜே.வி.பி.யும் காரசாரமாகக் கண்டித்துள்ளன. இந்த உதவிகளைப் பயன்படுத்தி உலக தரிசன இயக்கம் மதப் பிரசாரங்களை மேற்கொள்ளலாமென்று எழுப்பப்படும் அச்சத்தையும் நாம் தட்டிக்கழித்துவிட முடியாது.

பேரழிவினால் பாதிப்புற்ற சகல பகுதிகளிலுமுள்ள இலங்கை வாழ் மக்களுக்கு நிபந்தனையின்றித் தாராளமாக உதவி வழங்கும் நாடுகள், நீண்ட காலப் புனரமைப்புத் திட்டங்களுக்குத் தொடர்ந்தும் நிபந்தனையின்றி அள்ளி வழங்குமா என்பது சந்தேகமே. டோக்கியோவில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் புலிகளும் அரசும் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் திரும்பினாலே 4500 கோடிரூபா வழங்கப்படுமென்று நிபந்தனை விதிக்கப்பட்டமையை இங்கு சுட்டிக்காட்டலாம். இதனால்தான் ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது, "அடுத்த முறை, சமாதானம் நிலவும் இலங்கைக்கு விஜயம் செய்து சகல பகுதிகளுக்கும் செல்வேன்'' என்று கூறினாரோ தெரியவில்லை. ■

# இயல்பு வாழ்வுக்காக எதிர்நோக்க வேண்டிய சவால்கள்

சுனாமிப் பேரலையினால் பெருந் தாக்கத்திற்கு இலக்கான மக்கள் உறவுகளை, உடைமைகளை இழந்து நிர்க்கதியான நிலையில் நலன்புரி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களில் சிலர் தற்போது பழைய இடங்களுக்கு திரும்பியுள்ளனர். இவ்வாறு பழைய இடம் திரும்புவர்களின் வீடுகள் பெரிய பாதிப்புகளை சந்திக்காத நிலையிலேயே இது நடைபெறுகிறது. ஏனையவர்கள் இன்னும் நலன்புரி முகாம்களில் வசித்து வருகின்றனர். நலன்புரி முகாம்கள் எனப்படும்போது அது பாடசாலையாகவோ பொதுக் கட்டடமாகவோ, உறவினர் வீடுகளாகவோதான் இருக்கின்றன. இப்படி இருக்கும்போது பெண்கள், சிறுவர், சிறுமிகள் மீது புரியப்படுகின்ற துஷ்பிரயோகங்கள், சமூகச் சீரழிவுக்கு வழி வகுக்கின்றன. கூட்டு வாழ்க்கை, உறவுமுறைத் தனிமை, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருப்பது என்பன தவறுகளுக்கு இட்டுச் செல்கின்ற சூழலை உருவாக்கியுள்ளன.

போதிய மலசல கூட வசதியின்மை, திறந்தவெளிக் குளியல்கள் என்பன பல புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதோடு, நோய்த் தொற்றுக்கும் வாய்ப்பாக அமைகிறது. இப்போது போதைப் பொருட்களின் விற்பனையும் முகாம் மக்களை அச்சுறுத்துவதாக விஷ்வரூபம் எடுத்துள்ளது. மறுபுறத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களைக் கடத்துகின்ற சம்பவங்களும் அன்றாடம் நடைபெறத் தொடங்கியுள்ளன. இவ்வகையான பிரச்சினைகள் ஒரு பக்கம் என்றால் மறுபக்கம் நிவாரணப் பொருட்களுக்காகக் காத்திருக்கும் அவலம் பெரும் துன்பமானது.

## நிவாரண விநியோகம்

அழிவுகளைச் சந்தித்த மக்களுக்கு உடனடியாக உதவுவதற்கு, பாதிப்புகளுக்கு முகம்கொடுக்காத மக்கள் காட்டிய அக்கறையும் எடுத்துக்கொண்ட பங்களிப்பும் சொல்லிலடங்காதவை. அரச இயந்திரம் செயற்பட ஆரம்பிக்கும் முன்னமே மனிதநேயம் தனது வேலைத்திட்டத்தை செய்யத் தொடங்கியது எனலாம். ஆனால் இப்போதோ நிலைமை மாறிப்போயிருக்கிறது. தொண்டு நிறுவனங்கள் தமது பணியைத் திட்டமிட்டுச் செய்துவரும் அதே வேளை, அரசு நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான செயற்றிட்டம் ஒன்றை வகுத்து முழு மூச்சில் மீள் கட்டுமானப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் அரசின் இப் பணிகளுக்குப் புலிகளின் ஒரு அங்கமான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடையாக உள்ளது. இந்த ஏட்டிக்குப் போட்டியான நிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. கிராம சேவையாளர்களையும் பிரதேச செயலாளர்களையும் சந்தித்து தமக்கூடாகவே எந்தவொரு வேலைத்திட்டமும் செய்யப்பட வேண்டும் என அச்சுறுத்தும் பாணியில் கூறிவருவதும், நலன்புரி முகாம்களில் மக்களை அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுமாறு வற்புறுத்துவதும், அரசின் நிவாரண நடவடிக்கைகள் ஒழுங்காகக் கிடைப்பதிலில்லை எனப் பிரசாரப்படுத்துவதும் சர்வதேச தொண்டு நிறுவனங்களால் அவதானிக்கப்பட்டு வருகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொண்டு நிறுவனமாக இருந்தால் ஏனைய நிறுவனங்களைப் போலல்லாமல் ஏன் அரசோடு முரண்பட்டுக்கொண்டு, மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணப் பொருட்களின் விநியோகத்திற்குத் தடையாக இருக்க வேண்டும். அரச அதிகாரிகளிடம் போகும் மக்களை மிரட்டுவதும், தம்மிடம் கையளிக்கப்படும் நிவாரணப் பொருட்களைப் பதுக்கி வைத்துக்கொண்டு அடையாளத்திற்காகச் சொற்ப பொருட்களை விநியோகிப்பதும் மக்களை விசனத்திற் குள்ளாக்கியுள்ளது.

நிவாரணம் எனும்போது வெறுமனே உணவுப் பொருட்கள் மட்டுமல்ல. உடை, சமையல் பாத்திரம், படுக்கை, குடிநீர், செலவுக்குப் பணம், இழப்புகளுக்கான நட்ட ஈடு, பாதுகாப்பு என்பன போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இதிலும் பெண்களுக்கான ஆடைகள், உள்ளாடைகள், குழந்தைகளுக்குப் பால்மா, ஆடைகள் என்பனவும் உள்ளடங்குகின்றன. இத்தனைக்காகவும் மக்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் அரசும் த.பு. கழகமும் முட்டிமோதிக்கொள்வதில் மக்களுக்கே பெரிதும் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது.

## நிரந்தர இருப்பிடங்கள்

இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதில் பல பிரச்சினைகள் உள்ளன. தமது காணிகளை அடையாளம் காணுவது, அவை கடலிலிருந்து 500 மீற்றர் தொலைவில் இருக்காவிட்டால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்காக அரசிடம் அனுமதி பெறுவது அல்லது அதைக் கைவிட்டுப் புதிய இடங்களை வழங்கும்படி கோருவது சரியா? தவறா? அப்படிக் குடிபோகும் புதிய இடங்களில் பழைய இடத்தில் கிடைத்த வசதி வாய்ப்புகள் எவ்வாறு இருக்கப் போகின்றன என்ற குழப்பங்களும் இல்லாமலில்லை.

**அரசு நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான செயற்றிட்டம் ஒன்றை வகுத்து முழு மூச்சில் மீள் கட்டுமாணப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் அரசின் இப் பணிகளுக்குப் புலிகளின் ஒரு அங்கமான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடையாக உள்ளது.**

## தொழிற்றுறை

இதுவரை கடலையே நம்பி வாழ்ந்து வந்தவர்கள் வேறு தொழில்களைத் தேடிச் செல்வது சாத்தியமாகுமா? இல்லாவிட்டால் தூர இடங்களில் இருந்துகொண்டு கடலுக்குச் சென்று தொழில் பார்க்கின்ற நிலைமை எல்லோருக்கும் பொருத்தமாக இருக்குமா? பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த நிலப்பரப்புகளை எந்தக் கணக்கில் விட்டுவிட்டு ஒதுங்கி வாழ்வது? அப்படித்தான் போனால் கூட மருத்துவமனை, பாடசாலை, வணக்க ஸ்தலங்கள் என்பவற்றின் தேவை பூர்த்தி செய்யப்படுமா? எந்த வகையில் முகங்கொடுப்பது என்பவையே தற்போதைக்கு மக்களுக்கு இருக்கும் பாரிய கேள்விகளாகும். கடல் மீன்களை மக்கள் சாப்பிட அஞ்சும் இந் நிலையில் கடற்றொழிலை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகவே உள்ளது.

## கல்வி

மாணவர்கள் பலர் இறந்துள்ளனர். கூடவே இருந்தவர்கள் இறந்த அதிர்ச்சி ஒருபுறமும், புத்தகம், கொப்பி உட்பட பாடசாலைகளையே கடலலைக்குப் பறிகொடுத்து நிற்கும் மாணவச் செல்வங்கள் தங்களுக்குக் கற்பித்த ஆசான்களைக் கூடப் பறிகொடுத்துள்ளனர்.

பெற்றோரின் அரவணைப்பு, பாதுகாப்பு, வழிநடத்தல் இல்லாத நிலை, பாதுகாவலர்கள் கூட இல்லாத நிர்க்கதியான நிலைமை, தனிமை, துஷ்பிரயோகக் கொடுமை, பிள்ளை பிடிப்பு என்பவற்றுக்கு முகங்கொடுப்பதில் சிறார்கள் எதிர் கொள்ளும் சவால்கள் சொல்லில் டங்காதவை.

பராமரிப்பு அல்லது தத்தெடுப்பு என்ற பெயரில் சிறுவர்கள் வெவ்வேறு பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதால் கல்வியைத் தொடர்வதில் கூடப் பிரச்சினைகள் உள்ளன. உணவு, உடை, புத்தகம், கொப்பி, பேனை, பென்சில் உட்படத் தேவையான அனைத்துப் பொருட்களும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சிறுவர்களைத் தவறாக வழிநடத்துபவர்களிடமிருந்து பாதுகாத்துப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. இந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலகிவிட முடியாது.

## குடிநீர்

ஆழிப் பேரலை வந்து கரையோரப் பகுதிகளை அழித்ததில் இன்னும் கூட உவர் நீர் படிவுகள் ஊருக்குள் தேங்கி இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. கடல் நீரால் கிணறுகள் நிரம்பிவிட்டதால் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதேபோல் விவசாயக் காணிகள், சிறிய குளங்கள் என்பனவும் உப்பு நீர் புகுந்ததால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயக் காணிகளில் நல்ல தண்ணீரை இரண்டு மூன்று வாரங்களுக்குத் தேக்கி வைப்பதோடு இடைக்கிடையே உழுதுவிட்டால் ஒருவேளை மண் பழைய நிலைக்கு வரக்கூடும். அதேபோல் கிணறுகளும் சேறும் மண்ணும் அள்ளப்பட்டு அதிகப்படியான சுத்தப்படுத்தலின் பின்பே குடிதண்ணீரைப் பெற முடியும். இப்போது கனேடிய நாட்டவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குளத்து நீரைச் சுத்திகரித்து குடிதண்ணீராக மாற்றி வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும் இது நீண்ட காலத்துக்கு ஏதுவான திட்டமாகக் கருத முடியாது. தற்போதைய குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு இந் நடவடிக்கை போதுமானதாகும். இதேபோல் கடல் நீரையும் குடி நீராக மாற்றுகின்ற திட்டமும் அமுல்படுத்த வேண்டிய சூழல் உருவாகிவருகிறது.

## உளவியல் பாதிப்புகள்

கடல் அலையில் கண் முன்னாலேயே பிள்ளைகளை இழந்த தாய், பெற்றோரை இழந்த பிள்ளைகள், அனைவரையும் இழந்து தனித்து நிற்கும் முதியவர்கள் மனதளவில் மிகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடலைக் கண்டாலே தங்களை அறியாமல் கத்துவதும், கனவில் சத்தமிடுவதும், தனித்துப் போயிருக்கிறோம் என்று தமக்குத் தாமே சொல்லித் திரிவதும், கணவனை இழந்த மனைவி மனைவியை இழந்த கணவன் சித்த பிரம்மை பிடித்தவர்கள் போல் வெறித்த முகங்களோடு காணப்படுகின்றனர். எல்லாமே முடிந்துவிட்டதாகவும், வாழ்க்கை மீது நம்பிக்கை இழந்தும் எதிலுமே பிடிப்பில்லாமல் வெறும் மனித உடல்களாக உலாவுகின்ற நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. அவர்களை அமைதிப்படுத்திய, அன்றாடம் தாலாட்டிய, நம்பிக்கை தந்த, அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட கடல் தங்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்கின்றபோது, அவர்களை அறியாமலே வழிகின்ற கண்ணீர், இதிலிருந்து அம் மக்களை மீட்டெடுப்பது மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெரும் சவாலாகவே இருக்கப்போகிறது.

அலசுவது
- மதியூகி -

---

# அதிரடி அய்யாத்துரை



**நாக்கில** சனி பிடிக்கு மெண்டு கேள்விப்பட்டிருப்பியள். இண்டைக்குத் தேதிக்கு ஒருவரைக் காட்டிறதெண்டால் அது வேற யாருமில்லை. மின்னிற நிகழ்ச்சி நடத்திறவர்தானாம். அவர் சக்தியான தொலைக்காட்சியின்ர பெயரால நிவாரணம் கொடுத்துக் கொண்டு திரிஞ்சவரெல்லோ. அது மனிதநேய முள்ள மக்கள் தங்கட நல்ல மனசால கொடுத்ததை, தாங்கள் தான் கொடுக்கிறதா நிவாரணப் படம் காட்டினவரெல்லோ. இந்த லட்சணத்தில, வீணைக் கட்சிக்காரர் செங்கலடியில ஒரு லொறியில நிவாரணப் பொருள் கொண்டு வரயுக்க 'உது மக்களுக்குப் போதாதெண்டு' நக்கலடிச்சவராம். அந்த நேரத்தில ஒரு குடிதண்ணிப் போத்தல் குடுக்கிறதே பெரிய விஷயமா இருந்ததெண்டதை மறந்துபோயிட்டார் போல. தர்மத்தை தம்பட்டமடிக்கிறது விபசாரத்துக்குச் சமமெண்டுவினம். அந்தக் கணக்கா, இவர் காட்டின நிவாரண வழங்கல் படங்களால, வாங்கின சனத்துக்குப் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியிருக்கு. ரீ.வி. இருக்கெண்டதுக்காக உப்பிடி மக்களின்ர அவலத்தைக் காட்டி விளம்பரப் படம் ஓடினதுதான் மிச்சம். இவற்ர மனிதாபிமானத்தைப் பற்றி இன்னொரு கதை சொல்லிறன். கொஞ்ச நாளைக்கு முன்னம் கோட்டை ரோட்டில ஒருத்தரைக் காரால மோதிப்போட்டார். அடிபட்டவரைப் பாக்காமலே தப்பி ஓடப் பாத்தவரை பொலிஸ் பிடிக்கவும், தான் சக்தியான ஒருவரின்ர செயலாளர் எண்டும், ரீ.வி. நிலையத்தின்ர பணிப்பாளர் எண்டும், உந்த விசயம் பெரிசாப் போனால் தன்ர இமேஜ் ஸ்பொயிலாகிப்போகுமெண்டும் கெஞ்சிக் கூத்தாடித் தப்பினவராம். பிறகு மஹாகாசுக்காரர் ஒருவரின்ர செல்வாக்கையும் பயன்படுத்தினவராம். இப்பிடியானவர்தான் இப்ப நீலிக்கண்ணீர் வடிக்கிறார். இப்ப தெரியுதோ என்ன லட்சணத்தில யார் மக்களின்ர கவரில திரியினமெண்டு. நரிவேஷம் கலையேக்க எல்லாம் தெரியும். வெயிற் அன்ட் சீ....

**சுனாமி** வந்ததோடையே ரெண்டெழுத்தாரின்ர தலைவர் கடலலையில காணாமல் போயிட்டாரெண்டு சூடான ஒரு வதந்தியும் வந்தது. அப்பவே உதில உண்மையிருக்காது எண்டு சொல்லிப்போட்டன். இப்ப என்னடாவெண்டால் வதந்தியைக் கிளப்பி விட்டவையளுக்கு ஆப்பு வைச்சாப் போல நோர்வேயின்ர அமைச்சுக் குழுவை தங்கட தலைவர் சந்திப்பார் எண்டு ரெண்டெழுத்துத் தேவன் ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார். உந்தத் துணிச்சலை என்னெண்டு சொல்லிறது. உந்த வதந்தியை நிருபிக்க வேணுமெண்டால் அவற்ர அடுத்த போத் டே வரைக்கும் காத்திருக்க வேணும்; அந்த நேரத்தில அவர் நேரடியா வந்து பேசுவார்தானே எண்டு, இன்னுட பத்து மாசத்துக்கு காலக்கெடு குடுத்தவையளும் இருக்கினம். இப்ப அவையளுக்குப் பதில் கிடைக்கப்போகுது.

அழிவுகளைச் சந்திச்ச மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்க கூட ஏலாத அளவுக்கு கடுமையானதும் இறுக்கமானதுமான வேலைப் பளுவோடை தலைவர் இருக்கிறார் எண்டு சொன்ன சு.ப. இப்ப நோர்வேக்காரரைச் சந்திக்க மட்டும் நேரம் ஒதுக்கியிருக்கிறாராக்கும். எது எப்பிடியோ ஆள் வெளியால வந்து ஒருக்காத் தன்ர திருமுகத்தைக் காட்டினாப் போதும். வதந்திகள் பரவாம இருக்குமெல்லோ.........

**போன** வருஷம் (சுனாமிக்கு முந்தி) மனிசரைத் தெரு நாயைச் சுடுமாப் போல சுட்டுப் போட்டிச்சினம். சுடுபட்டவையள் எல்லாம் துரோகி எண்டும் சுட்டவனெல்லாம், தியாகி எண்ட கணக்கா நிலைமை படுமோசமாக இருந்துச்சுது. ரெண்டெழுத்தார் ஆரைச் சுட்டாலும் அது நியாயமெண்ட கணக்கா உந்த மனித உரிமை அமைப்புகளெல்லாம் தலைக்குக் கீழ கையை வச்சுக்கொண்டு தூங்கிச்சினம்.

மனித உரிமை பற்றியோ, அப்பாவிகள் மீது புரியப்பட்ட படுகொலை பற்றியோ ஒருத்தன் வாயைத் திறந்து ஒரு கண்டனத்தை வெளியிட முன்வரயில்லை. இவையள் எல்லாம் எந்தக் குப்பையைக் கிளறிக்கொண்டிருந்திச்சினமோ தெரியேல்லை. இப்ப யானைக் கட்சியைச் சேர்ந்த ஜெயவர்த்தனமானவருக்கு பாதுகாப்புக் குறைப்புச் செய்தது மனித உரிமை மீறல் எண்டு எதிர்ப்புத் தெரிவிச்சிருக்கினமாம். அப்பிடியெண்டால் ஆரையும் சுட்டுப் போடலாம்; ஆனால் குடுத்த பாதுகாப்பை குறைக்கிறதுதான் பிழையெண்டினமோ..... பாதுகாப்பே இல்லாம மக்கள் இருக்கினமே! அவையளுக்கு என்ன சொல்லப் போகினமோ.....மனித உரிமை பற்றிப் பேசிறவையள். மனிசன் தெருவில சுடப்பட்டுக் கிடக்கேக்கேயும் உந்த மாதிரி எதிர்ப்புத் தெரிவிச்சிருந்தால் பாராட்டியிருக்கலாம். அப்பவெல்லாம் அநியாயத்துக்கு மௌனவிரதமிருந்திட்டினம். குறிப்பிடக்கூடிய ஒரு சில அமைப்புகள் அப் படுகொலைகளைக் கண்டிச்சினம். அதில இவையள் சேர்ப்பில்லை எண்டதுதான் ஹைலைட்.

**அடைக்கலமானவர்** இருக்கிறாரெல்லோ! அவர் ஆர்ப்பாட்டமொண்டை நடத்திறதுக்கு ஆலோசனை கேட்டுத் திரியிறாராம், காடு கிடக்கிற கிடையில கரடி காவடி ஆடிச்சுதாம் எண்ட கதையா. சக்தி படைச்சவை அமுல்படுத்தியிருக்கிற அவசரகாலச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத்தான். இந்த ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளாம். அதுவும் பாளிமெண்டுக்கு முன்னாலதான் உந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருக்கிறாராம். நிவாரண வேலைகளிலையும் மக்களின்ர சொத்துக்களிலையும் நடக்கிற தில்லுமுல்லுகளைக் கட்டுப்படுத்தத்தான் இந்த அவசரகாலத் திட்டத்தை அமுல்படுத்தினவையாம். அதுக்கேன் ஆர்ப்பாட்டம் எண்டு அடைக்கலமானவருக்கு நெருக்கமானவர் ஒருவர் கேட்கவும், "சுனாமி அலை வந்து போன நேரத்தில நான் வெளிநாட்டில இருந்திட்டன். அதால பொலிற்ரிக்ஸப் பண்ண முடியாமல் போயிட்டுது. சும்மாவெண்டாலும் ஒரு பேருக்கு இதைச் செய்ய இருக்கிறனெண்டு எண்டு சொல்லி கண்ணைச் சிமிட்டினாராம். ஆஹா! இதல்லவா தமிழ் மக்களுக்குத் தேவையான பொலிற்ரிக்ஸ் எண்டு கேட்டவர் புல்லரிச்சுப் போட்டாராம்.

**ஐ.நா.வின்ர** உலக உணவுத் திட்டத் தலைவர் வன்னிக்குப் போனவரெல்லோ! அவரின்ர அந்த விஜயம் ரெண்டெழுத்தாருக்குக் கொஞ்சம் ஆறுதலா இருந்துச்சுதாம். அங்க வெளிக்கிட முதல் உலக உணவுத் திட்ட அமைப்பின்ர பிரதிநிதி ஒருவர் தமிழோசைக்குப் பேட்டி குடுக்கேக்க.... நாட்டின்ர மற்ற எல்லாப் பகுதியிலையும் தங்கட அமைப்பு ஒழுங்கா நடக்குதாம் எண்டு ஒண்டுக்கு ரெண்டு தடவை சொன்னவர். அப்பபிடியெண்டால் வன்னியில மட்டும்தான் ஒழுங்கில்லாம நடப்பதாகவும் அதைப் பாக்கவே தாங்கள் போறம் எண்ட கணக்கா உவரின்ர கதை இருக்கு தெண்டுனெல்லோ கூடப் படிச்சவர் ஒருவர் சொல்லித் திரியிறார். அவை வெள்ளைக்காரர். அவைக்கு எங்களை மாதிரிச் சுத்துமாத்துப் பண்ணிக் கதைக்க முடியாதுங்கோ. அதுதான் அவர் நேரடியாவே சொன்னவரெண்டதை விளங்கப் படுத்திறதே பெரிய வேலையாப் போச்சுது.

# எமது துயர் போக்க இங்கு இப்போ யாரும் இல்லையா?

தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறையில் இருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறைக்குச் செல்லும் பாதை வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்தது. இத் துறைமுகத்துக்கு செல்லும் பாதை பாரிய குண்டும் குழியுமாக இருந்தது. கடந்த ஒரு வருடமாக இப் பாதையூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் பல சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தை மேற்கொண்டன. இருப்பினும் இன்று இப் பாதையூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளதை யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. காரணம் இப் பாதையைப் புனர்நிர்மாணம் செய்து இதனூடாகப் பஸ் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தவர் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள். அவர் 2001ஆம் ஆண்டு புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோதுதான் இப் பாதையினை புதிதாகச் செப்பனிட்டு தார் ஊற்றி பஸ் போக்குவரத்தையும் ஆரம்பித்து வைத்தார். ஆனால் இன்று இப் பாதை முற்றாக பழுதடைந்து வாகனங்கள் போக முடியாமல் முற்றாகத் தடைப்பட்டுப்போயுள்ளது. கடந்த ஒரு வருட காலமாக மிகவும் மோசமாகப் பாதிப்படைந்திருந்த இப் பாதையைத் திருத்தி சீரான போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று பலர் வேண்டுகோள் விட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ எதுவித நடவடிக்கையும் இன்றுவரை மேற்கொள்ளவில்லை. இதனால் இன்று இப் பாதையூடாக நடைபெற்றுவந்த பஸ் போக்குவரத்து முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறை பாதையூடாகவே அனலைதீவு, எழுவைதீவு மக்கள் தினசரி தமது போக்குவரத்தை மேற்கொண்டு வந்தனர், இன்றும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இன்று இறங்குதுறையில் இருந்து வரும் அனைவரும் ஊர்காவற்றுறை வரைக்கும் கால்நடையாகவே தமது பயணத்தை மேற்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இப் பாதையைச் சீர் செய்யுமாறு கேட்டிருந்தும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும் பராமுகத்தினாலும் இந் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இனியும் தாமதிக்காது எமது போக்குவரத்தை சீரான முறையில் ஏற்படுத்தித்தருமாறு மிகவும் பணிவாக கேட்டுக்கொள்ளுகின்றோம். இதில் அனைவரும் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயம் யாதெனில், இத் துறைமுகத்தின் ஊடானப் பயணம் செய்பவர்கள் கர்ப்பிணித் தாய்மார் வயோதிபர்களும் ஆவர். அதிலும் பெரும்பாலானவர்கள் வியாபாரிகள் இவர்கள் இன்று தமது பொருட்களைத் தலையில் சுமந்தபடி சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை நடப்பது பெரும் அசௌகரியமான ஒன்றாக இருக்கின்றது.

எனவே, இப் பாதையில் பயணிக்கும் மக்களின் சிரமத்தைப் போக்கவும் சிரமமின்றி வாகனப் போக்குவரத்தை நடத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறையுடன் செயல்படுவார்களா?

**-ஊர்காவற்றுறையில் இருந்து வி.ஜனகன்.**


## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டில் பிரபல சிகிச்சை நிபுணரும், தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான

***DR. R. தியாகராஜன் DHMS, AMRSH (Lon)***

நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 22.01.2005 முதல் 27.01.2005 வரை
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி
தொலைபேசி : 2585592, 2581986, HOTLINE : 0777-602513







**நல்லதே ! நினைப்போம் நல்லதே செய்வோம்**
**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம், நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது நடக்க போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும், என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைத்தல்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர். டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைக்காட்சியில் இரவு 7.00மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தின் ஒரு அங்கமே எனது மலையாள மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N.) J.P
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463,2342464, 2344832, 4613124,4613133. Fax : 2344831


# வெற்றி எங்கே இருக்கிறது!

ஊருக்கு ஊர் ஆபீஸ் இருக்கிறது. தெருவுக்குத் தெரு வர்த்தக நிறுவனங்கள் செயற்படுகின்றன. ஆனால், பெரும்பாலான அலுவலகங்கள் ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட சிறைச்சாலைகள்தான். வேலை பயத்தில் ஒவ்வொருவரும் 'கடனே!' என்று வேலை செய்கிறார்கள். வாடிக்கையாளர்களிடம் செயற்கையாகப் புன்னகைத்து, மெஷின் மாதிரி 'குட் மார்னிங்' சொல்லி, கண்களில் ஒளியே இல்லாமல் 'தாங்க்யூ' என்கிறார்கள். இதுவா வேலை செய்யும் முறை? ஒவ்வொருவரும் தங்கள் வேலையை ஒரு விளையாட்டு மாதிரி உற்சாகமாகச் செய்ய வேண்டும்!

கால்பந்தாட்ட மைதானத்தில் விளையாடும் வீரர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் புரிதலோடு விட்டுக்கொடுத்து வேகமாகச் செயலாற்றுகிறார்கள். ரீமின் வெற்றி ஒன்றைத் தவிர வேறு எதற்கும் இடம் கொடுக்காமல் ஒருமுக சிந்தனையோடு இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் நூறு சதவீதம் நம்புகிறார்கள். இதுபோல் ஒவ்வொரு அலுவலகமும் ஒரு ஃபுட் பால் ரீம் மாதிரி செயற்பட வேண்டும்.

விளையாட்டு என்பது உடம்போடு மட்டும் சம்பந்தப்பட்ட சமாசாரம் இல்லை. எண்ணத்தோடு சம்பந்தப்பட்ட விஷயமும்கூட. அலுவலகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் மைதானத்தில் ஆடுகிற விளையாட்டு வீரரைப் போல மனசு உற்சாகமாக இருந்தால் வேலை செய்ய எனர்ஜி ஊற்றெடுக்கும்...மூளை சுறுசுறுப்பாகும்.

"கஸ்டமர்களோடு நூறு சதவீதம் முழுமையாக இருந்தால் எந்த வாடிக்கையாளருமே கை நழுவிப் போகமாட்டார்கள். சியாட்டில் மீன் மார்க்கெட் கற்றுக்கொடுக்கும் இன்னொரு முக்கியமான பாடம் இது. ஒரு மருத்துவமனை பற்றிய செய்தி இது. அவருக்கு வயது 82. காது கேட்காது. வாய் பேசவும் முடியாது. காலையிலிருந்து மாலை வரை அவரைக் கவனித்துக்கொள்ள மருத்துவமனையிலிருந்து வழக்கமாக ஒரு நர்ஸ் வந்து போவார். தினம்தோறும் அதிகாலையிலேயே வந்து அவருக்குக் கனிவாகப் பணிவிடைகள் செய்துவந்தார். அந்த சமயம், வயதானவரின் மகனுக்கு வேறு ஒரு ஊருக்கு டிரான்ஸ்ஃபேர் கிடைக்கிறது. அவர் தன் தந்தைய அழைத்துக்கொண்டு அந்த ஊருக்குப் போனார். அங்கு புதிதாக ஒரு மருத்துவமனையில் இருந்து ஒரு நர்ஸ் வந்தார். தான் கவனித்துக்கொள்ளப்போகும் வயோதிபருக்குக் காது கேட்காது என்று இவருக்குச் சொல்லப்பட்ட போதும், பெரியவரிடம், "என்ன சாப்பிடுகிறீர்கள்...தண்ணீர் போதுமா...வீட்டின் தோட்டத்துக்குள்ளேயே வாக்கிங் போகலாமா?" என்று ஆரம்பித்து அவரிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டே இருந்தார்.

தன்னிடம்கூடப் பேசுவதற்கு ஒரு ஜீவன் இருக்கிறது என்று மகிழ்ந்துபோன அந்தப் பெரியவரின் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம். தனது அப்பாவுக்கு நேர்ந்த இந்த நல்ல மாற்றத்தைக் கவனித்த அவரது மகனுக்குள் ஒரு மின்னல் வெட்டு! தினமும் அலுவலகம் விட்டு வீட்டுக்கு வந்ததும் அவர் தன் அப்பாவோடு பேசி, அவருடன் நேரத்தைச் செலவழிக்க ஆரம்பித்தார். இதுவரை ஒரு ஜடப்பொருளாகத் தன்னைப் பாவித்து வந்த தன் மகன் தன்னிடம் அன்புகாட்டிப் பேசுவதைப் பார்த்து வயதான அந்தத் தந்தைக்கு உடம்பில் அப்படி ஒரு பலம் ஊற்றெடுத்தது. 'முழுமையாக இரு' என்ற மந்திர சொற்களின் அர்த்தம் புரிகிறதா?

இரண்டு நண்பர்கள் ஒரு காட்டின் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது அந்த நண்பர்களில் ஒருவரைப் பாம்பு கடித்துவிட்டது. நண்பர் வலியால் துடிப்பதைப் பார்த்துப் பொறுக்கமாட்டாத இரண்டாமவர் அந்தப் பாம்பைத் துரத்தினார். பாம்பு இண்டு இடுக்களில் எல்லாம் புகுந்து ஓடியது. இவர் விடவில்லை. துரத்தித் துரத்தித் துரத்திப் பாம்பை அடித்துக் கொன்று போட்டுவிட்டுத்



கலாநிதி மாறன்

திரும்பிவந்து பார்த்தார். நண்பர் வாயில் நுரை பொங்க இறந்து கிடந்தார். பாம்பை துரத்திக் கொண்டு ஓடுவது, உடனடியாகப் பாம்பு கடிபட்ட நண்பருக்கு முதலுதவி கொடுப்பது என்று இரண்டு சொய்ஸ் அவருக்கு இருந்தது. ஆனால், அவர் தேர்ந்தெடுத்தது என்ன என்று பாருங்கள். வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்முடைய பாதையைத் தேர்ந்தெடுக்கும் சொய்ஸ் நமக்கு இருக்கிறது. தேடி வருகிற கஸ்டமர்களிடம் நாம் சலிப்பாகப் பேசலாம் அல்லது மகிழ்ச்சி பொங்க உரையாடலாம். கோபப்படலாம் அல்லது பொறுமையைக் கடைப்பிடிக்கலாம். எரிச்சலடையலாம் அல்லது நட்போடு நடந்துகொள்ளலாம். நாம் இதில் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்ற சொய்ஸ் நம்மிடம்தான் இருக்கிறது. என்ன மாதிரியான சொய்ஸைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதில்தான் வெற்றியே தங்கியுள்ளது.

**வாழ்க்கையில் வெற்றியடைந்த மனிதர் கலாநிதி மாறன் தனது வெற்றிப்பாதையின் படிநிலைகளை பற்றி எம்மோடு பகிர்ந்துகொண்டவை அடுத்த வாரங்களில் இடம் பெறும்.**

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.


நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 10 1925



மறைவு 14 01 2004

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வாழ்விடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர். வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை

அன்பின் உருவமாகவும் பாசத்தின் சிகரமாய்
வாழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆண்டொன்று கழிந்தபோதிலும் உங்களின் நினைவு
மங்காது ஆருயிர்த் தந்தையே!
ஏணியாய் இருந்து - எம்மை உயரத்தில் ஏற்றிவிட்ட
அணையாத விளக்கே!
விருட்சமாய் அன்னையும் கிளைகளாக நாமுமிருக்க
எம்மை விட்டு சென்றதேனோ ஆருயிர்த் - தந்தையே!
மாதங்கள் பன்னிரண்டு கழிந்து சென்றபோதிலும்
உங்கள் நினைவால் நெஞ்சுருகும்

தகவல்:- பேர்த்தி ஜெதுர்ஜா, டென்மார்க்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி
ஆசிரியர்

**கனடியப் பிரதமரும் நோர்வே வெளிவிவகார அமைச்சரும் இரணைமடுவுக்கு மேலாகப் பறந்து செல்ல வேண்டும் என்ற தலைப்பில் 'த ஐலண்ட்' என்ற கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை கடந்த 17ஆம் திகதி வெளியிட்ட ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. கிளிநொச்சி இரணைமடுக் குளக் கட்டின் அருகேயுள்ள விமான ஓடுபாதையில் இரண்டு மென்ரக சிறிய விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை விமானப் படையின் உளவு விமானங்கள் வீடியோ படங்களாக எடுத்திருந்ததாகவும் இதனைச் செய்மதிப்படங்கள் உறுதி செய்தனவென்றும் வெளிவந்த செய்திகள் தெரிவித்தன. புலிகளிடம் விமானங்கள் இருப்பதாகவும் அவர்களிடம் விமானப் படையணி இருப்பதாகவும் கூடக் கடந்த வருடம் தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. வடக்கு, கிழக்குக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைக் கோரிவரும் புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கமே குந்தகமாக இருப்பதாகவும் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. சமாதானத்தைத் தேடும் புலிகளுக்கு ஏன் யுத்த விமானங்கள் தேவையென்ற கேள்வியெழுப்பும் இந்த ஆசிரியத் தலையங்கம் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டுப் பணி குறித்தும் கேள்வி எழுப்புகிறது.**

## இன்னொருவர் பார்வையில்

# இரணைமடுக் காட்டுக்குள் விமானங்கள் சமாதானத்துக்காகவா?

சுனாமியால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவுகளைத் தானே நேரடியாகப் பார்வையிடுவதற்காகவும் தனது அனுதாபத்தையும் கனடிய மக்களின் அனுதாபத்தையும் நேரடியாக இலங்கை மக்களுக்குத் தெரிவிப்பதற்காகவும் கனடியப் பிரதமர் போல் மார்ட்டின் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 80 மில்லியன் டொலர்களையும் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் மொத்தமாக 425 மில்லியன் டொலர்களையும் உதவியாக வழங்குவதற்கு கனடா ஏற்கனவே உறுதியளித்துள்ளது. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து கனடா அளித்த உதவிகளைக் கவனத்திலெடுத்து அந்த நாட்டுடனான நட்புறவை இலங்கை மக்கள் உயர்வாக மதித்து வந்துள்ளனர்.

இங்கு விஜயம் செய்யும் மற்றொரு நோர்வே இராஜதந்திரி வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சன் ஆவார். இவருடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசனும் ஏனைய உயர்மட்ட நோர்வேஜிய முக்கியஸ்தர்களும் வருகை தருகின்றனர். விசேட தூதுவர் என்று உத்தியோகபூர்வமாகக் குறிப்பிடப்பட்டுள்ள, புலிகளின் புனித போஷகரான திரு.எரிக் சொல்ஹெய்மும் இலங்கை வரும் இந்த நோர்வேக் குழுவில் உள்ளடங்கியுள்ளார். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மிக முக்கிய பிரமுகர்களான இராஜதந்திரிகள் விஜயம் செய்வதும் புலிகளின் தலைவர்களுடன் அவர்கள் நடத்தும் கலந்துரையாடல்களும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் எழுகின்ற சர்ச்சைக்குரிய ஒரு கேள்வியாகும். பிந்திய தகவல்களின்படி கனடியப் பிரதமரின் விஜய நிகழ்ச்சி நிரல் மாற்றப்படக்கூடியதென்றும் குறிப்பிடப்படுகிறது. கனடியப் பிரதமர் மார்ட்டின் வன்னிக்கு விஜயம் செய்து புலிகளின் தலைவர்களைச் சந்திப்பது பற்றிய பிரச்சினை ஏற்கனவே எழுந்துள்ளது. ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானின் விஜயத்தின்போது நிகழ்ந்ததைப் போன்று திரு.மார்ட்டினின் விஜயமும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தப்போகிறது.

அனானின் விஜயத்தின்போது நாமெழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அனான் விஜயம் செய்ய விரும்பினால், அவர் அவ்வாறு செல்ல முடியும். ஆனால் அவர் இலங்கை அரசாங்கத்தின் ஒரு விருந்தினராகவே அங்கு செல்ல முடியுமென்று குறிப்பிட்டிருந்தோம். இலங்கை அதிகாரிகளுடன் இணைந்தே அவர் செல்ல வேண்டுமென்றும் அவர் அங்கு விரும்பிய எவருடனும் பேசலாமென்றும் குறிப்பிட்டிருந்தோம். இதே வழிமுறைகளே கனடியப் பிரதமருக்கும் கூடப் பொருந்துமென்றும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். கனடியப் பிரதமரின் லிபரல் கட்சிக்குள் வெற்றிகரமாக ஊடுருவியுள்ள புலிகளின் அங்கத்தவர்களின் அழுத்தங்களுக்கு அவர் ஆட்பட்டிருக்கலாம். வாராந்தப் பத்திரிகையொன்றும் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியதைப் போன்று அண்மைய கட்சியின் தலைமைத்துவ மாநாடொன்றில் கலந்துகொண்ட 1100 பிரதிநிதிகளில் எண்பது பேர் இலங்கைத் தமிழர்களென்பதால் இந்த அழுத்தம் தரப்பட்டிருக்கலாம்.

ஆனால், திரு.மார்ட்டின் தனது கட்சிக்கு வாக்கு வேட்டையாடும் ஓர் கட்சி அரசியல்வாதியைப் போலன்றி, இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் கனடிய அரசாங்கத்தின் பிரதமராகவே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கிறார். ஏதாவதொரு ஈடாட்டமான யோசனை ஏற்படுமென்றால், அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளில் தடைசெய்யப்பட்ட வெளிநாட்டு ஸ்தாபனமொன்றினை சுதந்திர இலங்கையின் வரலாற்றுக் காலம் தொட்டே ஆழமான, நீடித்த உறவுகளைக் கொண்டிருக்கும் இறைமையுள்ள நாடொன்றுடன் சமப்படுத்த முடியாதென்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

ஆனால், திரு.மார்ட்டினுடனான கலந்துரையாடல்களில் புலிகளின் புறந்தள்ளப்பட வேண்டுமென்று கூறுவதன் மூலம், பாசிஸக் காலடியின் கீழுள்ள சட்டத்தை மதித்து நடக்கும் தமிழ் மக்களிடமிருந்து அவர் விலகி நிற்க வேண்டுமென்றும் நாம் எந்த வகையிலும் கூறவில்லை. பெருமளவு தமிழர்களைக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பேரழிவிலிருந்து மீட்சி பெறுவதற்கான சாத்தியமான சகல உதவிகளும் தேவை. ஆனால் இந்தத் துயரத்தைப் பயன்படுத்திப் பிரிவினைவாத, இனவாத இராச்சியத்துக்கான தமது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லப் புலிகளை எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது. ஐக்கியப்பட்ட இலங்கையையும் அதன் பிரதேச ஒருமைப்பாடு பேணப்படுவதையும் கனடா வரவேற்பதாக நாம் நம்புகிறோம். இந்தக் கடப்பாட்டுக்கு எந்த வகையிலும் குழிபறிக்கப்படக் கூடாது.

**பெருமளவு தமிழர்களைக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்குப் பேரழிவிலிருந்து மீட்சி பெறுவதற்கான சாத்தியமான சகல உதவிகளும் தேவை. ஆனால் இந்தத் துயரத்தைப் பயன்படுத்திப் பிரிவினைவாத, இனவாத இராச்சியத்துக்கான தமது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லப் புலிகளை எந்த வகையிலும் அனுமதிக்கக் கூடாது. ஐக்கியப்பட்ட இலங்கையையும் அதன் பிரதேச ஒருமைப்பாடு பேணப்படுவதையும் கனடா வரவேற்பதாக நாம் நம்புகிறோம். இந்தக் கடப்பாட்டுக்கு எந்த வகையிலும் குழிபறிக்கப்படக் கூடாது.**

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் புலிகளின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் திரு.மார்ட்டின் சந்திக்கவிருக்கும் இலங்கை அரசியல்வாதிகளும் உள்ளடங்குவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் 90 சதவீதமான தலைமைத்துவ உறுப்பினர்கள் புலிகளால் சுட்டுக் கொல்லப்படும்வரை தமிழ் மக்களின் சுதந்திரமான, ஜனநாயக ரீதியான பிரதிநிதிகளையே பிரதானமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொண்டிருந்தது. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளின் முகவராகச் செயற்படுகிறது. திரு.மார்ட்டின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்கும்போது, ஆங்கிலம் பேச முடியாத புலிகளின் தலைவர்களை விட புலிகளின் நோக்கங்களை நன்கு சிறப்பாக எடுத்து விளக்கக்கூடியவரும் வளர்ந்து வருபவருமான கஜன் பொன்னம்பலம் மற்றும் தெளிவாக விடயங்களை விளக்கக்கூடிய போன்றவர்களையே சந்திப்பார். கொபி அனானின் விஜயத்தின்போதும் இதுவே நடந்தது.

எவ்வாறெனினும், பயங்கரவாதிகளின் துப்பாக்கிகளையும் குண்டுகளையும் மறுதலித்து அசாதாரண துணிச்சலை வெளிப்படுத்திய அனுபவம் வாய்ந்த தமிழ் அரசியல்வாதியும், இன்னமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக விளங்குபவரும், உண்மையான ஜனநாயகத் தலைவருமான திரு.ஆனந்தசங்கரியைச் சந்திக்குமாறு திரு.மார்ட்டினுக்கு நன்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு.மார்ட்டின் சுதந்திரமான, ஜனநாயகக் கருத்தினைக் கேட்க விரும்புவாரென்றால் திரு.ஆனந்தசங்கரியையும், புலிகளின் அடாவடித்தனத்தை எதிர்த்துத் தொடர்ந்தும் தமிழ் பேசும் மக்களுக்காகப் பேசி வருபவரான ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவையும் சந்திக்க வேண்டும். திருவாளர்கள் ஆனந்தசங்கரி. தேவானந்தா மற்றும் அவர்களைப் போன்ற துணிச்சலுள்ள அச்சமற்ற தமிழ்க் கல்விமான்களைக் கொண்ட மனித உரிமைகளுக்கான (யாழ்ப்பாண) பல்கலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவில்லையென்றால் கொழும்பிலுள்ள கனடியத் தூதுவராலயம் தனது கடமையிலிருந்து தவறிவிடும்.

நோர்வே வெளிவிவகார அமைச்சரின் தலைமையிலான தூதுக்குழுவின் நோக்கங்கள் குறித்துந் சில தரப்புகளில் சந்தேகங்கள் எழுந்துள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்புகளும் கைச்சாத்திட்டபோது இரு தரப்புகளாலுமே சமாதான ஏற்பாட்டாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நோர்வேயின் பாத்திரம் மிக மோசமான கேள்விக்கும் சவால்களுக்கும் உட்படுத்தப்பட்டது. இப்போது அவர்களின் பங்களிப்பு, சமாதானக் கண்காணிப்பாளர் ஆகவும், சமாதான ஏற்பாட்டாளர் ஆகவும், இலங்கை அரசியலில் பிரதான செயற்பாட்டாளராகவும் கூட விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதற்காக நோர்வேத் தரப்பினர் குறை சொல்ல முடியாது. ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமும் எமது உள்விவகாரங்களில் தலையிடுவதற்குத் தாராளமாக அதிகாரம் வழங்கியுள்ளன. நோர்வேதரப்பினரால் புலிகளுக்கென அதிசக்தி வாய்ந்த வானொலித் தொலைத் தொடர்புச் சாதனத்தை இறக்குமதி செய்துக் கொடுத்ததை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பாரபட்சமற்ற கண்காணிப்பாளர்களென்ற அவர்களின் பாத்திரம் தொடர்ச்சியாகவே கேள்விக்குறியாக்கப்பட்டு வந்துள்ளது. 16-01-2005 (சண்டே டைம்ஸ்) பத்திரிகை இரணைமடுக் காட்டுப் பகுதியிலுள்ள இரகசியமான ஓடு பாதையில் ஆட்களின்றி இயங்கும் இரண்டு மென்ரக விமானங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை கடந்த வார இறுதியில் பாதுகாப்பமைச்சின் ஆளில்லா விமானப் புலனாய்வு ஊர்தியொன்றினால் எடுக்கப்பட்ட வீடியோ ஒளிப்பதிவுப் படங்களைப் பிரசுரித்திருந்தது. புலிகள் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட வேளைகளிலெல்லாம் நடவடிக்கை எடுப்பதற்கா நீதித்துறை ஆதாரங்கள் தேவையென்று நோர்வே கண்காணிப்பாளர்கள் வற்புறுத்திவந்தபோதிலும் இவை யாருடைய விமானங்களாக இருக்கும் என்று ஒரு குழந்தைக்குக் கூடச் சொல்லித்தர வேண்டியதில்லை.


இங்கு விஜயம் செய்யும் இந்த இரு வெளிநாட்டுப் பிரமுகர்களும் இரகசியமான அந்த விமான ஓடு பாதைக்கு மேலாக விமானத்தில் பறந்து செல்ல வேண்டுமென்றும் இப்போது அந்த விமானங்கள் காட்டுப் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாமென்ற போதிலும் சமாதானத்தைத் தேடுபவர்களுக்குக் காட்டுப் பகுதியில் ஏன் விமான ஓடுபாதைகள் தேவையென்று இந்த இரு சமாதான யாத்திரிகர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டுமென்றும் ‘த ஐலண்ட்’ கூறிக்கொள்ள விரும்புகிறது. பயங்கரவாதிகளுக்காகப் பயங்கரவாதிகளால் வழங்கப்படும் முட்டாள்தனமான பதிலொன்று இவ்வாறு கூறப்படுகிறது. அரசாங்கம் தன்னை மீள ஆயுதபாணியாக்க முடியுமென்றால் நாமேன் அவ்வாறு செய்ய முடியாது? நிச்சயமாகப் பயங்கரவாதிகளுக்கு சுதந்திரமான இறைமையுள்ள இராச்சியம் இருக்குமென்றால் அவ்வாறு செய்ய முடியும்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அவருடைய ரவீந்திர சங்கீதம் அற்புதமானது. நம் செவிவழி புகுந்து சிந்தையில் இறங்கி உள் உணர்வுகளோடு கைகுலுக்கும்.

அதனால்தான், மேற்கு வங்காள சட்டசபை அவர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.



இந்தியாவிலேயே நானறிந்து ஒரு சினிமா இசையமைப்பாளரின் மறைவுக்கு, 'டைம்ஸ் ஆ.்.ப் இன்டியா' தலையங்கம் எழுதியது அமரர் ஆர்.டி.பர்மன் அவர்களுக்கு மட்டுமே.

**சிலர்,**
**இருக்கும் போதே**
**இறந்தவர்களாக இருக்கிறார்கள்;**
**சிலர்,**
**இறந்த பிறகும்**
**இருப்பவர்களாக இருக்கிறார்கள்.**

நண்பர் பர்மன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

'ந கோயி உமங்கு ஹை' போன்ற பாடல்களில் அவர் நாளும் வாழ்கிறார்.

அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் விமர்சனக் குழு ஒன்று 'திரைப்பாடல்களில் பெண்கள்' என்னும் தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்திய சேதி, சென்ற 'புதிய பார்வை இதழல் வெளியாகியிருக்கிறது. இதில் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் என்னுடைய பெருவாரியான பாடல்கள் இலக்காகியிருக்கின்றன. எனவே இது குறித்து ஒரு சிறய விளக்கம் தர விரும்புகிறேன்.

பெண்ணால் பிறந்து, பெண்ணுடன் வாழ்ந்து, பெண்ணை ஈன்றெடுக்கும் எந்த ஆண்மகனும், தற்காலச் சமூகத்தில் பெண்ணைக் கொச்சைப் படுத்திப் பேசவோ, எழுதவோ மாட்டான்.

படப்பாடல்கள், பாடலாசிரியர்களின் கருத்தோ, படஇயக்குநர்களின் கருத்தோ அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு படப் பாடல், படத்தில் கதாநாயகனோ, கதாநாயகியோ தாங்கி நிற்கும் கருத்தை வெளிப்படுத்துகிறதே தவிர படைப்பாளியின் கருத்தை வெளிப்படுத்துவதில்லை.

***'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்' - அது***
முடித்த பின்னாலும் பேச்சிருக்கும்!

என்று நான் எழுதிய பாட்டை என் கருத்தாகப் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டிருந்தால் குழம்பிப் போயிருப்பார்கள். எந்த மூன்றெழுத்தை நான் சொல்ல வருகிறேன் என்பது அவர்களின் சிந்தையைச் சல்லடைக் கண்ணாகத் துளைத்துவிடும்.

அது, கதாபாத்திரத்தின் கருத்து. அதுவும் அந்தக் கதாபாத்திரத்தை ஏற்று நடித்த எம்.ஜி.ஆரின் இமேஜைச் சார்ந்த கருத்து என்பது மக்களுக்குத் தெளிவாகவே புரிந்திருந்தால்தான்தான் மூன்றெழுத்து என்று எம்.ஜி.ஆர். குறிப்பிடுவது 'தி.மு.க.வை என்பது உணரப்பட்டு கொட்டகையில் கையொலி எழும்பக் காரணமாயிருந்தது.

***'நான் ஆணையிட்டால் - அது நடந்து விட்டால் - இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்'***

என்கிற பாடலை என்னுடைய கருத்தாகப் பொதுமக்கள் எண்ணியிருப்பார்களேயாகில், நான் நகைப்புக்குரியவனாகியிருப்பேன்.

அந்த வரிகளை நான் எம்.ஜி.ஆர். உதடுகளில் உட்கார்த்தி வைத்தேன். அப்படி ஆணையிடவும், அதை நடத்திக் காட்டவும் அவருக்கு அருகதையும் ஆற்றலும் உள்ளதாக மக்கள் எண்ணியதன் விளைவே, அந்தப் பாடலுக்குப் பெருமை சேர்த்தது.


'புத்தம் புதிய புத்தகமே' என்கிற பாடலை பற்றியும் அந்தக் கருத்தரங்கில் பேசப்பட்டிருக்கிறது.

இந்தப் பாடல், கற்பைப் பெண்களுக்கு மட்டுமே உரிய ஒழுக்கமாக வலியுறுத்துகிறது என்று விமர்சித்திருக்கிறார்கள்.

(தொடரும்.......)



**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதைக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




சிதறிக் கிடந்த பல நாடுகளை ஒன்றாக்கி ஜேர்மனி என்கிற தேசமாக உருவாக்கியவர் பிஸ்மார்க். அவர் இந்தப் பணியில் வெற்றி பெற்றதற்கு எட்வர்ட் ஸ்டீபர்தான் காரணம். அவருக்குக் கீழ் ஏராளமான உளவாளிகள் வேலை செய்தார்கள். தன்னுடைய உளவாளிகள் கொடுக்கின்ற செய்திகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுகின்ற பழக்கம் ஸ்டீபருக்குக் கிடையாது. ஒரே விஷயத்தைத் தெரிந்து வரப் பல உளவாளிகளை நியமிப்பான். அனைவரும் கொடுக்கின்ற செய்திகளில் உனது ஒரே மாதிரி இருக்கின்றதோ அதை மட்டுமே ஏற்றுக்கொள்வான்.

ஸ்டீபரே ஒரு கைதேர்ந்த உளவாளி. ஆஸ்திரிய நாடெங்கும் கைவண்டியைத் தள்ளிக்கொண்டு வியாபாரியைப் போலச் சுற்றி வந்து தகவல்களைச் சேகரித்தான். தன்னுடைய வண்டியில் அவன் இரண்டு பெட்டிகளை வைத்திருந்தான். ஒரு பெட்டியில் கிறிஸ்துவ மகான்களின் சிலைகள் இருக்கும். அவற்றை விலை கூறி விற்க முயற்சிப்பான். அந்தச் சிலைகளை வாங்க விரும்பாதவர்களிடம் அடுத்த பெட்டியைத் திறந்து காட்டுவான். அதில் ஆபாசமான கவர்ச்சிப் படங்கள் நிறைய இருக்கும். இவ்வாறு இரண்டு வகை வாடிக்கையாளர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு நெருங்கிப் பழகித் தகவல் சேகரிப்பது அவனுக்குப் பழக்கம். அவன் சேகரித்துக் கொடுத்த தகவல்கள் பிஸ்மார்க்குக்குப் பேரு தவியாக இருந்தன. ஏழே வாரங்களில் பிஸ்மார்க்கால் ஆஸ்திரிய நாட்டைக் கைப்பற்ற முடிந்தது.

1868 இல் ஸ்டீபர் பிரான்ஸூக்குள் நுழைந்தான். பிரஞ்சு இராணுவம், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை பற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரித்துப் பிஸ்மார்க்குக்கு அனுப்பி வைத்தான். ஆறே வாரங்களில் மூன்றாம் நெப்போலியனைத் தோற்கடிக்க பிஸ்மார்க்குக்கு இந்தத் தகவல்கள் உதவின.

பெண்களை உளவு வேலை பார்ப்பதற்கு மிகப் பயன்படுத்தியவன் ஸ்டீபர். இதற்கென்றே தன்னுடைய ஆட்களை வைத்துப் பொழுதுபோக்கு வீடுதிகளை அவன் பல இடங்களில் நடத்தினான். செல்வாக்குப் பெற்ற மனிதர்களை அந்த வீடுதிகளின் வாடிக்கையாளர்கள் ஆக்கிடும் முயற்சியில் அவன் மிகுந்த கவனம் எடுத்துக்கொண்டான். ஆபாச நிலையில் அவர்கள் இருக்கும்போது கையுங்களவுமாகப் பிடித்து அவர்களை மிரட்டி தகவல்கள் கொடுக்கும் கையாட்களாக அவர்களை மாற்றிவிடுவது அவனுக்குப் பழக்கம். தன்னுடைய திட்டத்திற்கு ஒத்து வராதவர்களைத் தீர்த்துக்கட்ட அவன் தயங்கியதில்லை.

வரலாற்றில் உளவுத் துறை வளர்ந்து வந்ததற்கு இது போன்ற எத்தனையோ சான்றுகளைக் காட்ட முடியும். மேலே குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. ஒரு நாட்டின் பலம் அது வைத்திருக்கும் படையிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையை மட்டும் பொறுத்ததில்லை. ஆயுத வலிமையையும் பொறுத்ததல்ல. உளவுத் துறை எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் அந்த நாடும் பலம் பெற்றதாக விளங்க முடியும். வெளிநாடுகளிடமிருந்து தகவல்களைச் சேகரிப்பது மட்டும் உளவுத் துறையின் வேலையல்ல.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

க டந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேஷியாவில் அமைந்துள்ள சுமாத்ரா தீவுக்கருகில் ஆழ்கடலில் ஏற்பட்ட அதி பயங்கரமான பூகம்பம் காரணமாக உருவான பேரலைகளினால் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த பல நாடுகளில் பாரிய அழிவுகள் ஏற்பட்டமை நாமறிந்த விடயமாகும்.

இந்தோனேசியா, இலங்கை, இந்தியா உட்பட அண்டிய கடல் பகுதியைச் சார்ந்துள்ள பல நாடுகளில் இலட்சக் கணக்கான மக்கள் இந்தக் கடல் கொந்தளிப்புக் காரணமாக இறந்துள்ளனர். சுனாமி என்றழைக்கப்படும் இந்தக் கடல்



# சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள தாய்லாந்து அழகிகள்

கொந்தளிப்பு உயிர்களை மாத்திரம் பலிகொள்ளாது அந்தந்த நாடுகளின் பொருளாதாரத்தையும் அதல பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது.

அநேகமான நாடுகளில் உல்லாசப் பயணத்துறை, மீன்பிடித் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த கைத்தொழில்களும் பெரும் அழிவைக் கண்டுள்ளன.



ஆசியாக் கண்டத்தைப் பொறுத்தவரையில் உல்லாசப் பயணிகளை வெகு அதிகமாக ஈர்க்கின்ற நாடு தாய்லாந்தாகும்.

தாய்லாந்தில் உள்ள புகட் தீவிலிருந்து கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பார்க்கும்போது அந்த நாட்டில் தேசிய மட்டத்தில் விபசாரத் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த ஏனைய தொழில்துறைகளே அதிகமான பாதிப்பை அடைந்துள்ளன எனத் தெரியவருகின்றது.

புகட் தீவில் ஒவ்வொரு அடிக்கும் ஒரு திறந்த தவறணை, டிஸ்கோ மண்டபங்கள், உல்லாச விடுதிகள் என்பன அமைந்துள்ளன. இங்கு அழகான இளம் யுவதிகள் காணப்படுவதால் உல் லாசப் பயணிகள் மிக அதிகமாக இவ்வாறான இடங்களை நாடுகின்றனர்.

எப்போதும் போல் நியோன் வெளிச்சத்துக்கு மத்தியில் திறந்த தவறணைகளும், உல்லாச விடுதிகளும் இன்றும் கூடத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இங்கே அழகான இளம் பாலியல் தொழிலாளர்களும் வலம் வருகின்றனர். ஆனால் வாடிக்கையாளர்கள்தான் அதிம் வருவதே இல்லை.

என்றாலும் தங்களது தொழில்துறை மீண்டும் இயல்பு நிலைக்கு வரும் என்று இந்தப் பாலியல் தொழிலாளிகளும் விடுதிகளின் உரிமை யாளர்களும் இன்னமும் நம்பிக்கை கொண்டிருக் கிறார்கள்.

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாலியல் தொழிலாளர்களும், விடுதி உரிமையாளர்களும், வாடகை வாகனச் சாரதிகளும்தான் மிக அதிகமான பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது சுனாமிக்குப் பின்னர் இவர்களது தொழில் துறையானது நூற் றுக்கு எண்பது வீதம் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

பொதுவாக இந்தக் காலகட்டத்தில் புகட் தீவு மக்களால் நிரம்பி வழியும் என்றும் உல்லாசப் பயணிகளின் வருகை உயரிய மட்டத்தைக் கொண்டிருக்கும் என்றும் சுமார் 20,000க்கும் அதிகமான ஆண்களும், பெண்களும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரியவருகிறது.

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பெரும்பாலான விலைமாதர்கள் தத்தமது குடும்பங்களை நாடிச் சென்றுள்ளனர்.

தத்தமது குடும்பங்கள் சகிதம் உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதற்காக வருகை தரும் உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைந் தாலும், இக் காலகட்டம் முதல் மார்ச் மாதம் வரையில் தாங்கள் எதிர்பார்ப்பதைப் போல் தவறணைகள் மற்றும் உல்லாச விடுதிகளில் விலைமாதர்களை நாடி வரும் உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் குறைவிருக்காது உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

மேலைத்தேய நாடுகளுக்குச் சமாந்தரமாக வைத்துப் பார்க்கும்போது தாய்லாந்தைப் போன்று விபசாரத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்கள் வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லை என்றே கூற வேண்டும்.

எனினும் ஏனைய பல நாடுகளைப் போல் வீதியோரங்களில் நின்று வாடிக்கையாளர்களை ஈர்க்கின்ற பாலியல் தொழிலாளர்களைத் தாய்லாந்தில் தேடிக் கொள்வது கடினமான காரியமாகும்.

உல்லாச விடுதிகள், மஸாஜ் நிறுவனங்கள் மற்றும் தவறணைகள் அல்லது சுயமாக உருவாக்கப்பட்ட நிலையங்கள் என்பவற்றைத் தவிர்த்து தாய்லாந்து விலைமாதர்கள் தங்களது வாடிக்கையாளர்களைப் பிற இடங்களில் வைத்துச் சந்திப்பதில்லை.

பொதுவாக தாய்லாந்துச் சட்டத்தின் பிரகாரம் விபசாரத் தொழில் சட்ட விரோத மானதாகும் என்றபோதிலும், தாய்லாந்தில் விபசாரத்தில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை சுமார் 80,000 எனத் தெரியவருகின்றது. என்றாலும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கை களின்படி தாய்லாந்தில் விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆண், பெண்களது எண்ணிக்கை எட்டு இலட்சமாகும் எனவும் தெரிய வந்துள்ளது.

புகட் தீவில் பாலியல் துறையில் ஈடுபடுகின் றவர்களது எண்ணிக்கை குறிப்பாக ஒழுங்கு ரீதியில் தெரிய வராதவிடத்தும், பத்தாயிரத் துக்கும் ஐம்பதாயிரத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலான யுவதிகள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இது அந்நாட்டின் தேசிய வருமானத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்ற ஒரு துறையா கவும் கணிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

நிலைமை இவ்வாறு இருக்கும்போது, "உல்லாசப் பிரயாணிகள் முட்டாள்களல்லர்; எனவே அவர்கள் மீண்டும் வருவார்கள்" என விபசாரத் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற ஓர் இளம் யுவதி நம்பிக்கையுடன் கூறுகின்றார்.

உல்லாசப் பிரயாணிகள் அறிவுள்ளவர்கள். மீண்டும் ஒரு தடவை சுனாமி வராது எனபது அவர்களுக்குத் தெரியும். அவர்களை எதிர் பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை" என்று அந்த யுவதி மேலும் கூறுகின்றார்.

இதே நேரம், தாய் லாந்து வாசிகள் ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங் களையும் போல நலமாக இருக் கின்றனர் என்று உல்லாசப் பிர யாணிகள் கூறுகின் றனர்.



சுனாமி - பல விடயங்களில் மிக அதிகமாகவே பாதிப் புகளை உண்டு பண்ணி யுள்ளது என்பது தாய் லாந்து விடயத் தின் மூலம் தெரிய வரு கிறது. உல கில் என் னென்ன பாதி ப்புகள் ஏற்பட் டுள்ளன!.

-பாரூக்

# கண்ணீர்க் காவியமான இரத்த வரலாறுகள் 4

'சங்கர மடத்துக் கிங்கரர்கள்' பற்றிப் பாராட்டுகள் மட்டுமல்ல, பல கண்டனங்களும் கடிதங்கள் மூலமாக வந்துள்ளன. ஆதிசங்கர மடத்துச் சங்கதிகளை அம்பலத்துக்குக் கொண்டுவருவது இந்து சமய விரோத நடவடிக்கையல்ல. சர்வாதிகாரி ஹிட்லரைக் கண்டிப்பது ஜெர்மனிய மக்களைக் கண்டிப்பது போலாகிவிடாது. மத்தியதரைக் கடல் நாடுகள் ரோமானியச் சக்கராதிபத்தியத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்த காலத்தில் மாற்று மதங்களில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டவர்கள் திறந்தவெளிச் சிறைகளில் கர்ச்சிக்கும் சிங்கங்களுக்கு இரையாக உயிருடன் வீசப்பட்ட கொடூரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஜெருசலம் இன்றும் கூட யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களின் யுத்த களமாகவே திகழ்கின்றது. ஜெரூசலேம் மாறி மாறி இஸ்லாமிய, கிறிஸ்தவ மதக் கட்டுப்பாடுகளுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. மன்னரையே கடவுளாகப் பின்பற்றிய அந்தக் காலத்து மக்கள், மன்னரையே மதமாகக் கருதினார்கள். கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையில் நூற்றுக்கணக்கான வருடங்களாக இடம்பெற்று வந்த ஐந்துக்கு மேற்பட்ட சிலுவை யுத்தங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். இப்படி இரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்பட்ட கறை படிந்த சமய வரலாறுகள் இருக்கின்றன என்பதால் மக்கள் நாஸ்திகர்களாகிவிடவில்லை. சமய நம்பிக்கைகளைக் கைவிடவில்லையென்பதை வாசகர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

அருண் கண்ணன்

**ஆதி** சங்கரரால் 2500 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டது சங்கர மடம். கேரள மாநிலத்திலுள்ள காவடி என்ற குக்கிராமத்தில் ஏழைகளான மலையாளப் பிராமண வகுப்பைச் சேர்ந்த பெற்றோருக்கு ஒரே பிள்ளையாகப் பிறந்தவர் ஆதிசங்கரர். ஏறக்குறைய கி.மு.500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிசங்கரர் பிறந்தாரென்று



மாதவன்


கூறப்படுவது உண்டு. முப்பத்திரண்டு வயது வரை மட்டுமே உயிர்வாழ்ந்த ஆதிசங்கரர் தனது இருபதாவது வயதிலேயே துறவறம் பூண்டார். ஆதிசங்கரரின் காலத்தில் இந்து மதத் தத்துவங்களுக்கு விரோதமான 72 மதங்கள் தோன்றியிருந்ததாகவும் ஆதிசங்கரர் தமது கடின உழைப்பால் இந்த மதங்களனைத்தையும் வென்று மக்களை இந்து சமயத்தின்பால் ஈர்த்தெடுத்தாரென்றும் சங்கர மடத்து வரலாறு கூறுகிறது.

இந்தியாவின் தெற்குப் பகுதியான காஞ்சிபுரத்தில் மடத்தை நிறுவிய ஆதிசங்கரர், மேலும் மூன்று மடாலயங்களை இந்தியாவின் வேறு பகுதிகளிலும் நிறுவினாரென்றும் வரலாறு கூறுகிறது. கிழக்கே பூரியிலும் மேற்கே துவாரகையிலும் வடக்கே பத்ரிநாத்திலும் மடாலயங்களை நிறுவினாரென்றும் சங்கர மட வரலாறு கூறுகிறது.

காஞ்சிபுரத்தின் முதல் மடாதிபதியாக ஆதிசங்கரர் பதவியேற்ற அதேவேளை ஏனைய மடாலயங்களுக்கும் மடாதிபதிகளை நியமித்தார். இதனால் ஏனைய மடாலயங்களை விட காஞ்சிபுர மடாலயம் சக்தியும் புகழ் பெற்றதாகவும் திகழ்ந்து வந்தது. இத்தகைய புகழ்மிக்க சங்கர மடத்தின் 68ஆவது மடாதிபதியாகத் திகழ்ந்த சந்திரசெகரேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு இளைய மடாதிபதியாக இருந்து வந்தவர் ஸ்ரீ ஜெயேந்திரர் என்பது குறிப்பிடத் தக்கது. அக் காலகட்டத்திலேயே இருவருக்குமிடையே கருத்து முரண்பாடுகளும் மோதல்களும் இடம்பெற்று வந்ததாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போதைய மூத்த மடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திரருக்கும் இளைய மடாதிபதி விஜயேந்திரருக்குமிடையில் பிணக்குகளும் மோதல்களும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. சந்திரசெகரேந்திர சுவாமிகள் அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்களில் பங்கெடுப்பதில்லை. ஆன்மீகப் பணிகளில் மட்டுமே ஈடுபட்டு வந்தார். ஆனால் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இதற்கு எதிர்மாறானவரென்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. செகரேந்திர சுவாமிகளின் தரிசனம் பெற அரசியல்வாதிகள் பலர் தேடி வந்தாலும் அவர் அரசியலுக்கு இடங்கொடாமல் காஞ்சி மட அலுவல்களை நடத்தி வந்தார். இரு மடாதிபதிகளுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்குகள் முற்றி வெடித்த காரணத்தினால் 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஜெயேந்திரர் சங்கர மடத்தை விட்டு இரவோடு இரவாக வெளியேறினார். மடாதிபதிகள் எப்போதுமே கமண்டலம் மற்றும் தண்டம் ஆகியவற்றைத் தம்முடனேயே வைத்திருக்க வேண்டுமென்பது சங்கர மடத்தின் ஆகம விதி. ஆனால் மூத்த மடாதிபதியுடன் கோபித்துக்கொண்டு மடத்தை விட்டு வெளியேறிய ஜெயேந்திரர், கமண்டலும், தண்டம் ஆகியவற்றை வீசிவிட்டு வெளியேறியமை சங்கர மடத்து ஆன்மீகவாதிகளுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. ஜெயேந்திரர் சொல்லாமல் கொள்ளாமல் மாயமாக மறைந்தமை இந்தியாவெங்கும் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியது. ஜெயேந்திரர் எங்கே போனார்? என்ன செய்யப் போகிறார்? என்பதும் பெரும் மர்மமாகத் திகழ்ந்தது. ஜெயேந்திரரை வலை வீசித் தேடியலைந்த சங்கர மடத்துச் சீடர்கள் நான்கு தினங்களுக்குப் பின்னர் அவர் கர்நாடகத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நதி உற்பத்தியாகும் தலைக்காவிரியென்ற இடத்திலுள்ள கைலாஷ் என்ற ஆசிரமத்தில் தங்கியிருந்த ஜெயேந்திரரை அவரது சீடர்கள் சமாதானப்படுத்தி மீண்டும் சங்கர மடத்துக்கு அழைத்து வந்தனர். இதனால் ஜெயேந்திர சுவாமிகள் மீதான மதிப்பு, மரியாதை மட்டுமல்ல, சங்கர மடத்தின் செல்வாக்கு மீதும் கறை படியத் தொடங்கியது. சொல்ல முடியாத சின்ன விடயத்துக்கு ஓடிப் போனவரென்று அவர் மீது அவப் பெயர் வீழ்ந்தது. சந்திரசெகரேந்திர சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் 69ஆவது மடாதிபதியாகப் பதவியேற்ற ஜெயேந்திரர் சங்கர மடத்தின் செயற்பாடுகளைப் பரிபூரணமாக மாற்றியமைத்தார். அவர் இந்தியாவெங்கும் சங்கர மடத்தின் செல்வாக்கைப் பரப்பப் பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். அத்துடன் சங்கர மடத்தின் நிதியைப் பெருக்கவும் பெரு முயற்சிகளை மேற்கொண்டாரென்றும் கூறப்படுகிறது. 'ஜனகல்யாண்' என்ற அமைப்பை நிறுவிய ஜெயேந்திரர், கிட்டத்தட்ட அதனை ஓர் அரசியல் கட்சி போல் நடத்தத் தொடங்கினாரென்று கூறுகிறார்கள் காஞ்சி மடத்தின் அருகே வாழும் மக்கள்.

ஜெயேந்திரர் மடாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டதும் அரசியல் விவகாரங்களிலும் அக்கறை காட்டத் தொடங்கினார். அயோத்தி 'பாபரி மஸ்ஜித்' விவகாரத்தில் முழுமூச்சோடு செயற்பட்டார். அயோத்திப் பிரச்சினை தொடர்பாகச் சில சமரச யோசனைகளையும் அவர் சமர்ப்பித்தார். எனினும் அவரது யோசனைகள் எவ்வித செயல் வடிவமும் பெறவில்லை. ஆன்மீக விடயங்களுக்குப் புறம்பான விவகாரங்களில் ஜெயேந்திரர் ஈடுபட்டமை சங்கர மடத்துக்குள் மட்டுமல்ல பொதுமக்கள் மத்தியிலும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.



ஜெயேந்திரருடன் ரகு.

ஜெயேந்திரர் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னர் சீனாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தபோது, அவருக்கெதிராக சங்கரராமன் சென்னை ஹை கோர்ட்டில் ரிட் மனுவொன்றினைத் தாக்கல் செய்தார். 'இந்து மத சம்பிரதாயப்படி, சந்நியாசியாக இருக்கும் ஒருவர் கடல் கடந்து வெளிநாடு செல்லக் கூடாது' என்று அந்த மனுவில் சங்கரராமன் குறிப்பிட்டிருந்தார். பின்னர் சங்கர மடத்துக்குள் எழுந்த அழுத்தங்கள் காரணமாகச் சங்கரராமன் இந்த வழக்கை வாபஸ் பெற்றார். எனினும் இந்த விவகாரமும் ஜெயேந்திரரை ஆத்திரமுறச் செய்ததென்று சங்கர மடத்து விசுவாசிகள் கூறுகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் சங்கரராமனின் தாய் காலமானபோது, சங்கர மடத்துக்குச் சென்ற அவரது குடும்பத்தினரை மட நிர்வாகிகள் அவமானப்படுத்தினரென்றும் கூறப்படுகின்றது. வரதராஜப் பெருமாள் கோவிலின் அருகே பின்புறத்தில் ஆஞ்சநேயர் சிலை அமைக்கப்பட்டது. ஆலயத்துக்கருகே பெரிய சிலையொன்றினை அமைப்பது ஆகம விதிகளுக்கு முரணானது என்று கண்டனம் தெரிவித்த சங்கரராமன், மக்கள் மத்தியிலிருந்து கையெழுத்து வேட்டை நடத்தி, அதிருப்திக் கடிதமொன்றினை அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தார். இந்த விடயமும் ஜெயேந்திரரை ஆத்திரமுறச் செய்திருக்கலாம்.

ஜெயேந்திரர் சங்கர மடத்தை விட்டு 1987ஆம் ஆண்டு தலைக்காவிரி என்ற இடத்துக்கு வெளியேறிச் சென்றதையும் சங்கரராமன் வெகுவாகக் கண்டித்தார். ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்குச் சபலங்கள் ஏற்படக் கூடாதென்று சங்கரராமன் காட்டமாகக் கண்டித்து வந்தார். ஜெயேந்திரர் சங்கர மடத்துப் பொறுப்பைக் கையேற்றதும் சங்கரராமன் ஓரங்கட்டப்பட்டார். இது குறித்தும் ஜெயேந்திரரைக் கடுமையாக விமர்சித்த சங்கரராமன் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். "மடத்தில் நடக்கும் சகல விடயங்களும் எனக்குத் தெரியும். கடவுள் என் பக்கம் இருக்கிறார். என்னை யாராலும் வீழ்த்த முடியாது" என்று குறிப்பிட்ட சங்கரராமனை ஜெயேந்திரர் கூலிப்படை வைத்து ஒழித்துவிட்டாரென்று இப்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


2004 ஆகஸ்ட் மாதம் முப்பதாம் திகதி சங்கரராமன் ஜெயேந்திரருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் "நீங்கள் திருந்தவில்லையென்றால் உங்கள் தவறுகள் குறித்துப் பத்திரிகைகளுக்குப் பகிரங்கமாகப் பேட்டி கொடுப்பேன்" என்று மிரட்டியிருந்தார். இக் கடிதத்தினை தமிழகத்திலிருந்து வெளிவரும் வாரப் பத்திரிகையொன்றுக்கு அனுப்பிய சங்கரராமன், ஜெயேந்திரரின் தவறுகளெனக் கூறி பட்டியலொன்றினையும் அனுப்பி வைத்திருக்கிறார்.

இக் கடிதம் அனுப்பி மூன்று தினங்களின் பின்னரே சங்கரராமன் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சங்கரராமன் ஜெயேந்திரருக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில் "மாதவனையும் ஆந்திராவைச் சேர்ந்த சின்ன ஜீயர் சுவாமிகளையும் தீர்த்துக் கட்டும் உங்கள் எண்ணம் ஈடேறாது. மடத்தின் வேலைகளைப் பார்க்காமல், பாவ காரியங்களை மட்டுமே செய்யும் உங்களுக்குத் தக்க தண்டனை கிடைக்கும்" என்று எழுதியிருக்கிறார்.

சங்கரராமன் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு அறுபது நாட்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பிணையில் வெளிவந்த கையோடு இளைய மடாதிபதி விஜயேந்திரரும் அவரது தம்பி ரகுவும் இதே கொலை வழக்குத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சங்கர மடத்துக்குப் போகக் கூடாதென்ற நிபந்தனையோடு விடுவிக்கப்பட்ட ஸ்ரீ ஜெயேந்திரர் தற்போது கலவை என்ற கிராமத்திலுள்ள சங்கர மடக் கிளையில் தங்கியிருந்து பூஜை, புனஸ்காரங்களில் ஈடுபட்டு வருகிறார்.

தைப்பொங்கலன்று பூஜை நடத்திய ஜெயேந்திரர், மாட்டுப் பொங்கலன்று கோமாதா பூஜை நடத்தியிருக்கிறார். சங்கர மடத்தின் அறநிலையக் கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான ரூபாக்களும் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து முடக்கப்பட்டுள்ளன. அதாவது சங்கர மடத்தின் 183 வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன.


சங்கரராமனின் கொலைக்கு இளைய மடாதிபதி விஜயேந்திரர்தான் காரணமென்றும் சங்கர மடத்தில் இடம்பெற்ற பாலியல் பலாத்காரங்கள் மற்றும் சில்மிஷங்களுக்கு விஜயேந்திரரும் அவரது தம்பி ரகுவும்தான் காரணமென்றும் ஜெயேந்திரர் தனிப்பட்டப் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இவ்விருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



விஜயேந்திரர்


சங்கர மடத்துக்கு வரும் பெண் பக்தர்களை வளைத்துப் பிடிப்பதில் வல்லவரென்று வர்ணிக்கப்படும் ரகு, திருப்பதியிலுள்ள விடுதியொன்றில் பக்தையொருவருடன் தங்கியிருந்தபோது பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டதாகவும் விஜயேந்திரரின் செல்வாக்கினால் அவர் விடுவிக்கப்பட்டாரென்றும் மற்றொரு தகவல் கூறுகிறது.

**(தொடரும்.....)**



ஓம், சக்திதுணை என்றுநம்பி வாழ்த்து – சிவ
சக்திதனையே அகத்தில் ஆழ்த்து;
சக்தியும் சிறப்பும்மிகப் பெறுவாய் – சிவ
சக்தியருள் வாழ்கவென்று வாழ்த்து!

– சுப்பிரமணிய பாரதியார்





# பாம்பும் தவளையும்

பாப்பா முரசு சிறுகதை

ஒரு கிணற்றில் கங்காதத்தன் என்றொரு தவளை தன் குடும்பத்தினருடனும், பிற தவளைகளுடனும் வசித்து வந்தது. அது தன் உறவினர்களின் ஓயாத தொல்லையால் மிகவும் மனமொடிந்து போனது. ஒருநாள் அது தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் கப்பியின் மீது தாவி கிணற்யை விட்டு வெளியே வந்தது.

"இந்தத் தவளைகளை எப்படியாவது துன்பத்தில் சிக்க வைக்க வேண்டும்! அதற்கு என்ன செய்வது? நீ துன்பப்படும் பொழுது, ஒருவன் உன்னை மேலும் துன்புறுத்தினாலோ அல்லது உன்னைக் கேலி செய்தாலோ, நீ மீண்டும் பிறந்து அவனுக்கு அதைத் திருப்பிச் செய்! என்று சொல்லியிருக்கின்றார்களே" என்று அந்தத் தவளை அரசன் எண்ணியது.

அப்போது கங்காதத்தனின் கண்களில் பரியதர்ஷன் என்றொரு பாம்பு ஒரு மரத்தின் அடியிலுள்ள பொந்தினுள் செல்வது தென்பட்டது. உடனே, அந்த மரத்தின்மீது தாவி ஏறியது. "இந்தப் பாம்பை கிணற்றுக்கு வரச் செய்து அங்குள்ள தவளைகளையெல்லாம் தின்னச் சொல்ல வேண்டும். முள்ளை முள்ளால் எடுப்பதுபோல், புத்திமான் தன் எதிரிகளை அழிக்க வேண்டும் என்பது பெரியோர் வாக்கு!" என்று அது எண்ணியது.

பிறகு கங்காதத்தன் மரத்தின் மீது இருந்தபடியே, "நண்பனே, பிரியதர்ஷனா! நீ சற்று வெளியே வா, நான் உன்னிடம் பேச வேண்டும்" என்று கூறியது.

ஆனால் அந்தப் பாம்பு மிகுந்த எச்சரிக்கையுடையது. 'யாரது? இது ஒரு பாம்பின் குரல் போல் தெரியவில்லையே! உன்னை அழைப்பது உன் பகைவனா அல்லது நண்பனா என்று தெரியாமல் நீ அவனை நம்பி விடாதே என்பது ஆன்றோர் வாக்கு! அதனால் முதலில் என்னை அழைப்பது யார் என்று தெரிந்து கொள்வோம்' என்று எண்ணிய அந்தப் பாம்பு, "நீ யார்? என்பதை முதலில் சொல்!" என்றது.

"என் பெயர் கங்காதத்தன். நான் தவளைகளில் அரசன். நான் உன்னோடு நட்பு பாராட்ட வந்துள்ளேன்" என்றது தவளை.

"நாமே பிறவிப் பகைவர்கள். நீ சொல்வதை நான் எப்படி நம்புவது? பஞ்சு, நெருப்போடு நட்பு பாராட்ட முடியுமா?" என்று பிரியதர்ஷன் திருப்பிக் கேட்டது.

"நீ சொல்வது சரி! நாம் பிறவிப் பகைவர்கள்தான். ஆனால் எனக்கு உன் உதவி தேவைப்படுகிறது. என்னை அவமதித்த என் எதிரிகளை நீ தின்ன வேண்டும்", என்று கங்காதத்தன் கூறியது.

"யார் உன்னை அவமதித்தது?" என்று பாம்பு கேட்டது.

"வேறு யார்? என்னோடு கிணற்றில் ஒன்றாக வாழும் என் உறவினர்கள்தான்" என்று கங்காதத்தன் பதிலளித்தது.

"நீ கிணற்றில் வசிக்கிறாயா? ஆனால் நான் எப்படி அந்தக் கிணற்றுக்கு வர முடியும்? அப்படி வந்தால் கூட, நான் எங்கே தங்கிக்கொண்டு என் எதிரிகளை கொல்வது? அதனால் இங்கிருந்து போய்விடு, என்னைத் தொல்லை செய்யாதே!" என்று பாம்பு கூறியது.

"முடியாது என்று மட்டும் சொல்லாதே! கிணற்றினுள் செல்வதற்கும், அங்கே நீ தங்குவதற்கும் நான் ஏற்பாடு செய்கிறேன். ஆகவே என்னோடு வா!" என்று தவளை இரங்கிக் கேட்டது.

"எனக்கோ வயதாகி விட்டது. பலவீனமாக இருக்கிறேன். இப்போதெல்லாம் என்னால் ஒரு சுண்டெலியைக் கூடப் பிடிக்க முடிவதில்லை. ஆனால் இந்தத் தவளை என் உணவிற்கு ஓர் எளிய வழியைக் காட்டுறது. அதனால் அதோடு போனால்தான் என்ன" என்று பாம்பு எண்ணியது.

பிறகு அது உரத்த குரலில், "சரி! நான் உன்னோடு வருகிறேன்" என்று சொன்னது.

"அப்படியானால் என்னைப் பின்தொடர்ந்து வா! ஆனால் ஒரு நிபந்தனை. நீ என்னையும் என் குடும்பத்தினரையும் தின்னக் கூடாது. நான் சுட்டிக் காட்டும் தவளைகளை மட்டுமே நீ உண்ண வேண்டும்" என்று கங்காதத்தன் கேட்டுக் கொண்டது.

"கங்காதத்தா, நீ என் நண்பன். அதனால் நான் உனக்கோ, உன் குடும்பத்தினருக்கோ தீமை செய்யமாட்டேன்" என்று பாம்பு, தவளை அரசனுக்கு உறுதிமொழி அளித்தது.

பிறகு அது தன் பொந்திலிருந்து வெளியே வந்து, கங்காதத்தனைப் பின்தொடர்ந்து கிணற்றை அடைந்தது. இரண்டு கப்பியின் வழியே கயிற்றைப் பிடித்து, அதில் தொங்கிக்கொண்டிருந்த வாளியின் உதவியால் கிணற்றினுள் இறங்கின. பிறகு கங்காதத்தன், தண்ணீர் மட்டத்துக்குச் சிறிது மேலே இருந்த பொந்தைப் பாம்புக்குக் காட்டி அதில் பாம்பை தங்கிக் கொள்ளச் சொன்னது.

"இத் தவளைகள் எல்லாம் என் உறவினர்கள்தான். இவைகளைப் பிடித்துத் தின்பாயாக!" என்று கங்காதத்தன் பாம்பைக் கேட்டுக்கொண்டது.

பிரியதர்ஷன், ஒன்றும் பாக்கியில்லாமல் எல்லாத் தவளைகளையும் ஒவ்வொன்றாகத் தின்று தீர்த்தது. அதன் பிறகு தன்னைக் காண வந்த கங்காதத்தனிடம் பாம்பு, "நான் உன் எதிரிகளையெல்லாம் பிடித்துத் தின்று விட்டேன். இப்போது நான் தின்பதற்கு ஒன்றும் இல்லை. நீ தானே என்னை இங்கு அழைத்து வந்தாய், அதனால் நான் தின்பதற்கு ஏதாவது கொடு!" என்று சொன்னது.

"ஆனால் நண்பனே! என் எதிரிகளை அழிக்கத்தான் நான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். என் எதிரிகள் எல்லோரும் தொலைந்துவிட்டார்கள். இப்போது நீ வந்த வழியே உன் இடத்திற்குத் திரும்பிப் போக வேண்டியதுதானே" என்று கங்காதத்தன் பதிலளித்தது.

"அங்கே எப்படி நான் திரும்பிப் போக முடியும்? நான் வந்த அன்றே வேறொரு பாம்பு என் பொந்தில் குடிபுகுந்திருக்கும். அங்கிருந்து அழைத்து வந்த நீ தான் எனக்கு உணவளித்து என்னைக் கவனித்துக்கொள்ள வேண்டும்! இல்லையேல், நான் உங்கள் எல்லோரையும் தின்றுவிடுவேன்" என்று பாம்பு மிரட்டியது.

"இந்தப் பாம்பை இங்கு அழைத்து வந்த நான் ஒவ்வளவு பெரிய முட்டாள்" என்று தன்னை நொந்துகொண்ட தவளை, பிரியதர்ஷனுக்கு தினமும் எவ்வொரு தவளையாக அனுப்பி வந்தது. அதுபோல் கங்காதத்தனுக்குத் தெரியாமல் அந்தப் பாம்பு மேலும் சில தவளைகளைத் தின்று வந்தது.

ஒருநாள் எப்படியோ அந்தப் பாம்பு கங்காதத்தனின் மகனைத் தின்றுவிட்டது.

அதையறிந்த கங்காதத்தன் மிக்க சினத்துடனும் வருத்தத்துடனும், "ஐயோ! இன்னும் என்னவெல்லாம் நடைபெறுமோ?" என்று வருந்தியது.

"இப்போது வருந்தி என்ன பயன்? உங்கள் அன்பிற் குரியவர்களை அழித்து நீங்களே உங்களுக்கு துயரத்தை வரவழைத்துக்கொண்டீர்கள். இங்கிருந்து தப்புவதற்கு உடனே வழிபாருங்கள். இல்லையேல் நாமும் கொல்லப்படுவோம்" என்று அதன் மனைவி கேட்டுக் கொண்டது.

நாட்கள் சென்றன. கங்காதத்தனைத் தவிர, அந்தக் கிணற்றிலிருந்த எல்லாத் தவளைகளும் பாம்பினால் தின்னப்பட்டு விட்டன.

அதனால் பாம்பு, கங்காதத்தனிடம் தனக்கு மேலும் தவளைகள் வேண்டும் என்று கேட்டது. இதுதான், தான் தப்புவதற்குத் தகுந்த தருணம் என்று கங்காதத்தன் நினைத்தது.

"நண்பனே, அக் கிணற்றிலுள்ள தவளைகளை எல்லாம் ஒன்று விடாமல் நீ தின்னு விட்டாய். ஆனால் நான் இருக்கும் வரை உனக்குப் பசியில்லாமல் பார்த்துக் கொள்கிறேன். என்னை இங்கிருந்து போக விடு. நான் வெளியே போய் உனக்கு வேண்டிய தவளைகளைக் கொண்டு வருகிறேன்" என்று தவளை சொன்னது.

"நீ என் சகோதரனைப் போன்றவன். நீ என்னிடம் நல்ல முறையில் நடந்துகொண்டால் நான் உன்னைத் தின்னமாட்டேன். நீ சொல்வதைப் போல் செய். அப்போது என்னை நான் என் தந்தையைப் போல் கருதுவேன்!" என்று பாம்பு அனுமதியளித்தது.

உடனே கங்காதத்தன் தொங்கிக்கொண்டிருந்த வாளியில் தாவி ஏறி, கயிற்றைப் பிடித்துக் கிணற்றின் வெளியே வந்து, மற்றொரு கிணற்றுக்குச் சென்று விட்டது.

இதற்கிடையே கங்காதத்தன் வரவிற்காகப் பாம்பு காத்துக்கொண்டிருந்தது. நாட்கள் சென்றன ஆனால், தவளை அரசன் திரும்பி வருவதற்கான அடையாளத்தையே காணோம்.

இறுதியில் பாம்பு அக் கிணற்றில் இருந்த ஒரு பல்லியிடம், "அம்மணி, நீங்களும், தவளை அரசனும் நீண்ட நாள் நண்பர்கள். நீங்கள் கங்காதத்தன் வேறு கிணற்றில் தங்கியிருந்தால் அவனைக் கண்டுபிடித்து உடனே இங்கு திரும்பி வரச் சொல்லுங்கள். அவன் தனியாக வந்தாலும் பாதகமில்லை! அவனை இழந்தது எனக்குப் பெரும் துன்பத்தைத் தருகிறது. அவனை நான் துன்புறுத்தினால் இப்பிறவியில் எனக்குச் சேர்ந்துள்ள புண்ணியமனைத்தும் அவனுக்குச் சேரும் என்று சொல்லுங்கள்." என்று கேட்டுக்கொண்டது.

வேறொரு கிணற்றில் கங்காதத்தன் வசிப்பதை அந்தப் பல்லி ஒருவாறு தேடிக் கண்டுபிடித்துவிட்டது. பாம்பு சொன்னதையெல்லாம் கங்காதத்தனிடம் கூறியது.

அதற்கு கங்காதத்தன், "நான் அந்தக் கிணற்றுக்கு மீண்டும் வரமாட்டேன். பசியுடன் இருக்கும் பகைவனை ஒருபோதும் நம்ப முடியாது!" என்று மறுதலித்து விட்டது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **26.01.2005.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **580**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 578

பரிசுக்குரியவர்:
எஸ். ஜனுஷாந்,
20, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஜே. சப்ரி, மாங்குளம், நேரியகுளம். | ஜெ. ஜெலக்ஷனா, யா/விக்னேஸ்வரா வித்தியாலயம், சங்கானை. |
| க. சுகன்யா, கம்பளை ஸ்ரீ முத்துமாரிதமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. | ரவீந்திரன், இல.16, 3ஆம் கட்டை, செல்வநாயகபுரம், திருகோணமலை. |
| ரா. தீபன், தரம் 9, மமா/கொத்/குயின் ஸ்பெரி த.வி., கெட்டபுவா. | த. கிரிஜா, பொல்வத்தை, இளவாலை. |
| எம். கிறிஸ்டீபுன், நு/ நம்மாதா பாடசாலை, நுவரெலியா. | கு. நிலாஜினி, மகா வித்தியாலய மாவத்தை கொழும்பு 13. |
| யோகராசா கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | எஸ். நிவேதா, கண்டி வீதி, வவுனியா. |

# ஆத்திசூடி

## சனி நீராடு

நீ சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளி.

நிரஞ்சலா, கண்டி. – ஔவையார்

# பாரதிக்கு ஒரு மடல்



பாமணக்க தமிழ்சொன்ன
பாரதியே நீயொருக்கால்
மீண்டும் வந்து

பூமணக்கும் புதுமணம்போல்
பிள்ளையரின் மனஞ்சிறக்கப்
பாடு மெந்தன்

யாமறிந்த மொழிகளிலேயே
தமிழ்மொழி போலினிதில்லை
என்று கவிப்

நாமணக்க நீ நிறைந்து
நற்றமிழில் சில பாக்கள்
பாடும் அய்யா!

# அதிசய உலகம்

## பாம்புக்கும் எதிரிகள்



**தென்** ஆபிரிக்காவில் உள்ள 'பாட்ஜர்' என்னும் கரடி போன்ற பிராணி எல்லாவிதப் பாம்புகளுக்கும் எதிரிதான். பாட்ஜரின் தோல் மிகவும் தடித்து உரோமங்கள் அடர்ந்து இருக்கும். பாம்பி விஷயப் பற்கள் இதன் தோலை துளைக்க முடியாது. விஷம் உடலுக்குள் இறங்காது. பாட்ஜர் தன" கூரிய வளைந்த நகங்களினால் பாம்பைக்கிழித்துக் கொன்று தின்றுவிடும்.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| 1. தேசிய சுங்க தினம் | ஜனவரி 26 |
| 2. உலக மகளிர் தினம் | மார்ச் 08 |
| 3. உலக சுகாதார தினம் | ஏப்பிரல் 07 |
| 4. தேசிய தொழிலாளர் தினம் | மே 01 |
| 5. உலக செஞ்சிலுவைச் சங்க தினம் | மே 08 |
| 6. உலக தகவல் தினம் | மே 17 |
| 7. ஐரோப்பிய நாடுகள் தினம் | மே 24 |
| 8. உலக சுற்றாடல் தினம் | ஜூன் 05 |
| 9. ஹிரோஷிமா தினம் | ஆகஸ்ட் 06 |
| 10. உலக சமாதான தினம் | ஆகஸ்ட் 06 |
| 11. நாகசாகி தினம் | ஆகஸ்ட் 09 |
| 12. உலக இலக்கிய தினம் | செப்டெம்பர் 08 |
| 13. வயது முதிர்ந்தோர் தினம் | ஒக்டோபர் 01 |
| 14. உலக மிருக தினம் | ஒக்டோபர் 02 |
| 15. உலக தபால் தினம் | ஒக்டோபர் 09 |
| 16. உலக உணவு தினம் | ஒக்டோபர் 16 |
| 17. ஐக்கிய நாடுகளின் தினம் | ஒக்டோபர் 24 |
| 18. மனித உரிமைகள் தினம் | டிசெம்பர் 10 |




# நவீன பாலன் தொழுவம்



கடந்த நத்தார் தினத்தில் உருவாக்கப்பட்ட இந்த நவீன பாலன் தொழுவம் இங்கிலாந்தின் பிரபல 'மெடம் டுஷேட்' மெழுகு பொம்மை அருங்காட்சியகத்திலே வைக்கப்பட்டிருந்தது. இங்கு வைக்கப்பட்டிருந்த சகல மெழுகு பொம்மைகளும் தற்போதைய உலகப் பிரபலங்கள் பலரின் உருவச் சிலைகளாக அமைந்ததே இதிலுள்ள விசேடம். இங்கு இடையர்களாக நடிகர்களான சாமுவேல் எல் ஜக்ஷன், ஹியு க்ரான்ட், கிராம் நோடின் என்போரும், சூசையப்பர், மரியாள் ஆக இங்கிலாந்தின் பிரபல கால்பந்தாட்ட வீரர் டேவிட் பெக்கம், அவர் மனைவி விக்டோரியாவும், தேவதைகளாக அவுஸ்திரேலியப் பாடகி கயிலி மினோக்கும் மூவிராஜாக்களாகப் பிரித்தானியப் பிரதமர் டோனி பிளேயர், எடின்பரோ மகாராஜா, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் என்போர் மெழுகு பொம்மைகளாகச் சித்திரிக்கப்பட்டிருந்தனர்.

# கையால் எடுக்க முடியாத வைன்



இங்கிலாந்தின் சுதாப் ஏல விற்பனை நிறுவனத்தால் விழாக் காலத்திற்காக உலகிலேயே மிகப் பெரிய வைன் போத்தலை ஏலத்தில் விட ஏற்பாடு செய்யும் காட்சியே இது.

அவர்கள் இவ் வைன் போத்தலை 56 இலட்சத்திற்கும் கூடுதலாக விற்பனை செய்ய உத்தேசித்திருப்பதோடு அதனால் கிடைக்கும் வருமானத்தையும் புண்ணிய கருமங்களுக்காகச் செலவிட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பேய்க் குளியல்




ஐரோப்பிய நாடுகளில் பனிக்காலம் ஆரம்பித்துள்ள இக் காலத்தில் மக்கள் நான்கு ஐந்து கம்பளி ஆடைகளை அணிந்து கொண்டுதான். வீதிகளில் நடமாடுவர்கள் ஆனால் நத்தார் தினத்தன்று உடலில் எதுவித ஆடையும் இல்லாமல் நத்தார் தாத்தாவின் தொப்பியை மாத்திரம் தலையில் அணிந்து கொண்டு ஜேர்மனியர் சிலர் பெர்லினில் ஒரன்கோ வாவியில் இறங்கி நீராடிய காட்சியே இது. நத்தார் நன்னாளன்று இவ்வாறு ஒரன்கோ வாவியில் இறங்கி நீராடினால், இனி வரும் காலங்களில் சிறப்பாகவும் தேக ஆரோக்கியத்துடனும் வாழலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் நிலவுவதே இதற்குக் காரணம்.

# ஓடும் வீடு



வாகனத்தில் தூரப் பயணம் போய், தங்குவதற்கு ஓர் இடம் கிடைக்கவில்லை என்றால், போன வாகனத்திலேயே தங்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. ஆனால், அப்படியில்லாமல் அந்த வாகனத்தை சில நிமிடங்களில் வீட்டைப் போல் மாற்றிக்கொள்ளக் கூடிய வசதி படைத்த ஓர் வாகனம் இப்போது உள்ளது. ஆம். இந்த வாகனத்தோடு பொருத்தப்பட்ட கூடாரத்தைக் கொண்டு வீடு ஒன்றை அமைப்பதற்கு சில நிமிடங்கள் மாத்திரமே செலவாகும்.

# விண்கலம்



பார்த்த பார்வைக்கே விமானம் ஒன்று ஆற்றில் விழுந்துள்ளது போல் தோன்றினாலும் உண்மையிலேயே இது விமானம் ஒன்றின் பாகத்தைப் பயன்படுத்தி உருவாக்கிய நவீன ரக வாகனமே. அமெரிக்காவின் புளோரிடாவில் காணக் கிடைத்த இந்த அருமையான வாகனத்தை உருவாக்கியிருப்பது போயிங் 307 விமானத்தின் மேல் பாகத்திற்கு, படகு ஒன்றின் கீழ் பாகத்தைப் பொருத்தியே.

எகிப்திய பிரமிட்டுகளைப் போலவே இந்த சீனப் பிரமிட்டும் அண்மையில் மிகப் பிரபலமடைந்தது. சீனாவின் ஷாங்ஷோங் நகரில் அமைந்துள்ள பூங்காவில் காணக் கிடைந்த இந்தப் பிரமிட்டை க்ரேப் ஃபுருட் என்ற பழத்தை மாத்திரம் பயன்படுத்தியே உருவாக்கியுள்ளனர். அதற்காக 10000 க்ரேப் ஃபுருட்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

# பழப் பிரமிட்





# உலகின் மிக நீளமான சுருட்டு

போர்டோரிகோவைச் சேர்ந்த சுருட்டுத் தயாரிக்கும் தொழிலாளி பேட்ரிசியோ பெனா (வயது 43). இவர் 62 அடி நீளத்தில் உலகின் மிக நீளமான சுருட்டைத் தயாரித்துள்ளார். இந்தச் சுருட்டு 20 பவுண்டு புகையிலை. 100 இலைகள் ஆகியவை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான தயாரிப்புச் செலவு ரூ. 21/2 இலட்சம் ஆகும். ஆனால் இந்தச் சுருட்டை விலைக்கு விற்கப்போவதில்லை என்று பேட்ரிசியோ அறிவித்துள்ளார். படத்தில் சாதனைச் சுருட்டுடன் பேட்ரிசியோ காட்சியளிப்பதைக் காணலாம்.



சரத்குமார் - நாயன்தாரா
ஐயா

## நயன்தாரா - அன்னப்பறவை

'சந்திரமுகி' படத்தில் ரஜினிக்கு ஜோடி என்பதால் ரொம்ப சந்தோஷத்தில் இருந்தார் நயன்தாரா. ஆனால், உண்மையில் பிரபுவுக்கு ஜோடியாக நடிக்கும் ஜோதிகாவுக்குத்தான் நடிப்பில் ஸ்கோர் செய்ய வாய்ப்பு அதிகம் என்று அறிந்ததும் சோர்ந்து போயுள்ளார்.

பி.வாசு இயக்கத்தில், சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பில் உருவாகிவரும் 'சந்திரமுகி'யில் ரஜினிக்கு ஜோடியாக கேரளத்துச் சிட்டு நயன்தாரா நடிக்கிறார். ரஜினியுடன் ஜோடி சேர பல முன்னணி நடிகைகளும் போட்டி போட்ட நிலையில் 'ஐயா' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்க வந்த நயனதாராவுக்குத் திடீரென அந்த லக் அடித்தது.

அதே நேரத்தில் ஜோதிகாவுக்கு படு அட்டகாசமான ரோலாம். நடிப்பில் மெருகு கூடிவிட்ட ஜோதிகா செட்டில் வெளுத்து வாங்க, நயன்தாரா வெறுத்துப் போய் இயக்குநர் வாசுவிடம் சண்டைக்கே போய்விட்டாராம்.

'எந்தா சாரே' என்று மலையாளத்திலேயே விசனப்பட்டுள்ளார். நயன்தாரா. அவரை மலையாளத்திலேயே சமாதானப்படுத்திய வாசு (இவரும் பூர்வீகம் கேரளாதான்), "ஜோதிகாவுக்கு நடிப்புக்கு மட்டும் வாய்ப்புள்ளது. பாட்டுக் கிடையாது. ஆனால் படத்தில் எல்லாப் பாடல்களிலும் நீதான் இடம்பெறப் போகிறாய். டான்ஸ் மூலமே தமிழ் சினிமாவில் "பெரும் புகழ் பெற்றவர்கள் பட்டியல் இதோ" என்று பெரிய லிஸ்ட்டை எடுத்துவிட்டு சமாதானப்படுத்தினாராம் வாசு.

இந்தப் படத்துக்கு ராஜு சுந்தரம்தான் நடனம் அமைக்கிறார். ரஜினிக்கு அவர் சில ஸ்ரெப்பைச் சொல்லி ஆடச் சொல்ல, ரஜினி தவறாக ஒரு ஸ்ரெப் வைத்தாராம். பின்னர் சரி செய்துகொண்டு ராஜு சொன்னது மாதிரி ஆடினாராம்.

ஆனால் ரஜினி முன்பு போட்ட டான்ஸில் இருந்த ஸ்டைல் ஸ்பொட்டில் இருந்த அனைவருக்கும் பிடித்துப் போய்விட "சார்! நான் சொன்ன ஸ்டெப் வேண்டாம். இப்போ நீங்க போட்டீங்களே ஒரு டான்ஸ் அதையே வச்சுக்குவோம்" என்று சொல்லிவிட்டாராம் ராஜு.

'என்னப்பா, அப்ப படத்துல உனக்கு வேலையே இல்லையா" என்று கிண்டல் அடித்தாராம் ரஜினி.

இப்படி நிறைய சுவாரஸ்யங்களுடன் போய்க்கொண்டிருக்கிறதாம் 'சந்திரமுகி'.

நயன்தாரா என்றால் அன்னப்பறவை என்ற அர்த்தமாம்....

# சட்டச் சிக்கலில் சந்திரமுகி

கல்கத்தாவில் வசிக்கும் ஒரு ஆராய்ச்சியாளரும் அவர் மனைவியும் சொந்த வேலையாகத் தங்கள் சொந்த ஊரான கேரளாவில் உள்ள ஒரு கிராமத்திற்கு வருகிறார்கள். ஆராய்ச்சியாளரின் பூர்வீக வீட்டில் தங்குகிறார்கள். அந்த வீட்டில் ஒரு அறை பூட்டியே இருக்கிறது. பழைய சாமான்கள் அங்கே கிடக்கின்றன. தேவையில்லாமல் அந்த அறையைத் திறக்க வேண்டாம் என ஆராய்ச்சியாளர் ஏதோ ஒரு மூடில் சொல்லிவிட்டுப் போகிறார். அதில் ஏதோ முக்கிய இரகசியம் இருப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்ட மனைவி, கணவன் இல்லாத நேரம் பார்த்து அந்தக் கதவைத் திறக்கிறாள். அங்கே ஒரு நாட்டியக்காரியின் புகைப்படம் இருக்கிறது.

அவளும் இன்னொரு இளைஞனும் காதலிக்கிறார்களாம். அந்த இளைஞனின் வீட்டார் இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஆனாலும், அவளையே கைபிடிப்பேன் என அடம்பிடிக்கிறார் அந்த இளைஞன். இதனால் கடுப்பான இளைஞனின் அப்பா அந்த நாட்டியக்காரியை நயவஞ்சகமாகக் கொலை செய்து விடுகிறார். கொலை செய்யப்பட்ட நாட்டியக்காரியின் ஆவி அந்த அறைக்குள் உலவுகிறது. அந்த ஆவி ஆராய்ச்சியாளரின் மனைவிக்குள் புகுந்துவிடுகிறது.

இதைத் தொடர்ந்து நான்தான் 'சந்திரமுகி' எனச் சொல்லிக்கொண்டு ஆராய்ச்சியாளரின் மனைவி வித்தியாசமாக மாறுகிறாள். அவளின் போக்கு ரொம்பப் புதிராக இருக்கிறது. ஒரு கட்டத்தில் கணவனையே கொலை செய்ய வருகிறாள். இந்தச் சூழ்நிலையில் அங்கே வந்து தங்கும் ஆராய்ச்சியாளரின் நண்பரான ஒரு மனோதத்துவ டாக்டர் உண்மைகளைக் கண்டுபிடிக்கிறார். என்ன உண்மை?

இந்த அறைக் கதவைத் திறக்க வேண்டாம் என ஆராய்ச்சியாளர் கேஷ"வலாகச் சொல்கிறார். ஆனால், அச்த அறைக் கதவைத் திறந்து அதற்குள் நாட்டியக்காரி இருப்பதாகவும், அவள் கொல்லப்பட்டிருப்பதாகவும், அவள் ஆவி தனக்குள் புகுந்ததாகவும், ஒரு கற்பனை செய்துகொள்கிறாள் அந்த மனைவி. இது ஒரு மன வியாதி என்கிற உண்மையை டாக்டர் கண்டுபிடிக்கிறார்.

இதுதான் 'மணிச்சிரத்தாழ்' என்கிற மலையாளப் படத்தின் கதை. ஆராய்ச்சியாளராக சுரேஷ்கோபி, மனைவியாக ஷோபனா, மனோதத்துவ டாக்டராக மோகன்லால் நடித்திருந்தனர். இந்தப் படத்தின் கதையை எழுதியவர் மதுமுட்டம்.

இந்தப் படத்தை சில மாற்றங்களோடு 'ஆப் த ராமி' என்ற பெயரில் கன்னடத்தில் இந்த வருடம் எடுத்திருந்தார் டைரக்டர் பி.வாசு. ரஜினி இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு இதைத் தமிழில் பண்ணலாம் என்ற பிறகுதான் 'சந்திரமுகி' படம் உருவானது. இந் நிலையில் என் அனுமதி இல்லாமல் எனது கதையைத் திருடி 'சந்திரமுகி' படம் எடுக்கிறார்கள். அதனால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பேன்' என ஒரிஜினல் கதாசிரியர் மதுமுட்டம் அறிவிக்க, பெரிய சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது.


இது குறித்து 'சந்திரமுகி' படப்பிடிப்பில் இருந்த பி.வாசுவிடம் கேட்டோம் :

'மணிச்சித்திரத்தாழ்' படத்தை ரைட்ஸ் வாங்கித்தான் கன்னடத்தில் பண்ணினோம். ஆனால், தமிழில் அதிலிருந்து ஒரு நூலைத்தான் எடுத்திருக்கிறோம். மற்றபடி, பின்னப்பட்டதெல்லாம் என்னுடைய சொந்தச் சிந்தனைதான். இது எப்படித் திருட்டுக் கதையாகும். ஒரிஜினல் கதைப்படி மனோதத்துவ டாக்டர் கேரக்டர் இடைவேளைக்குப் பின்னாடிதான் படத்தில் வரும். ஆனால் சூப்பர் ஸ்டார் ரஜினியை வைத்துக்கொண்டு அவரை இடைவேளைக்குப் பிறகு காட்ட முடியுமா? அதனால் முழுக்க முழுக்க கதையை மாற்றிவிட்டேன். எனவே, இதை திருட்டுக் கதை எனச் சொல்ல முடியாது என ஆணித்தரமாக மறுக்கிறார் பி.வாசு.

ஒரிஜினல் கதையிலிருந்து நாட் எடுத்து இருந்தாலும் அது திருட்டுத் தானே! அதனால்தான் மதுமுட்டம் கோர்ட்டுக்குப் போவேன் என்கிறார். ஆனால், சட்டப்படி வழக்குத் தொடர்ந்து ஒரிஜினலில் இருப்பது போல் 16 காட்சிகள் இருந்தால் தான் திருட்டுக் கதை என நஷ்டஈடு கேட்க முடியும். 15 காட்சிகள் வரை ஒரிஜினலில் இருப்பது மாதிரி பண்ணிவிட்டு 16ஆவது காட்சியை மாற்றிவிட்டாலும் அது திருடப்பட்ட கதை ஆகாது. சட்டம் அப்படிச் சொன்னாலும், தர்மப்படி சில விஷயங்களை யோசிக்கத்தான் வேண்டும்.

கதை பிரச்சினை, சிம்ரன் பாதியில் விலகியது, சினேகா நடிக்க மறுத்தது, த்ரிஷா மறுத்தது, ஐஸ்வர்யாராய் மறுத்தது எனப் பல பிரச்சினைகளோடுதான் உருவாகி வருகிறது 'சந்திரமுகி'.





சரத்குமார்



நமீதா

## நம்பர் ஒன் போட்டியில் த்ரிஷா, ஸ்னேகா

இந்த ஆண்டின் டாப் ஹீரோயின் யார் என்ற எதிர்பார்ப்பு இப்போதே ஏற்பட்டுள்ளது.

சிம்ரன் பீல்ட் அவுட்டாகிவிட்டார். ஜோதிகா கல்யாண மூடுக்கு வந்து, படங்களைக் குறைத்துக்கொண்டு வருகிறார்.

சோனியா அகர்வால் அவ்வப்போது (செல்வராகவன், தனுஷ் படங்களில் மட்டும்) நடித்து வருகிறார். கவர்ச்சியை மட்டுமே மூலதனமாக வைத்துள்ள நமீதா எந்தளவுக்கு வெற்றி பெறப் போகிறார் என்பது தெரியவில்லை.

இந் நிலையில் சிம்ரன் வகித்த முதலிடத்தைப் பிடிக்க ஸ்னேகாவுக்கும் த்ரிஷாவுக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

2004ஆம் ஆண்டில் த்ரிஷாவும், ஸ்னேகாவும்தான் அதிக பரபரப்பையும் பெரும் வெற்றியையும் பெற்ற நடிகைகள்.


த்ரிஷாவுக்கு 'கில்லி'யும், ஸ்னேகாவுக்கு 'ஆட்டோகிராப்' படமும் பெரும் பெயரைப் பெற்றுக் கொடுத்தன. த்ரிஷா நடித்தது ஒரே ஒரு படம்தான். இருந்தாலும் 'கில்லி' படம் மூலம் த்ரிஷா விஸ்வரூபமெடுத்தார்.

அதேபோல, ஸ்னேகா நடித்திருந்த 'ஆட்டோகிராப்' படம் பெரும் வெற்றியைப் பெற்றது. அடுத்து 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' படத்தில் கமலுடன் ஜோடி சேரும் வாய்ப்பும் ஸ்னேகாவுக்குக் கிடைத்தது. பெயரைப் போலவே படமும் ஓரளவு வசூல்ராஜாவாகவே இருந்தது.

2005ஆம் ஆண்டின் சூப்பர் ஹீரோயின் என்ற பெயரை த்ரிஷா பிடிப்பாரா அல்லது ஸ்னேகா கைப்பற்றுவாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# சினி விசிட்

**தெ**லுங்கின் பிரபல நடிகைகளில் ஒருவர் அங்கீதா. அம்மணியின் தமிழ் பிரவேசம் 'லண்டன்' படம் மூலம் அரங்கேறி இருக்கிறது. பிரசாந்துக்கு ஜோடியாக சுந்தர் சி. இயக்கத்தில் அங்கீதா நடித்துக்கொண்டிருக்கிறார். கொடுத்து வச்ச மகராசி. முழுப் படமும் லண்டனிலேயே தயாரா கிறது. அதிர்ஷ்டம்னா இப்படித்தானே இருக்கணும். அங்கீதாவுக்கு அங்கமெல்லாம் மச்சம் போலருக்கு!



சரத்குமார் - நாயன்தாரா
ஐயா



தொலானி

## விக்ரமுக்கு 'நோ' சொன்ன ஜோ

**வி**க்ரமுடன் நடிக்க வந்த வாய்ப்பை வேண்டாம் என்று மறுத்துவிட்டார் ஜோதிகா. கோலிவுட்டில் பென்ஸ் கார் வைத்திருப்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதில் ஜோதிகாவும் ஒருவர். அந்தக் கார் மீது ஜோவுக்கு அலாதிப் பிரியம். எங்கு சென்றாலும் அதில் பயணிப்பதுதான் வழக்கம்.

'சந்திரமுகி' படப்பிடிப்பு முடிந்து திரும்பி வரும்போது, ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த மரக்கட்டைகளில் மோதி, காரின் ஒரு பகுதி டமேஜ் ஆகிவிட்டது.

இதனால் ஜோதிகா ஒரு வாரத்திற்கு அப்செட் ஆகியிருந்தார். சரி, கதைக்கு வருவோம்.

தற்போது சூர்யாவிற்கு ஜோடியாக 'மாயாவி' படத்திலும், பிரபுவுக்கு ஜோடியாக 'சந்திரமுகி' படத்திலும் ஜோதிகா நடித்து வருகிறார். இரண்டுமே பெரிய பேனர் படங்கள்.

அதுமட்டுமல்லாமல் தனக்கு முக்கியத்துவம் உள்ள கேரக்டர்கள் என்பதால்தான் இந்தப் படங்களை ஒத்துக்கொண்டார். இதற்கிடையே வந்த வேறு சில வாய்ப்புகளையும் ஜோதிகா நிராகரித்துவிட்டார்.

ஏன் என்று கேட்கிறீர்களா? இந்த ஆண்டின் மத்தியில் ஜோதிகாவுக்கும், அவரது மனம் கவர்ந்தவருக்கும் கெட்டிமேளம் கொட்டப்படுவது உறுதியாகி வருகிறதாம். பேச்சுவார்த்தைகள் முடிந்துவிட்டதாம்.



சிங்கள திரையுல
கலைஞர்களுடன் விஜய்

**க**லைஞர்களின் உதவி இளைய தளபதி விஜய், புரட்சிக் கலைஞர் - விஜயகாந்த்

ஆகியோர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாமே முன்வந்து உதவியுள்ளார்கள். விஜய் 250000 ருபாவுடன் 250 மூட்டை அரிசியையும் விஜயகாந்த் 550000 ருபாவையும் வழங்கியுள்ளனர். இவ்வுதவிகளை இலங்கையின் பிரபல பட இறக்குமதியாளரான அன்ரனிராஜ் மூலமாக வழங்கியுள்ளார்கள். அன்ரனிராஜ் இத் தகவலை ஜனவரி ஏழாம் திகதி ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசும்போது தெரிவித்தார். இதுபற்றி அன்ரனிராஜா தெரிவிக்கும்போது விஜய்யும் விஜயகாந்தும் உதவ முன்வந்தது போல ஏனைய கலைஞர்களும் இலங்கைக்கு உதவ முன்வர வேண்டும் எனவும், அதற்குத் தன்னாலான பங்களிப்பை செய்ய தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். விஜய் - விஜயகாந்த் ஆகிய இருவராலும் வழங்கப்பட்ட உதவிகள் வடக்குக் கிழக்கு என்று குறிப்பிடாமல் இலங்கையில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சேர வேண்டும் என்று கூறினார். இதைவிடவும் இலங்கை - இந்தியக் கலைஞர்கள் ஒன்றிணைந்து மாபெரும் இசை நிகழ்ச்சியொன்றை நடாத்தி, அதனூடாகப் பெறப்படும் நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் நோக்கமிருப்பதாகவும், இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டுப் பணியில் இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், ஆங்கில ஊடகங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பங்களிப்புச் செய்வதோடு, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் குழுவில் ஊடகங்களைச் சேர்ந்த ஒருவர் அங்கம் வகித்துச் செயற்பட வேண்டும்மெனவும் வேண்டுகோள் விடுத்தார். இதேவேளை எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி இரவு எட்டு மணிக்கு வீதிக்கு வந்து விளக்கு ஏற்றி ஐந்து நிமிட மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் மக்களுக்குத் தெரிவிப்பதாகத் தெரிவித்தார். இதற்கு சகல ஊடகங்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



விஜய் + ரவிகிருஷ்ணா + ரம்பா + S.A. சந்திரசேகரன்
சுக்கிரன்படப்பிடிப்பில்

நமீதா

## ஸ்ரீகாந்துக்கு எப்போ கல்யாணம்?

"எப்போ கல்யாணம்" என்று கேட்டால், "நான் சின்னப் பையன்தானே, எனக்கென்ன அவசரம்" என்கிறார் நடிகர் ஸ்ரீகாந்த்.

தமிழ் சினிமாவில் இரசிகைகளுக்குப் பிடித்த ஹீரோக்களில் ஸ்ரீகாந்தும் ஒருவர். முதல் படமான 'ரோஜாக்கூட்டம்' ஹிட்டானதிலிருந்து ஸ்ரீகாந்திற்கு என ஒரு இரசிகை கூட்டம் இருக்கிறது. அதற்கு அவரது அப்பாவித்தனமான முகமும் காரணமாக இருக்கலாம்.

அவருக்குக் கிடைத்த வேடங்களும் அத்தகையவையே. ஆனால் காதல், குடும்பம் என்று நடித்துக்கொண்டிருந்தவர் ஆக்ஷன் ஹீரோவாக ஆசைப்பட்டு 'ஜூட்', 'போஸ்' ஆகிய படங்களில் நடித்தார்.

மிகவும் ரிஸ்க் எடுத்து இவர் நடித்த இந்த இரு படங்களும் சரியாகப் போகவில்லை. இதனையடுத்து மீண்டும் காதல் படங்களுக்கே திரும்பியுள்ளார் ஸ்ரீகாந்த்.

"இதுவரை வாடகை வீட்டில்தான் குடியிருந்தேன். இப்போதுதான் வடபழனியில் ஒரு வீடு வாங்கியுள்ளேன். கல்யாணம் இப்போதைக்கு இல்லை . ஏன்னா நான் சின்னப் பையன்தானே" என்றார் ஸ்ரீகாந்த்.

அது சரி!




## வெளிச்சத்தை தேடி மலையகம்

நாகரீகக் குதிரையின்
பின்னால் நாங்களும்
ஓடிக்கொண்டிருக்கிறோம்

நாம் ஈரடி வைத்தால்
அது எட்டடி பாயும்
இருந்தும் ஓடுகிறோம்
எட்டிப் பிடிப்பதற்கு

வறுமைச் சேற்றில்
வழுக்கி விழுந்து
எழுந்து ஓடுகிறோம்

பிடிமானங்கள் ஏதுமில்லை
நம்பிக்கை கோல்களை
ஊன்றி ஊன்றியே
நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

இனவாத முட்களில்
காயப்பட்டும் எங்கள்
வெற்றுப் பாதங்கள்
இன்னும்
ஓடிக்கொண்டே இருக்கின்றன.

இதுவரை
கால் தடங்கள் கூட
எம் கண்களுக்கு அகப்படவில்லை
ஆயினும்
கடிவாளத்தைப் பிடிப்பதற்காய்
தொடர்கிறது
எங்கள் பயணம்.

*—மு.கீர்த்தியன்,*
*ஸ்ரீபாத தேசிய கல்வியியர் கல்லூரி.*

## குடைக்குள் குஜராத்!

வருவது நீதான்
குஜராத் பூகம்பமொன்று
குடைபிடித்து வருவதாய்
மனசு சொல்லியது!

இதயத்தின்
லப்....
டப்....
சத்தங்களின்
துளி இடைவெளியில்
நிச்சயமாய்
நீ இருக்கிறாய்!

நான்
காதல் செடியை
நட்டு வைப்பதிலே
நாட்டமாய் இருக்கிறேன்
நீ
பிடுங்கி எறிவதிலே
பிடிவாதமாய்
இருக்கிறாய்!



எனக்கான
கடிதங்கள்,
கவிதைகள்,
பார்வை,
புன்னகை,
எல்லாமே
நின்று போனாலும்
எங்காவது - ஓர்
மூலையில்
உனக்காகவும்
சுவாசித்துக்கொண்டே
இருப்பேன்!

*—நஸீம் ரூமி, புத்தளம்.*

## என்னவளுக்கு!

என்
அன்பிற்கினியவளே!
அதிகாலைப் பொழுதினில்
குயில்கள் ஓசை
கேட்கும் போதெல்லாம்
உன்னது வார்த்தைகளின்
இனிமையான,
ரம்மியமான
ராகங்களாகவே
எனை ஆர்ப்பரிக்கின்றது!

மாலைப்பொழுதினில்
சூரியனவன்
மறைந்து கொள்ளும்
கண்கொள்ளாக் காட்சியது
உன்னது வெட்கத்தையே
ஞாபகப்படுத்துதிங்கு!

காலை,
மாலையாகவே
உன்னைப் பற்றிய
ஞாபகங்களையே
உள்ளுக்குள்
சுமந்து கிடக்கிறது
இங்கே ஓர் மனசு!

*—எம்.என்.எம்.நிப்றாஸ்,*
*பெரியநீலாவணை.*

## கடலில் காவியமான உடன் பிறப்புகளுக்கு கண்ணீர் அஞ்சலி

**மரணமே உனக்கு மரணம் வராதா!**
**கொந்தளிக்கும் கடலே - உனக்கு**
**இரக்கம் இல்லையா!**
**நீ உனக்குள் புதைத்து வைத்திருக்கும்**
**உயிர்கள் எத்தனை எத்தனை?**
**எம் பசிக்கு மீனினத்தை எமக்குத்**
**தந்து**
**உன் பசிக்கு மனித இனத்தை**
**எடுத்துக்கொண்டாயே!**
**திருமலை திருக்கோணேஸ்வரர்**
**மண்ணைத் தொட்டு**
**நாகபட்டினம் தேவதாயின்**
**பக்தர்களையும் இழுத்துச் சென்றாயே!**
**கடலம்மா என்று சொன்ன எம்**
**மக்களை**
**கொலைகாரம்மா என்று சொல்ல**
**வைத்துவிட்டாயே!**
**போதும் போதும் உன் சீற்றம் சென்ற**
**ஆண்டோடு**
**நிறுத்தி விடு உன் கொலை வெறியை!**
**புத்தாண்டிலாவது எம் இனத்தை**
**நிம்மதியாக வாழ விடு!**
**மரணமே உனக்கு மரணம் வராதா!**

*அல்போண்ஸ்மேரி லூயிஸ்(ராஜன்),*
*சுவிஸ்.*

## வரவேண்டும்

வரவேண்டும்
வரவேண்டும்
புத்தாண்டே
வரவேண்டும்
ஓய்ந்திருக்கும்
வேட்டோசை
நிலைத்திருக்க
வரவேண்டும்

புத்தாண்டே
வரவேண்டும்.

மூவின மக்களிடம்
நிலவுகின்ற நல்லுறவு
நிலைத்திருக்கும்
உறுதியை
புத்தாண்டே
தரவேண்டும்.

அதிகாரப் போட்டியற்ற
அன்பாகப் பேசுகின்ற
அத்தியாயத்தை நீயும்
அன்புடன்
தரவேண்டும்.

பிரிந்த சொந்தங்கள்
இணைந்திருக்கும்
இந்நாள்
என்றும்
நிலைத்திருக்கும்
வரமொன்று
தரவேண்டும்.


கோடி பணம்
வேண்டாம்
மீண்டும் யுத்தம்
வேண்டாம்
சமாதானம்
நிலைத்திருக்க
புத்தாண்டே
வரவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம்
முறிந்து போயிடாது
இணைந்து
வாழ்ந்திடவே

*—மாணிக்கன்*
*இளங்கோ,*
*மட்டக்களப்பு.*

## படித்துச் சுவைத்தது

### நெடு நாட்கள் கழித்து சொந்த ஊருக்குச் செல்பவர்கள்



நெடு நாட்கள் கழித்து
சொந்த ஊருக்குச்
செல்பவர்கள்
சின்னதாகிப் போன
பால்ய வயதின்
சட்டைக்குள்
வளர்ந்த உடலுடன்
நுழைகிறார்கள்.

பொருள் வயிற்பிரிவுக்கு
முன்
ஒவ்வொரு அணுவும்
பரிச்சயமாயிருந்த சொந்த
வீடு
சற்றே அந்நியமாகி
தங்கும் விடுதிபோல்
திகிலூட்டுகிறது.

கொஞ்சம் உப்பும், பாசமும்
தூக்கலான
சாப்பாட்டு ருசி மட்டும்
நம் வீடுதான் என்கிற
ஆறுதல் தருகிறது.

சிற்றிலாடிய வயல்வெளிகள்
பன்னாட்டுத்
தொழிற்சாலைகளின்
புகைபோக்கிகளுக்கும் கீழே
புதைந்து கிடக்கின்றன.

மிக சகஜமாய் தென்படும்
புதிய புதிய முகங்கள்
பூர்வீக வீட்டை விற்றுவிட்டு
பழைய நண்பர்களைப் பற்றி
விசாரிக்க வைக்கின்றன.

சம்சாரிகளாகிவிட்ட
சிநேகிதர்கள்:
"எப்படா வந்தே?" என
வழிமறித்துக் கேட்கிறார்கள்.
பதில் சொல்வதற்கு முன்பே
"என்னிக்குப் போற?" என
அடுத்த கேள்வி வருகிறது.

ஒவ்வொருமுறை
வந்து போகும் போதும்
நெருங்கிய ஒருவரின்
மரணம் பற்றிய செய்தியும்;
தொடர்பு கொண்டு
தெரிவிக்க முடியாமைக்கான
வருத்தமும்
யார் வீட்டுத்
திண்ணையிலேயோ
ஒரு கண்ணீர்த் துளியைப்
போல
அமர்ந்திருக்கிறது.

*நா. முத்துக்குமார்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"கவிஞன் எப்படித் தோன்றுகிறான்? கவிதை எப்படித் தோன்றுகிறது? என்று யாராவது சொல்ல முடியுமா? சொன்னாலும் சரியாக இருக்குமா?

கவிஞனுக்கான தகுதிகள் என்ன, எது கவிதை என்றெல்லாம் சொல்கிறார்களே தவிர, கவிஞனின் தோற்றம் குறித்து யாரும் எதுவும் சொல்கிறார்களா?

நல்ல கவிதை எவ்வாறு இருக்கும் அல்லது இருக்க வேண்டும் என்று சொல்லலாம். நல்ல கவிஞனுக்கும் இலக்கணம் வகுக்கலாம். ஆனால், நல்ல கவிஞன் எப்படி வருகிறான், நல்ல கவிதை எப்படித் தோன்றுகிறது என்று யார் எடுத்துச் சொல்ல முடியும்?

சொல்ல முடியாத மாயம் ஒன்று இருக்கிறது அதிலே. சொல்ல முடியாத இரகசியம் ஒன்றைக் கொண்டிருக்கிறது அது.

மாயங்களும் இரகசியங்களும் நிரம்பியதுதானே பிரபஞ்சம். அதிலே கவிஞனும் கவிதையும் தோற்றம் கொள்வது ஓர் அம்சம்!

இப்படிச் சொல்லியிருப்பவர், தமிழில் "சித்தம் போக்கு" க் கவிஞர்களின் வாரிசாகக் கருதப்படும் விக்ரமாதித்யன் நம்பி. வாழ்வின் அலைச்சலும் விட்டேறித்தனமும் தமிழ்த் தொன்ம ஈடுபாடும் இவர் கவிதையைப் பாதிக்கும் அம்சங்கள். கவிஞர் விக்ரமாதித்யன் நம்பியின் மூன்று கவிதைகள்.



### வாக்கு ஸ்தானம்

பாம்புகள்
என்ன
சாப்பிடுகின்றன?
கழுகுகள்
ஏன் பாம்புகளை
வேட்டையாடுகின்றன?
தோளுக்கு மேலே
வளர்ந்த
தோழர்களே!
தோன்றியதைச்
சொல்கிறேன்
துயரங்களைச்
சுமக்காதீர்கள்.
தூர
தூக்கி எறியுங்கள்.
செய்தொழிலை
சிக்கெனப் பிடித்துக்
கொள்ளுங்கள்.
செல்லும் இடம் எல்லாம்
சிறப்புதான் இனிமேலே
தமிழைவிட்டு கவிதையிலிருந்து
தள்ளியே இருங்கள் எந்நாளும்
செம்மாந்திருக்கலாம்.
இந்த நிமிஷத்திலிருந்தே
எழுதிக் கெட்டது
என்னோடு போகட்டும்;
இன்னும் ஏழு தலைமுறைக்கு
லௌகீக வாழ்வே போதும்.
கவிதை செய்தால் கஷ்டம்
தமிழ் எழுதினால் தரித்திரம்
திராவிட நாட்டில் ஒருநாளும்
தீராது பேச்சும் நடிப்பும்.

### ஏழாம் வீடு


அறுக்கிறாய்
ஞாபகத்தில் இருந்து
சுடுகிறாய்
மனசில் இருந்து
எரிக்கிறாய்
எப்போதும் உயிரிலிருந்து.

சுலபமில்லை சுகம்
சுபாவம் சொகுசு
சோதனையான காலம்
சோத்துக்குத் தாளம்
சொல்
சொல்லாமல் சொல்
உலைக்குக்
கொண்டுவரவில்லைதான்
ஒதுக்கி வைக்கலாமா
தேவி?
விலைக்கு வைத்திருக்கும்
பொருளில்லை இவன்.
கலைக்கு ஆட்பட்ட
உள்ளம்
காசு தேடியலையுமா
எளிதில்?
கொல்லாதே
சொல்லிக்காட்டி
பொல்லாதே
பொறுமையிழப்பது.
இல்லாத கொடுமைக்கு
இவ்வளவு பெரிய
தண்டனையா?
கனவிலும் வரும்
கண்மணியே ஆருயிரே!
நினைவிலும் வந்துவந்து
நிம்மதியைக்
கெடுக்கலாமா?
மனசின் அடியாழத்திலும்,
மனுஷிதான்!


### இவ்வண்ணமாக

மனசைக் கூறுபோட்டு
மசாலா சேத்தாச்சர
பிச்சிப் பூவும் போக வடிவும்
பொங்குமாங் கடலில் தள்ளும்
உச்சிப்படையில் ஒரு தம்ளர் தண்ணீர்;
ஓய்ந்த வேளையில் சாய்வுநாற்காலி.
உண்ணச் சோறு;
உறங்கத் திண்ணை.
கருணைக்கிழங்கு மசியல்
கைபாகத்தில் ருசியாகும்
பிரண்டைத் துவையல் பிடிக்கும்
பெண்ணுள்ளம் இரங்கவேணும்
வேலை செய்யாமல் பொழுது போக்கி
விட்டேத்தியாய் கழியுது காலம்.
வார்த்தைக்களையில் கிறங்கிப் போய்
வாழ்நாளை ஒப்புக்கொடுத்தாயிற்று.
தூண்டிலில் சிக்குமா கெண்டை மீன்
தூங்காத இரவுகள் முடிந்து தொலையுமா?
ஆண்டிகள் கூடி மடம் கட்டி
ஐயோ பாவம் போங்கடி!
நெஞ்சைக் கீறிப் பிளந்து
நினைவு விதைகளை எடுத்துக்கொட்ட
வேண்டும்.
நஞ்சும் அமிழ்தும் விரவிய உலகில்
நாமும் இருந்து தொலைக்க வேண்டும்.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : S.A. Rajah.
வயது : 25
முகவரி : P.O.Box - 40074, Doha - Qatar.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர் : P. Vijai
வயது : 21
முகவரி : P.O.Box No - 60136, Sanpok, Doha, Qatar.
பொழுதுபோக்கு : ரி.வி. பத்திரிகை.



பெயர் : எஸ். ரி. நிஜாமுதீன்
வயது : 18
முகவரி : தோப்பூர் – 04, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பேனா நட்பு.




பெயர் : யான்சி செல்வராசா
வயது : 17
முகவரி : கராட்சி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை, பேனா நட்பு, விளையாட்டு.




# சல்வாருக்கு பை! குர்த்தாவுக்கு ஹாய்!!

கணுக்காலைத் தொடும் சல்வார் கமீஸ், சுரிதார் செட்டுகளுக்கு பை பை சொல்லிவிட்டது குர்த்தாவின் வருகை. ஆறு முதல் அறுபது வரை அனைவராலும் விரும்பி அணியக்கூடிய உடை என்ற அங்கீகாரமும் இதற்குக் கிடைத்துவிட்டது.




குட்டையான, முட்டிக்கு மேல் உள்ள குர்த்தா, பொதுவாகக் கால்களை இறுகப் பிடிக்கும் பேண்ட் அல்லது சுரிதாருடன் அணியப்படுகிறது. இதன் சிறப்பே இதன் குட்டையான உயரம்தான் என்கின்றனர் இதை அணியும் பெண்கள். வேலைப்பாடு உள்ளது, இல்லாதது, பிரின்டட் என்று குர்த்தா பல வகைகளில் கிடைக்கிறது. பருத்தி, பாலியஸ்டர், ஷி∴போன், பட்டு என்று பலவிதமான குர்த்தாக்கள் கிடைக்கின்றன. இதனால் இதன் விலையும் ரூ.250இல் ஆரம்பித்து ரூ.25,000 வரை செல்கிறது. தினந்தோறும் அணிவதற்கும், விசேஷங்களில் அணிவதற்கும் குர்த்தா ஏற்றது.

வெளிநாட்டுப் பயணம் செல்பவர்களும், அலுவலகத்தில் பணிபுரிபவர்களும் இதை அதிகம் விரும்புகின்றனர். இந்த குர்த்தாவை குறுகிய பேண்ட்டுடன் அணிவதால் இது மேற்கத்தைய உடையைப் போல் காட்சி அளிக்கிறது. துப்பட்டாவுடனும் துப்பட்டா இல்லாமலும் இதை அணியலாம். துப்பட்டாவுக்குப் பதிலாக ஸ்கார்∴ப் அணிந்தும் ஜொலிக்கலாம்.

குர்த்தாவின் கையில் அளவு, முழுக்கையில் ஆரம்பித்து கையே இல்லாத ஸ்லீவ்லெஸ் வரை குறைந்துகொண்டே போகிறது. ஆனால் அரைக்கை குர்த்தாவும் கையே இல்லாத ஸ்லீவ்லெஸ் குர்த்தாவும் அதிகமாக விரும்பப்படுகிறது. இதுதான் பார்ப்பதற்கும் அழகாக இருக்கிறது.

ஷி∴போனால் ஆன மெல்லிய குர்த்தாக்களுக்கு உள்ளே அழகிய ஸ்லீவ்லெஸ் டாப்ஸ் அணிய விரும்புகின்றனர் டீனேஜ் மற்றும் கல்லூரிப் பெண்கள்.

குர்த்தா பொதுவாக முழங்காலுக்கு மேல் 4 முதல் 4 அங்குலம் உயரம் இருக்க வேண்டும். ஆனால் உங்கள் இடுப்புப் பகுதியின் அளவு அதிகமாக இருந்தால் குர்த்தாவை சற்று நீளமானதாக்கிக் கொள்வது நல்லது. ஆனால் எக்காரணத்தைக் கொண்டும்



குர்த்தா முழங்காலை விட்டுத் தாண்டக் கூடாது. தாண்டினால் அது குர்த்தாவாகக் கருதப்படாது.

'எடை அதிகமாக உள்ளவர்கள் துப்பட்டாவை தவிர்த்தாலோ அல்லது ஸ்கார்∴ப் அணிந்தாலோ மேலும் பருமனாகத் தோற்றம் அளிப்பார்கள்.

தொளதொளப்பான சல்வாருடன் குர்த்தாவை அணிவதும், பெரிய டிசைன்கள் போட்ட குர்த்தாவும் சரியான ∴பேஷன் அல்ல. பளிச்சென்ற நிறங்களான பச்சை, சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் தற்போது அதிகம் விரும்பப்படும் நிறங்கள்.


குர்த்தாவுக்கு ஹாய் சொல்ல நீங்க ரெடியா?

# சிகை அலங்காரங்கள்


## இந்தியன் பன்

1. முதலில் தலையை வாரி Poney tail ஆகக் கட்டுக.

2. பின்பு கட்டிய தலைமுடியை இரண்டு சம பகுதிகளாகப் பிரித்து, முதலாவது பிரிவை Poney tailஇன் மேலே வைத்துக் குற்றிக் கொள்க.



3. பின்பு நீள் வட்ட வடிவமான Pad ஐ, தயார் செய்து



கொள்க.

4. பின்பு Pad ஐ Poney tailஇன் மேலே வைத்து, Pad இன் மேற்புறமும், கீழ்புறமும் Hair Pin குற்றுக.

5. பின்பு Padஇன் கீழ்ப்புற முள்ள தலைமுடியை Padஇன் மேலாக மூடியெடுத்து X வடிவில் முறுக்கி Padஇன் இரு கரைப் புறமும் சொருகி Hair Pin குற்றிக் கொள்க.

6. பின்பு அதேவண்ணம் Pad இன் மேலே விடப்பட்டுள்ள தலை முடியை Pad ஐ மூடும் வண்ணம் கீழ்ப்புறமாக எடுத்து 'X' வடிவில் முறுக்கி Padஇன் இருபுறமும்



சொருகி Hair Pin குற்றிக்கொண்ட பின்பு Padஇன் மேலுள்ள தலை முடியை விரித்துவிட்டுக் கொள்க.

அடுத்த வாரம் இன்னுமொரு சிகை அலங்காரத்து சந்திப்போம்.

# பருக்களின் தொல்லையா?

பருவம் வந்ததுமே பருக்களும் வருவது இயற்கை. முகத்தில் எண்ணெய்ப் பசை இருப்பதால் கழிவுப் பொருள் வெளியேறுவது தடைப்பட்டு முகப்பரு உண்டாகும். அதைக் கிள்ளக்



கூடாது. பருவுக்குத்தான் 'பாட்டி வைத்தியம்' இருக்கிறதே! பரு மறையும் வரை 'சோப்பு' வேண்டாமே!

1. சீரகத்தை எருமைப் பால் விட்டு மையாக அரைத்துப் பருவின் மீது பூசித் தண்ணீரினால் கழுவவும்.

2. கடற்சங்கைப் பால் விட்டுச் சந்தனக் கல்லில் இழைத்துப் பருக்கள் மீது இரவில் தடவவும்.

3. திருநீற்றுப்பச்சை இலையோடு வசம்பு சேர்த்து இளநீரில் நன்றாக அரைத்துப் பற்றுப் போட்டால் பருக்கள் மறையும்.

4. மரப்பாச்சியைத் தண்ணீர் சேர்த்து அரைத்த விழுதைப் பருவின் மீது பூசவும். அப்படியே உலர விடவும்.

5. வெள்ளைப் பூண்டைப் பாலில் போட்டுக் காய்ச்சி, நசுக்கி எடுத்து முகப்பருக்கள் மீது தடவினால் பருக்கள் மறையும்.

6. சந்தனத்தை இழைத்து அதில் ஓவல்லி இலைச்சாறு கலந்து பருக்கள் மீது தடவலாம்.

7. வேப்பிலை, துளசி, புதினா, முல்தானி மெட்டிப் பொடி இவற்றை இலேசான சுடுதண்ணீரில் குழைத்துப் பருக்கள் மீது தடவி ஊறவைத்துக் கழுவவும்.

8. ஜாதிக்காயையும், சந்தனத்தையும் கல்லில் இழைத்துப் படுக்கும் முன் பருக்களின் மீது தடவவும்.

9. இலவங்கப் பட்டைப் பொடியோடு தேன் கலந்து பருக்கள் மீது தடவிப் பாருங்கள்...தொடர்ந்து சில நாட்கள்...

10. புதினாவை நன்றாக அரைத்துப் பருக்கள் மீது பற்றுப் போடலாம்.



கழுவிய பின் சந்தன எண்ணெய் ஒரு சொட்டுத் தடவலாம்.

இத்தனை செய்தும் பருக்கள் போகவில்லையென்றால் குடலைச் சுத்தம் செய்ய மூன்று மாதத்துக்கு ஒருமுறை பேதிக்குச் சாப்பிடுவது நல்லது.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## கோக்கனற் குக்கீஸ்

8–10 துண்டுகள்.

***தேவையான பொருட்கள்:***

தேங்காய்ப்பூ (உலர்த்தியது) - 10-12 மேசைக் கரண்டி
சீனி - 3 மே.க.
முட்டை வெண்கரு - 1
வனிலா - 1 மே.க.
கலரிங் (விரும்பியது) - 1 தே.க.
சிறிதாக வெட்டிய கஜு - 2 மே.க. (நிரப்பி)
பிளம்ஸ் - 10
மாஜரின் - 1 தே.க. (தட்டுக்குப் பூசுவதற்கு)

***செய்முறை :-***

முட்டையின் வெண்கருவைத் தனியாக எடுத்துப் பாத்திரத்தில் இட்டு, சீனியும் சேர்த்து நுரை பொங்கும் வண்ணம் நன்றாகப் பீற்றரால் அடித்துக்கொண்ட பின்பு கலரிங், வனிலா என்பவற்றைச் சேர்த்துக்கொள்க.

பின்பு அடித்த கலவையில் தேங்காய்ப் பூவைச் சிறிது சிறிதாகத் தூவி முழுவதுமாகச் சேர்த்து கஜுவுமிட்டு பிசைந்து வைத்துக்கொள்க.

பின்பு கேக் தட்டுக்கு ஒயில் பேப்பர் பரவி மாஜரின் பூசிக்கொண்ட பின்பு, தயாரித்து வைத்துள்ள கலவையைத் தேசிப்பழமளவு உருண்டைகளாகப் பிடித்து இரண்டு உள்ளங் கைகளுக்கும் நடுவே வைத்து மெதுவாக அமர்த்தி, நடுவில் பிளம்ஸ் பதித்துக் கேக் தட்டில் இடைவெளி விட்டு அடுக்கி பேக் செய்து ஆறிய பின்பு பரிமாறலாம்.

*குறிப்பு*
தேங்காய்ப் பூவைக் காயவைப்பதற்குப் பதிலாக உலர்த்திப் பொதிகளில் அடைத்து விற்கப்படும் தேங்காய்ப் பூவையும் பயன்படுத்தலாம்.

# குறிப்புணர்த்தும் குடும்ப டிப்ஸ்!

## உடற்பயிற்சிக்கான உடை

உடற்பயிற்சி செய்கின்ற இடம் தனி அறையாக இருந்தால் குறைந்த ஆடையுடன் செய்யலாம். பெண்கள் உடற்பயிற்சி செய்யும்போது அரைக் கால் சட்டை அல்லது பைஜாமாவுடன் ரவிக்கை அணிந்துகொண்டு செய்ய வேண்டும். ஏனென்றால் இவ்வாடைகள் பயிற்சியின்போது உடலுறுப்புகளை எளிதாகத் தடையின்றி ஏற்றி இறக்கவம் இயக்கவும் வாய்ப்பளிப்பவையாய் இருக்கும். மற்றவர்கள் இருக்கும்போது பயிற்சி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தால் வசதிக்கேற்ற ஆடைகளை அணிந்துகொண்டு செய்யலாம். உடுத்தியிருக்கும் உடை உபத்திரவம் தருவதாய் அமையக் கூடாது என்பதே முக்கியம். உடலை உறுத்தும்படியான உடைகளையும் உடலை இறுக்கிப் பிடிக்கும் உடைகளையும், கனமான உடைகளையும் அணியக் கூடாது. உடற்பயிற்சிகளை எளிதில் செய்வதற்குச் சௌகரியமாய் உள்ளாடைகளையே அணிய வேண்டும்.

# ஒரு தாய் மகள் 15

"என்ன பேஜ்? என்ன விஷயம்?" என்றாள் பேஜ் அவளுக்குப் பேஜுடன் வெகு நாளாகப் பழக்கம். அவள் இப்படிக் கலவரப்பட்டுப் பார்த்தது கிடையாது. "என்ன ஆச்சு? உடம்பு சரியில்லையா? வீட்டில் யாராவது.." திருடன் வந்திருப்பானோ என்ற சந்தேகத்தை ஜேன் வாய் விட்டுச் சொல்லவில்லை.

"யாரும் இல்லை.. ஆலிஸன்..." எலிக் குஞ்சு மாதிரி அவள் குரல் கிறீச்சிட்டது... "ஆலிஸனுக்குக் கார் விபத்து. மரீன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அபாயமான நிலைமையில் இருக்கிறாள். பிராட் ஊரில் இல்லை. ஆண்டியைத் தனியே விட்டுவிட்டுப் போக வேண்டும்.

"அடக் கடவுளே! இதோ இரண்டு நிமிஷத்தில் அங்கே வருகிறேன்" என்றாள் ஜேன்.

பேஜ் மாட்டிக்கொண்டிருந்த உடை பழசு அங்கங்கே ஓட்டைகள் ஏற்பட்டிருந்தன. அவளுக்கு அதைக் கவனிக்க நேரமில்லை. பரட்டையாய் கலைந்திருந்த முடியை அழுத்தி விட்டு கொண்டாள். கைப்பையை எடுத்துக் கொள்ளவும் அழைப்பு மணி அடிக்கவும் சரியாயிருந்தது. கதவைத் திறந்ததும் ஜேன் அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

"ஆலிஸனுக்கு ஒன்றும் இருக்காது. எதுவும் நேராது. பதற்றப்படாதே. இப்படித்தான் யாராவது ஏதாவது பயமுறுத்தலாய்ச் சொல்வார்கள். அப்புறம் பார்த்தால் ஒன்றும் இருக்காது. அமைதியாயிரு" என்றாள்.

பேஜ் இந்த வீட்டுக்குக் குடிவந்தது முதல் ஜேனுக்கும் அவளுக்கும் சினேகிதம். அப்போது ஆலிஸனுக்கு ஏழு வயது. ஆண்டி பிறக்கவில்லை.



தானே பேஜை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல அவள் நினைத்தாள். ஆனால் அவள் வீட்டிலும் யாரும் இல்லை. விடுமுறைக்காக வந்திருந்த இரண்டு குழந்தைகளை அழைத்துக் கொண்டு அவள் கணவன் வெளியூர் போயிருந்தான். ஆண்டியைப் பார்த்துக் கொள்ளும்படி வேறு யாரிடமாவது சொல்லலாம் என்றால் யாரும் இல்லை.

"நான் என் வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இங்கே இருந்துகொள்கிறேன், ஆண்டிக்குத் துணையாக" என்றவள் ஆண்டியைப் பார்த்தாள். நடந்தது, நடப்பது எதையும் அறியாதவனாக அந்தச் சிறுவன் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். "இவன் விழித்துக்கொண்டு கேட்டால் என்ன சொல்லட்டும் பேஜ்?"

"ஆலிஸனுக்கு உடம்பு சரியில்லை என்று மட்டும் சொல்லு, போதும். நான் அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் பொயிருக்கிறேன் என்று சொல்லு ஆஸ்பத்திரிக்குப் போய் பார்த்து அங்கே நிலைமை எப்படி இருக்கிறதென்று போன் பண்ணுகிறேன். பிராட் போன் பண்ணினாரானால் 'நம்பரைக் கேட்டு வைத்துக் கொள். இப்போ அவர் எங்கே இருக்கிறாரென்று தெரியவில்லை."

"சரி, நீ போ. காரை ஜாக்கிரதையாய் ஓட்டு. பதற்றப்படாதே"

கூந்தல் காற்றில் பறக்க, கைப் பையை மார்போடு அணைத்துக் கொண்டு, காரிடம் ஓடி ஒரே தாவலில் திறந்து ஏறி, அந்த நடுராத்திரி நேரத்தில் பறந்தாள் பேஜ் 'பதற்றப்படாதே மெதுவாய் மூச்சு விடு. ஆலிஸனுக்கு ஒன்று நேர்ந்திருக்காது. கடவுள் இருக்கிறார் தைரியாமாய் இரு. தெய்வமே, என் குழந்தையைக் காப்பாற்று...

வழி பூரா இப்படித் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு காரை ஓட்டினாள். அப்படியும் கூட நடப்பதெல்லாம் நிஜம் தானா அல்லது சொப்பனமா என்று குழப்பமாகவே இருந்தது.

எட்டு நிமிடத்தில் ஆஸ்பத்திரியை அடைந்தாள். கிடைத்த இடத்தில் காரை நிறுத்தினாள். கார் சாவியைக் கூட அப்படியே விட்டுவிட்டுக் கட்டிடத்துக்குள் ஓடினாள் எமர்ஜென்சி பிரிவில் விளக்குகள் ஜெகஜோதியாய் எரிந்துகொண்டிருந்தன. ஜனங்கள் வேகமாக வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தார்கள். சிலர் அருகிலிருந்த அறைக்குள்ளிருந்து விரைந்து வெளிப்பட்டு எங்கோ சென்றார்கள். வேறு சிலர் உள்ளே நுழைந்தார்கள். ஒரு நிறைமாத கர்ப்பிணி கணவனின் தோளில் சாய்ந்தவாறு வேதனையுடன் முனகிக் கொண்டு பெஞ்சில் காத்துக் கொண்டு சென்றாள். சிலர் டாக்டர்களிடன் வருகைக்காக உட்கார்ந்திருந்தாள்.

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

ஆனால் இது எதுவும் பேஜின் கண்ணில்படவில்லை.

என் குழந்தை... என் பேபி.. என் ஆலிஸன்.. எங்கே இருக்கிறான்? எப்படி. இருக்கிறாள்?

பத்திரிகை நிருபர்கள் இரண்டு பேர் ஒரு நெடுஞ்சாலைப் பொலிஸ்காரரிடம் ஏதோ கேட்டுக் குறிப்பு எடுத்துக் கொண்டிருப்பமு கண்ணில் பட்டது.

'தகவல்கள்' என்ற அறிவிப்புடன் இருந்த மேசைக்கு ஓடி, அங்கிருந்த நர்ஸிடம் "ஆலிஸன் எங்கே இருக் கிறாள்?" என்று கேட்டாள்.

நர்ஸ் அவளை ஏறிட்டுப் பார்த்தான். சவம் போல வெளுத்திருந்த பேஜ் காலோடு தலை பதறிக்கொண்டிருப்பதைக் கண்டு அந்த நர்ஸுக்கு அளவற்ற பரிதாபம் ஏற்பட்டது.

"நீங்கள் ஆலிஸனின் அம்மாவா?"

"ஆமாம்... அவளுக்கு.. ஒன்றும்.." பேஜின் தேகம் மேலும் மேலும் நடுங்கியது.

"உயிரோடு இருக்கிறாள்" என்று நர்ஸ் தைரியம் கூறினாள். எந்த நிமிடத்திலும் பேஜ் விழுந்துவிடுவாள் என்று தொன்றவே மேசையைச் சுற்றி எழுந்து வந்து அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். "ஆனால் அவளுக்கு ரொம்ப ரொம்ப பலமான காயம். அதுவும் தலையில் கடுமையான அடி. நியூரோசர்ஜன்கள் குழு அவளுக்குச் சிகிச்சை தந்து கொண்டிருக்கிறது. தலைமை டாக்டர் வரவேண்டுமென்று காத்திருக்கிறோம். அவர் வந்ததும. உங்களுக்கு முழுத் தகவல் தருகிறோம். இப்போதைக்கு ஆலிஸன் தாக்குப் பிடித்துக்கொண்ருக்கிறாள்." என்று சொல்லிவிட்டு, பேஜைக் கைத்தாங்கலாக அழைத்துப் போய் ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைத்தாள். "ஒரு கப் காப்பி வரவழைக்கட்டுமா, மிஸஸ் பிராட்?"

வெகு கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக்கொண்டு 'வேண்டாம்' என்று தலையை அசைத்தாள் பேஜ்.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் உலகம் எத்தனை தலைகீழாக மாறி விட்டது! என்னவோ சொன்னாளே அந்த நர்ஸ்.. என்ன? நியுரோ சர்ஜன்கள்.. நியூரோ சர்ஜன்களின் குழு... நர்ஸ் சொன்னதையெல்லாம் மனசில் வாங்கி கொள்ள முயன்றாள். அவளையுமறியாமல் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது. ரொம்பக் கடுமையான காயம் என்றாளே... என்ன நடந்தது? எப்படி நடந்தது?

"மிஸஸ் பிராட், அமைதியாயிருங்கள்.." என்று அந்த நர்ஸ் கிளிப் பிள்ளை மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அமைதியாகவா? எப்படி அமைதியாக இருப்பது? கைக்குட்டையால் மூக்கையும் கண்ணையும் துடைத்துக் கொண்டாள். கடியாரத்தைப் பின்னுக்குத் தள்ள முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! சொன்ன நேரத்துக்கு வீடு திரும்பவில்லை என்று குழந்தையை எத்தனை கோபமாய்த் திட்டிக்கொண்டிருந்தேன்! நான் திட்டிக்கொண்டிருந்த அதே நேரம் அவள் தலையில் அடிபட்டு, நினைவு நீச்சில்லாமல்.. ஐயோ! நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.


ஒருவழியாய் சுதாகரித்துக் கொண்டு, "வேறு யாருக்கேனும் அடி பட்டதாமா?" என்றாள்.

காரோட்டி இறந்து விட்டாதாக தெரிகிறது. இன்னொரு சின்னப் பெண்ணுக்கும் பலமான காயம்" என்றாள் நர்ஸ்.

(தாய் தொடர்வாள்.....)


காயமடைந்த ஆலிஸன் ஆபத்ததான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். அவளுடைய அம்மாவான பேஜு க்கு இவள் விபத்தில் சிக்கிய செய்தியை நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். பதற்றமடைந்த பேஜ் உடனே ஆஸ்பத்திரிக்குச் செல்ல ஆயத்தமாகிறாள்.

## சுனாமி பயம் போயே போச்சு!



தாய்லாந்தின் புக்கட் நகரம் உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத்தலம் ஆகும். அங்கு கடந்த டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் கொந்தளிப்பால் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாத் பயணிகள் பலியாகினர். இதனால் கடற்கரை பக்கமே யாரும் நடமாடவில்லை. தற்போது அங்கு சகஜ நிலை திரும்பி வருகிறது. சுனாமி பற்றிய பயம் அந்நாட்டு மக்களிடமும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடமும் மெல்ல, மெல்ல மறைந்து கடற்கரையில் கூட்டம் அலை மோதத் தொடங்கிவிட்டது. படத்தில் இளம் சுற்றுலா பயணி ஒருவர் புக்கட் கடற் கரையில் சுனாமி பயமின்றி உல்லாசமாக குளித்து மகிழ்வதை காணலாம்.

## பிபாஷாவின் அதிரடிப் பதில்கள்



***மாடலாக மாறுவதுவதற்கு முன் உங்களுக்கு இருந்த எண்ணம்?***

நான் டாக்டராக ஆசைப்பட்டென் +2 வில் சயின்ஸ் குருப் படித்தேன். எலியைக் கொண்டு வந்து அறுத்துப் பார்க்கும் அந்த பிராக்டிகல் வகுப்பு என்னை அறுவருப்படையச் செய்து தடம் மாற வைத்தது. டிஸ்ஸெக்ஷன் ரொம்ப கொடூரம் இல்ல? அதனால் +2 முடித்தவுடனே டாக்டர் ஆசையைத் தூக்கி பரயில் போட்டுவிட்டு காமர்ஸ் க்கு தாவினேன். சரீ சார்ட்டட் அக்கவுண்மன்ட்தான் நம் வீதி என்று நினைத்திருக்கும் போதே, 'வேறெதுவோ எனக்காக நிர்ணயிக்கப்பட்டு காத்திருந்திருக்கிறது' 'மெஹர் ஜெஸியா' என்னைக் கல்கத்தாவில் ஒரு ஹோட்டலில் சந்தித்தபோது என் எண்ணங்கள் எல்லாம் திருத்தி எழுதப்பட்டன. போறபோக்கில், ரொம்ப அழகா இருக்கியே... கோத்ரெஜ் சிந்தாலின் சூப்பர் மாடல் போட்டி ஒண்ணு இருக்கு. கலந்து கோயேன் என்று சொல்லிவிட்டு போக, நான் கலந்து கொண்டது. ஜெயிச்சது எல்லாம் இப்பவும் என்னை ஆச்சரியப்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றன.

***சினிமா வேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருந்தவர் திடீர் சினிமா பிரவேசம் செய்தீர்களே?***

ஒரு போட்டிக்கு நடுவராக வந்த வினோத் கண்ணா தான் முதன்முதலில் என்னை சினிமாவுக்கு அமைத்தார். அவரது பையன் அக்ஷய் கண்ணாவை ஃபீல்டுக்கு கொண்டுவர நினைத்து கேட்டார்.

அப்போது நான் ரொம்ப சிறுபிள்ளை. பக்குவமடைந்தவளாக இல்லை. ஏதோ ஒரு பயத்தில் வேண்டாமென்று சொல்லிவிட்டேன். பிறகு, அபிஷேக் பச்சனை ஃபீல்டில் இறக்குவதற்காக ஜெயாபச்சனும் கேட்டார். வெளிநாட்டில் சென்று வீட்டைப் பிரிந்து சம்பாதிப்பதைவிட உள்நாட்டிலேயே பணமும், புகழும் கிடைக்கும்போது ஏன் வேண்டாமென்று சொல்வானேன்? என்று சம்மதித்தேன். பல்வேறு காரணங்களால் அந்தப் படம்' தொடங்கப்படவில்லை. 'அஜ்நபி'தான் எனது முதல் படமாக வெளிவந்தது.

***முன்னைய பேட்டி ஒன்றில் விஜய், அஜித் இந்தியில் நடிக்க வாய்ப்பு வந்தால் நடிப்பேன் என்று சொன்னீர்கள். இப்போது விஜய்யுடன் தமிழில் நடிக்க ஒப்புக்கொண்டது எப்படி?***

அதன்பிறகு இரண்டு வருடம் கடந்திருக்கிறது. நிறைய மாற்றங்கள். தமிழ் ஃபீல்டில் நிறைய சாதனைகள் செய்துகொண்டிருக்கிறார்கள் ஹாலிவுட் வரைக்கும் போட்டி போடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். அமீஷா பட்டேல், ஐஸ்வர்யாராய், மந்த்ரா பேடி, யனாகுப்தான்னு பாலிவுட் ஸ்டாரீஸ் இங்கேயும் அவ்வப்போது வந்து கலக்குகிறார்கள். ஜான் இந்த கதையை எனக்கு சொன்னபோது, என்னால் அந்த கதையில் பெயர் வாங்க முடியும்னு தோன்றியது. நாமும் இறங்கி கலக்கினால் என்ன இப்போது இங்கே விஜய் ஒரு ஹாட்டஸ்ட் ஹீரோதானே? அவரை போட்டொசெஷன் பண்ணும்போது பார்த்தேக். அந்த மாதிரி தெரியலை. ரொம்ப அமைதியா இருக்கார். எதுக்கும் அவரோட படம் பார்த்து வைக்கலாம்னு ரெண்டு படங்களோட டி.வீ.டி. வாங்கி இருக்கேன்.



***மொழி தெரியாமல் நடிப்பது ரொம்ப கஷ்டம்னு சொன்னீங்க?***

உண்மை! தெலுங்கில் டக்கரி டொங்கா பண்ணும்போது ரொம்ப கஷ்டப்பட்டேன். அதிலிருந்து வேறுமொழிப் படம்னா ஒர தயக்கம் இருந்தது. எதையுமே அனுபவப்படாம கத்துக்க முடியாது. இப்போவும் மொழி தெரியாதுன்னு சொன்னா ஒரு நல்ல கேரெக்டரை மிஸ் பண்ண வேண்டியிருக்கும். ஆங்கிலத்தை வைத்து சமாளித்துவிடலாம்னு இருக்கேன். ஆனாலும், தமிழ் மொழி கத்துக்கிற ஆர்வம் இருக்கு.

நன்றி:– D.S

***பிபாஷா?***

ரொம்ப ஜாலி டைப்பாதான் எல்லோருக்கும் என்னைத் தெரியும். ஆனா? நான் ரொம்ப சென்ஸிட்டிவ். மறைவா நிறைய அழுதிருக்கேன். தனியா அழுது விட்டு, சட்டுன்னு வெளியே வந்துருவேன். வெளியே நான் தைரியமான பிபாஷா!

# புலம் பெயர்ந்தவர்களின் பேனா முனை

# உயிரின் விலையும் பிரிவின் துயரும்

சரித்திரங்கள் சேரனை சோழன் வென்ற கதையைச் சொன்னாலும், மன்னர்களும் தலைவர்களும் அந்தப்புரங்களிலும் மாளிகைகளிலும் இருந்துகொள்ள, போர் வீரர்களும் போராளிகளும் அதை விட அதிகமாய் அப்பாவி மக்களும் மடிந்து வெறும் இலக்கங்களாவதும் மன்னர்களும் தலைவர்களும் மட்டும் வரலாற்றில் பொறிக்கப்படுவதும்தான் அன்று முதல் இன்றுவரை நடைமுறை. அது அன்றைய புறநானூற்றுத் தலைவனுக்கும் இன்றைய புஷ்ஷுக்கும் பொதுவானது.



ஒரு உயிரின் விலையும் மதிப்பும் என்ன என்ற கேள்விக்கு இன்று கிடைக்கும் பதில் அது யாருடையது என்பதில்தான் இருக்கிறது. அது தைகிரிஸ் நதிக் கரையாக இருந்தால் என்ன? வெருகல் நதிக் கரையாக இருந்தால் என்ன? தியாகியாக இருந்தால், அதையே வியாபாரமாக்கி, கண்ணீர் அஞ்சலி என்று தூக்கிக் கொண்டாடுவதும், துரோகியாக இருந்தால் கழுத்தை அறுத்து, முடிந்தால் வீடியோவும் எடுத்து ஒளிபரப்பும் செய்து, வெற்றி விழாக் கொண்டாடுவதும் இன்று சாதாரணமான நிகழ்ச்சிகள். தியாகிகள் போற்றப்படுவதும் துரோகிகள் தூற்றப்படுவதும் தமிழர் வாழும் கொக்கட்டிச்சோலை முதல் கொப்பன் கேஹகன் வரைக்கும், அந்நியர்களின் அமெரிக்கா முதல் அல்ஜஸீரா வரைக்கும் இன்று சர்வசாதாரணமானவை.

வீரம் விளைந்த மண்ணுக்கு உரமாகிப் போனார்கள் தற்கொடையாளர்கள். வித்துடல்கள் விதைக்கப்பட்டன என்று புகழ்ந்து பாடுவதும் இரத்த வெள்ளத்தில் கிடக்கும் எதிரியின் உடலை முன்பக்கத்தில் போட்டு துள்ளிக் குதிப்பதும் நடுத் தெருவில் நாய் போலச் சுடப்பட்டுக் கிடந்தான் என்று மகிழ்வதும் தற்போது சாதாரண நிகழ்ச்சி.

இலட்சியங்களின் பெயரால் போதையூட்டி மதிமயக்கிப் பலி கொடுக்கும் தலைவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தந்திரமாகவும் பத்திரமாகவும் பாதுகாத்துக்கொள்வது புஷ் குடும்பத்திற்கு மட்டும் தனித்துவமான ஒன்று அல்ல. அது பாலஸ்தீன விடுதலை இயக்கத்திலும் இருக்கிறது. புலம் பெயர்ந்த தலைநகர்களில் புற்றீசலாய் முளைத்து ஊளையிட்டுக்கொண்டிருக்கும் ஊடகவியலாளர் என்ற கூட்டம் 'இதற்குள் எங்கள் தலைமையை மட்டும் குற்றம் சொல்வது எப்படி' என்று வரிந்து கட்டிக்கொண்டு வக்காலத்து வாங்கி நிற்கும் சில உயிர்களுக்கு மட்டும் பெறுமதி அதிகம். மற்ற உயிர்கள் சில்லறை விலையில் என்று யாரும் கேட்பதில்லை. ஒருவேளை கேட்டால் தங்கள் உயிருக்குக் கிடைக்கக் கூடிய விலை அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

இறுதித் தீர்வுக்குத் தடை என்று முப்பது வருடங்களாக நடந்த களை எடுப்பு, இடைக்காலத் தீர்வுக்குத் தடை என்று அடுத்த முப்பது வருடத்துக்குத் தொடரக் கூடும்.

உயிர் மீதான பயம் ஏற்படுத்தும் மௌனத்தை ஆதரவாகக் காட்டி அங்கீகாரம் பெறுவதுதான் களையெடுப்பின் முக்கிய நோக்கம்.

இந்த நிலையில்....எதிரியும் நண்பர்களும் ஏன் இலட்சியமும் அடிக்கடி மாறுவதால், எதிரில் அகப்பட்டு குதறப்படக் கூடும் என்ற பயத்தில் புலி வால் பிடித்த நாயர்களாய் வாலில் தொங்கிக்கொண்டு உயிரைக் காத்துக்கொள்ளும் முயற்சிகள் இங்கு அதிகம். இவர்கள் பின்னால் அணி திரள்வோம் என்று பொங்குவதன் நோக்கமும் காரணமும் இதுதான். தலைவர்களை ப(லி)றி கொடுத்த தனயர்களும் ஆய்வாளர்களும் இலக்கியவாதிகளும் இன்று 'பின்னால் அணி திரள்வது' இலட்சியம் மீதான ஈர்ப்பு அல்ல. உயிர் மீதான பயம். மனிதர்களுக்காகத்தான் இலட்சியம் என்றது போய், இலட்சியத்துக்காக மனிதர்கள் என்றதால் வந்த நிலை இது.

ஈராக்குடன் யுத்தம் புரியச் சென்றவர்களுக்கு



சொர்க்கத்தின் கதவுக்கான திறப்பைக் கொடுத்த அயாத்துல்லாவின் வழிகாட்டுதலும், இன்றைய இரவு உணவுடன் கூடிய முன்னால் போ, பின்னால் வருகிறேன் என்ற வழியனுப்புதலும் ஒன்றுதான். அப்பாவிகளின் அறியாமையைப் பயன்படுத்தி அதிகாரத்தில் தங்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கான பலி கொடுப்பு. மகேசனின் பெயரில் புனிதப் போர் தொடுத்த அயாத்துல்லாக்கள் மக்கள்



தி. உமாகாந்தன்

தீர்ப்பை மறுத்து அதிகாரத்தைப் பகிர மறுப்பதும் மக்களின் வாக்குரிமையைத் துப்பாக்கி முனையில் மறுத்து அன்னக்காவடிகளை அரச அவைக்கு அனுப்புவதும் இந்தப் புனிதப் போர்களின் சுயரூபத்தைக் காட்டி நிற்கும்.

உயிரின் விலை மலிவானதுதான். ஆனாலும் இறப்புடன் மட்டும் முடிவதல்ல இந்தக் கொடூரங்கள். இறந்த மனிதனின் பிணத்திற்கான இறுதிக் கிரியைகள் செய்யவும் கண்ணீர் விட்டு அழவும் அனுமதியில்லா நிலை. பிணத்தை ஊருக்குக் கொண்டுவரக் கூடாது என்ற மிரட்டல்களும் கொன்ற பிணங்களின் முகங்களைச் சிதைப்பதுமான வெறித்தனங்கள் இன்று நாங்கள் காண்பவை.

புதைக்கப்பட்ட உடலைத் தோண்டி எடுத்து டயர் போட்டுக் கொளுத்துவதும், மூன்று மாதக் குழந்தையை வெட்டிக் கொல்வதும், பிரிந்து சென்ற குற்றத்திற்காகப் பெண் என்றும் பாராது கழுத்து அறுத்துக் கொல்வதும் இறந்த மனிதனுக்கான அஞ்சலி நோட்டீஸைக் கூட கிழித்து எறிவதும்....

தன் கன்று கொல்லப்பட்டதற்கு நீதி கேட்க ஆராய்ச்சி மணி அடித்த பசுவின் துயருக்காக தன் மகன் மீது தேர் ஏற்றிய மனுநீதி கண்ட சோழர்கள் இன்று இல்லை. பிள்ளைகளின் உயிருக்கு நீதி கேட்கப் புறப்பட்ட தாய் கூட, 'இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை', மகன் துரோகக் குழுவின் முன்னாள் உறுப்பினன் என்ற 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' தனமான மூலைச் செய்திக் குறிப்பின் உலகளாவிய மறுபிரசுரம் மட்டுமே உலகின் வாயை அடக்கப் போதும். இறந்தவர் 'அப்பாவிப் பொதுமகன்' 'தேசப்பற்றாளர்' என்றால் இறந்தவர் யார், கொன்றவர் யார் என்பது தெளிவாகத் தெரிய...அடக்குமுறை இராணுவம், கூலிப்படை என்பது கொட்டை எழுத்திலும் வரும்.

கொழும்பில் கொல்லப்பட்ட கூட்டணித் தலைவருக்காக அழுவதற்கு ரொறன்ரோவில் கண்ணீருடன் அனுமதி கேட்க வேண்டிய நிலை எங்களுடையது.

கணவனைக் கொன்ற கொலைஞர்களின் மரண தண்டனையை விலக்குமாறு கொலையுண்டவனின்

## கொழும்பில் கொல்லப்பட்ட கூட்டணித் தலைவருக்காக அழுவதற்கு ரொறன்ரோவில் கண்ணீருடன் அனுமதி கேட்க வேண்டிய நிலை எங்களுடையது.

மனைவியே விண்ணப்பிக்கும் நாகரீக உலகில் உயிர்ப்பலி வேள்வி மிருக வதை என்று அதை விலக்கியதை மத நம்பிக்கைக்கும் அப்பால் ஏற்ற சமூகம், தன் குழந்தைகளையே இன்று பலி கொடுத்து விடுதலை வாங்க நினைப்பதும்.....பஸ் அடித்த நாயைக் கூடக் கிடங்கு வெட்டிப் புதைத்த இந்த இனம் 'தெருவில் நாய் போலக் கிடந்தான்' என்ற செய்தியில் குதூகலிப்பதும்....

தெரியாத துயரங்களிலும் 'யார் பெற்ற பிள்ளையோ?' என்று இன்னொரு தாயின் துயரத்தைப் பகிர்ந்து தவித்த இனம்.

இன்று மனிதம் தொலைந்ததால் மிருகம் கோலோச்ச....இந்தக் கொடூரமான கொலை வெறியும் குரூரமான குதூகலிப்பும் எங்கிருந்து வந்தது? என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?

*(நன்றி:- தாயகம்)*

(அடுத்த வாரமும் தொடரும்)

# சில கவிதைகள்

## வைரமுத்துக்களைவிழுங்கிய சுனாமி



சுனாமி என்றவுடன்
சுள்ளென்று
பேப்பரும் பேனாவுமாய்
பிணங்களை சொற்களாக்கி
சிதையடுக்க வந்த கவிஞர்களிடையே
உயிரெழுத்தோடு
ஒரு கவிதை கொண்டுவந்த
கவிச்சக்கரவர்த்தி
விவேக் அவர்களே!
வைரமுத்துக்களையும்
விழுங்கிவிட்ட சுனாமியே!
உங்களுக்கு எங்கள்
உள்ளம் அவிழ்ந்த பாராட்டுகள்.

சினிமாவின்
இசை அமைப்பாளர்கள் எனும்
சடையப்பவள்ளல்கள் இல்லாமலேயே
கடைவிரித்து... இந்த
கடலின் மூக்கை உடைக்க வந்த
கவிப்புயலே
கம்பர்கள் வேண்டுமானால்
ராமர்களைப் பாடி
பாராயணம் செய்திருப்பார்கள்.
கடல் அரக்கன் ராவணனை
உன் பேனா அம்புகள்
தாக்கியதில்
போர் நாகரீகம் தெரிந்திருந்தால்
அவன் அந்த
கடலுக்குள்ளேயே மூழ்கி
தற்கொலை செய்திருக்க வேண்டும்!

உன் கவிதையைப்
படித்த பிறகு
சில சினிமாக் கவிஞர்களுக்கும்
'இனிமா' கொடுத்தது போல்
இருக்கும்.
ஒரு சிரிப்பு நடிகனுக்குள்
ஆவேச எரிமலையின்
எரிப்பு அலைகள் எப்படி பிறந்திருக்கும்?
என்று இவர்கள்
மண்டை காய்ந்து கொள்ளட்டும்
கவலை இல்லை.
சிரிப்பதற்காகக் காட்டப்படும்
கார்ட்டூன் படங்களில்
எரிமலைகள் கூட
சரிப்பைத்தான் வரவழைக்கும்.
விவேக் அவர்களே!
உங்கள் வரிகள் சோகம்
அந்தப் பூகம்பங்களின்
அடிவயிற்றையே
கலங்கடித்தன.
விவேக் என்றவுடனே
சிரிப்போடுதான்
இந்தக் கவிதையை
படிக்க ஆரம்பித்தோம்.
ஆனால்
நாங்களும்
'கண்ணீருடன்' முடித்தோம்.



"கரை வரை வா!
எங்கள் உயிர் வரை
வேண்டாம்'
இந்த வரிகளை
ஊனும் உயிரும்
உருகிக் கேட்பதற்காக
உயிர் இழந்து கிடக்கும்
இவர்களுக்கும்
உயிர் வந்திருக்கும்.
எதற்கும் அந்த
பிண அறைகளை
சோதித்து விடுங்கள்.!

விருது வழங்கும் நிறுவனங்களே!
புகழ்பெற்ற சிலைகள் மீதும்
மற்றும் பிரபலங்கள் மீதும்
எச்சமிடும்
வெறும் காக்கைகளா
நீங்கள்?
அப்படியும்
பறந்து திரிந்து போக
சோம்பல் பட்டு
ஒரே இடத்தில்
அஞ்சாறு தடவை
எச்சமிட்டு கும்பாபிஷேகம் நடத்தும்
வேடிக்கை இனி வேண்டாம்.
கொச்சைப்படுத்தியது போதும்
மிச்சம் வையுங்கள்
கொஞ்சம் விருதுகளை
இந்த மகா கவிஞன்களுக்கு!

எனக்கு விருதா?
என்று
விருதாக்களாய்
ஆகிப்போன அவலங்களும்
நடந்ததுண்டு
நரைத்த பிறகும்
உடல் உதிரப்போகும்.
பக்குவம் வந்தபிறகுமே தான்
விருது
என்று ஒரு நூல் பிடித்திருப்பீர்கள்.
அப்போது
நீங்கள் அனுப்பிய விருதுகள்
காலியாகிப்போன
அந்த சாய்வு நாற்காலிகளுக்கோ
இல்லை.
அந்த சாம்பல் வனங்களுக்கோ தான்
போய் சேரும்.
விருது வழங்கும் இந்தச் சுறுசுறுப்புக்கு
விருது வழங்கும் உங்களுக்கே
ஒரு விருது வழங்கவேண்டும்.

*–கவிஞர் பவளமுத்து*



## பிணம் செய்த கடல்

அலைகள் பற்றி எப்பொழுதும்
பேசிக்கொண்டே இருந்தோம்
அது எங்களிடம் வரும் வரை
அலைகளை எப்பொதும் நேசித்துக்கொண்டே
இருந்தோம்
அது எங்களைக் காவு கொள்ளும் வரை

அலைகள் விருப்புக்குரிய ஒன்றாகவே
இருந்தன
டிசம்பர் 26 வரை.

கால் நனைக்கவும் கட்டிப்பிடிக்கவும்
என்றுதானே எண்ணியிருந்தோம்
காவு கொள்ளப்படும் வரை.

அலைகள் அழகாகத்தானே இருந்தன
ஏன் இப்படி ஆவேசம் கொள்ளும்படியாய்
ஆனதோ?

அலைகளே அலைகளே இனி
எப்பொழுதும் இப்படித்தானா?

உல்லாசம் என்றால் கடல் என்றுதானே
எண்ணியிருந்தோம்.
காவு கொள்ளும் என்று யாரும்
சொல்லவில்லையே..
உலகம் அழிந்துவிடும் அழிந்துவிடும்
என்றெல்லாம் சொன்னார்கள்....
உலக அழிவு என்றால் இப்படித்தானா?

ஊழிக்காலத்தில் வாழ்கிறோம் என்றார்களே
நம்பவில்லையே.... நாம்
ஆழிப்பேரலை எம்மை வந்து அள்ளும் வரை.

அலை அள்ளிய பிணங்களின் மீது
நடக்கிறோம்
இன்னும் கரை நெடுக.

அலையே அலையே உன்னைப் பார்க்க
இன்னும்
பயமாய் இருக்கிறது.

இனிமேலும் கால் நனைக்க வரமாட்டோம்
உன்னண்டை
எமது உடல்கள் மீது மிதித்து.

*–இளைய அப்துல்லாஹ்*

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இலங்கையுடன் இந்திய - அமெரிக்க உறவுகள்

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, இனப் பிரச்சினைக்குச் சமாதான ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டமைக்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் நோபல் சமாதானப் பரிசு வழங்கும்படி அமெரிக்க காங்கிரஸ் சிபார்சு செய்ய வேண்டுமென்று காங்கிரஸ்"க்குச் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்த ஸ்டீபன் ஜே செலார்ஸ் தனது அறிக்கையின் இறுதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.




"சகல இலங்கையர்களும் தமது வழமையான சமாதான வாழ்வுக்குத் திரும்பக்கூடியதும் மேலும் சுபிட்சமான, நீதியான, மனித சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பொது முயற்சியில் ஈடுபடவும் கூடிய பாதையொன்றினைத் திறந்துவிட்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவமிக்க சந்தர்ப்பமாகவே ஜூலை 29ஆம் திகதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதெனக் கூறி இந்த அறிக்கையை முடிக்க விரும்புகிறேன்" என்று அமெரிக்க காங்கிரஸின் ஆசிய - பசுபிக் விவகாரங்களுக்கான உப கமிட்டியின் தலைவர் செலார்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, 1987ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் இலங்கை இனப் பிரச்சினையில் தலையிடாத கொள்கையையே அமெரிக்கா பின்பற்றி வந்ததென்பதற்குச் செலார்ஸின்" அறிக்கையையும் உதாரணமாகக் காட்ட முடியும். சோவியத் யூனியனும் அமெரிக்காவும் பனிப்போரில் மும்முரமாக ஈடுபட்டிருந்த 1990க்கு முற்பட்ட காலத்திலேயே இலங்கை இன விவகாரத்தில் இந்தியா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் ஒரே நிலைப்பாட்டினையே எடுத்திருந்தனவென்பதைத் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது சோவியத் ரஷ்யாவின் பல மாநிலங்கள் பல்வேறு நாடுகளாகப் பிரிந்து செல்வதற்கு முன்னதாகவே இலங்கையைத் தனது செல்வாக்குப் பிராந்தியமாகக் கட்டியெழுப்பும் திட்டத்தில் அமெரிக்கா

**இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பேணப்பட வேண்டுமென்ற அதாவது தமிழீழப் பிரிவினைக்கெதிரான நிலைப் பாட்டிலேயே இந்தியாவும் அமெரிக்காவும் இருந்தாலும், இரு நாடுகளுமே மறைமுகச் செயற்பாடுகளில் ஈடுபட்டனவென்பதை மறுக்க முடியாது. தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களுக்கு 1987ஆம் ஆண்டு வரை இந்தியா ஆதரவளித்து வந்தமையையும் இலங்கை அரசுக்கு ஆதரவாக இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவைக் கொழும்பிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தில் 1985ஆம் ஆண்டு நிறுவியமையையும் இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.**

பெரிய ஆர்வமெதனையும் காட்டவில்லையென்று கூறலாம். சோவியத் ரஷ்யாவின் மிக நெருங்கிய நேச நாடாக இந்தியாவும் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாகப் பாகிஸ்தானும் திகழ்ந்த அன்றைய காலகட்டத்தில் கூட, இலங்கையைத் தனது செல்வாக்குப் பிராந்தியமாக்குவதற்கான பாரிய முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபடவில்லையென்று கூற முடியும். அப்போதெல்லாம் இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினை தொடர்பான பாரிய யுத்தங்களிலும் ஈடுபட்டிருந்தமையும் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடியதே. சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் உலகின் பல பகுதிகளில் தத்தமது செல்வாக்குப் பிராந்தியங்களை ஏற்படுத்தும் போட்டோபோட்டியின் ஓர் உப விளைவாகவே பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிக்கப்பட்டதென்று சில தரப்பு ஆய்வாளர்கள் கூறுவதையும் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

(அரசியல் தொடர்)

1970களின் முற்பகுதியில் நிகழ்ந்த பங்களாதேஷ் பிரச்சினையிலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தின் விளைவாகவே இலங்கை இனப் பிரச்சினையைத் தீவிரமாகப் பயன்படுத்த அமெரிக்கா விரும்பவில்லை அதனால்தான். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்திய மேலாண்மையை அனுசரித்துப் போகும் நிலைப்பாட்டினை அமெரிக்கா எடுத்திருந்ததென்று கூறுவதில் தவறிருக்க முடியாது. இந்திய மேலாண்மையை அமெரிக்கா அனுசரித்துப் போனாலும் இரு முனைத் தந்திரோபாயங்களையே கடைப்பிடித்து வந்ததென்பதை உறுதியாகக் கூற முடியும்.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக் குழப்பம் நடைபெற்று இரண்டு மாதங்களின் பின்னர், அப்போதைய அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் கஸ்பெர் வெயின்ஸ்பேகர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்துக்கு உண்மையில் உள்நோக்கம் இல்லாமலில்லை. ஏனெனில் இலங்கை அரசாங்கத்தையும் தமிழர் தரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி எடுத்த பகீரத முயற்சி வெற்றியளிக்கும் வேளையிலேயே வெயின்ஸ்பேகர் கொழும்பு வந்து சேர்ந்தார். வெயின்ஸ்பேகரின் இலங்கை விஜயம் வெறும் மரியாதைப் பயணமென அரசாங் கத்தினால் வர்ணிக்கப்பட்டபோதும், பல ஊடகங்கள் இந்த விஜயத்தின் பின்னணியில் அமெரிக்காவின் சூழ்ச்சிக் கரமிருப்பதாக வர்ணித்தன. அப்போது பதவியிலிருந்தவர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


மேற்குலக நாடுகளின் நெருங்கிய சகாவான ஜனாதிபதி ஜெயவர்த்தன. என்ன நடந்தாலும் தனது நட்பு நாடுகளை அமெரிக்கா கைவிடாது என்பதைக் காட்டுவது போலவே அமெரிக்கப் பாதுகாப்பமைச்சரின் விஜயம் அமைந்திருப்பதாக இலங்கை ஊடகங்கள் வர்ணித்தன. வெயின்ஸ்பேகரின் இலங்கை விஜயத்தின் நோக்கம் மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. இவரது விஜயத்தின் பின்னர் இரு மாதங்கள் கழித்து அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகனின் விசேட பிரதிநிதியாக ஜெனரல் வேர்னல் வோல்டர்ஸ் இலங்கை வந்தமைக்கும் காரணங்கள் இல்லாமலில்லை. இலங்கையில் இராணுவத் தளங்களையோ அல்லது அதற்கான வசதிகளையோ பெறுவதற்காகவே வோல்டர்ஸ் இலங்கை வந்தாரென்று பரவலாக விமர்சனங்கள் எழுந்தன. குறிப்பாக அவர் திருகோணமலையில் கண் வைத்துக்கொண்டே வந்து சேர்ந்தாரென்றும் இடதுசாரிக் கட்சிகள் கண்டனம் தெரிவித்தன. இவற்றையெல்லாம் மறுதலித்த வோல்டர்ஸ், ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் பரஸ்பர நலன் சார்ந்த விடயங்கள் பற்றியும் சர்வதேச நிலைமை பற்றியும் கலந்துரையாடியதாக ஏற்றுக்கொண்டார்.

இருவரது பேச்சுவார்த்தை பற்றிய விபரங்களும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தபோதிலும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு அமெரிக்கா வற்புறுத்தியமை ஒரு விடயத்தை வெளிப்படையாக எடுத்துக் காட்டியது. அதாவது இலங்கை அரசுக்கு நேரடியாக ஆயுத உதவிகள் வழங்க அமெரிக்கா தயாரில்லையென்பதே அதுவாகும்.

இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவை பேணப்பட வேண்டுமென்ற அதாவது தமிழீழப் பிரிவினைக்கெதிரான நிலைப் பாட்டிலேயே இந்தியாவும் அமெரிக்காவும் இருந்தாலும், இரு நாடுகளுமே மறைமுகச் செயற்பாடுகளில் ஈடுபட்டனவென்பதை மறுக்க முடியாது. தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களுக்கு 1987ஆம் ஆண்டு வரை இந்தியா ஆதரவளித்து வந்தமையையும் இலங்கை அரசுக்கு ஆதரவாக இஸ்ரேலிய நலன் பேணும் பிரிவைக் கொழும்பிலுள்ள அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தில் 1985ஆம் ஆண்டு நிறுவியமையையும் இதற்கு உதாரணமாகக் கூற முடியும். அத்துடன் இலங்கைப் படைகளுக்கு உதவியளிக்கவும் தமிழீழப் போராட்ட சக்திகளுக்கெதிரான சில இராணுவ நடவடிக்கைகளில் வழிகாட்டுவதற்கு இஸ்ரேலிய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த படைவீரர்கள் கொழும்புக்கு வருகை தந்தமையையும் கூட இதற்கு உதாரணமாகக் கூற முடியும்.

1970ஆம் ஆண்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் இஸ்ரேலுடனான இராஜதந்திர தொடர்புகளைத் துண்டித்தது.

(தொடர்ந்து வரும்....)




**வ**ணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! நாட்டு நடப்பு நாளுக்கு நாள் மாறிக்கொண்டு வருகுது. சுனாமி வந்ததும் அதனால ஏற்பட்ட அழிவும் தலைப்புச் செய்திகளாக வந்த நிலைமை மாறி இப்ப அந்நியப் படை எண்ட பிரசாரம் ஒரு பக்கமும், அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது ஒரு பக்கமும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறது இன்னொருபக்கமுமாக நாடு அரசியல் சாக்கடைக்குள்ள மீண்டும் விழுந்துட்டுது....இந்த கேவலங்கெட்ட வாழ்வு முறைமைக்குள்ளதான் நாங்களும் வாழ வேண்டிய கட்டாயம் எண்டு மக்கள் தலையில அடிச்சுக்கொள்ளிறது புரியுது. திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது எண்டுவினம். அது போல திருந்த வேண்டியவையள் திருந்தும் வரைக்கும் நாடு திருந்தாது.

***சின் :-*** *தமிழ்த் தொலைக்காட்சியொண்டு அலையால அழிஞ்சு போன காட்சிகளையே அடிக்கடி காட்டி உளவியல் ரீதியான பாதிப்பை இன்னும் அதிகரிக்கச் செய்கிறதே.....*

**மன் :-** அது தமிழ்த் தொல்லைக்காட்சி. பழைய காட்சிகளை மட்டுமே போடுகினம். பழைய நேர்காணல்களையும் சேர்த்தெல்லோ போடுகினம். சுனாமிதான் இப்ப ரென்ட் எண்டதால அதைத்தான் அடிக்கடி போட வேணும். அப்பதான் விளம்பரமாகும் எண்டு பனிப்பாளரா இருக்கிறவர் பணி பணியெண்டு பணிக்கிறாராம்.

புதுசா ஒண்டுமில்லாதவையளும் வேறு வழியில்லாட்டிக் காட்டினதைத்தானே காட்டுவினம். இதில என்ன புதினமெண்டால் நடுநிலை, பக்கஞ்சாராமை எண்டெல்லாம் விளம்பரம் போடுகினமே, அதுதான் இவையளின்ர புது நிகழ்ச்சி....அதை விட எதைக் காட்டச் சொல்கிறீர்...?

***சின் :-*** *இவையின்ர பொலிற்றிக்ஸ் பிளாஷ் பெக்கில் பச்சைக் கலர் யானையொண்டு மேயுதெண்டது இப்ப சனத்துக்கு விளங்கிவிட்டுது. யானையின்ர நிழலில வரிவரியா ஒரு புலிக்குட்டியும் ஓய்வெடுக்குது. ம்......எல்லாம் நேரம்.....கிட்டுவின்ர பன்னிரெண்டாவது நினைவையொட்டி மன்னாரில கொடியேற்றப் போய் படைத் தரப்புக்கும் உங்கட தம்பிமாருக்கும் முறுகல் வந்துச்சுதாமே....*

**மன் :-** வந்துச்சுது....பஸ்ராண்டில ஏத்தப் போனவையாம். ஏற்கெனவே உப்பிடி ஒரு பிரச்சினை வந்து அதில எஸ்.எல்.எம்.எம்.... தலையிட்டு இனி அரசின்ர கட்டுப்பாட்டுப் பகுதியில கொடி ஏத்தக் கூடாதெண்டு தீர்மானிச்சவையாம். அதையும் மீறி தம்பிமார் கொடியை ஏத்துவம் எண்டு கொக்கு நிக்குமாப் போல ஒற்றைக் காலில நிண்டிச்சினமாம். இந்த மாதிரி நிண்டுபோட்டு சனங்களின்ர தலையில போடுவினம் எண்டு முன்கூட்டியே தெரிஞ்சதால சனம் உந்தக் கொடியேற்றத்துக்குள்ள தலையைப் போடாம ஒதுங்கிவிட்டுதுகள். பிறகு மைதானத்தில நிண்டு முறுகிச்சினமாம். சீருடைக்காரர் ரொம்பக் கடுமையா நிக்கவும் இரவு ஏழு மணிக்குப் பிறகு கலைஞ்சு போயிட்டினமாம். இது வழமையான சம்பவந்தான். எண்டாலும் சனங்கள் விலகி ஒதுங்கினதுதான் ஆச்சரியமாக் கிடக்கு.

***சின் :-*** *இதில ஆச்சரியப்பட என்ன இருக்கு...சனத்தை வில்லங்கமாக் கூட்டிக் கொண்டு போய் சீருடைத் தரப்போடை முறுகுவினம். பிறகு சனத்துக்குள்ள இருந்து கொண்டு படைகளுக்கு கல்லால, பொல்லால அடிப்பினம். படையினர் திருப்பித் தாக்குவினம். பிறகு படையினர் பொதுமக்களைத் தாக்கிப் போட்டினமெண்டு ஊடகங்களுக்கு செய்தி குடுப்பினம். இது சனத்துக்கு நல்ல படிப்பினையா இருக்கிறதால சனம் ஒதுங்கியிருக்கும்.*

*தம்பிமார் சிறுவர்களைப் படைக்குச் சேத்து வருகினம் எண்டு ஐ.நா. சிறுவர் அமைப்பு ஏற்கெனவே குற்றஞ்சாட்டி இருக்கேக்க, அரசுதான் தங்கள் மேல தவறான பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கெண்டு மகளிர் அரசியல் பொறுப்பானவர் தமிழினி காரசாரமாகக் கதைச்சிருக்கிறாவே.....*

**மன் :-** இவை சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கினம் எண்ட குற்றச்சாட்டை யூ.என்.எச்.சி.ஆர். எப்பவோ வச்சிட்டுது. இப்ப புது விஷயம் என்னெண்டால், சுனாமிப் பேரழிவுக்குப் பிறகு நிர்க்கதியா நிக்கிற சிறுவர்களையும் தம்பிமார் பிடிக்கினம் எண்டதுதான். ஐ.நா.வோடை நெருங்கிப் போகிற பாணியை தேடிற இக் கால கட்டத்தில அவையளைக் கண்டிக்க ஏலாதெண்டதால அரசாங்கத்தை ஒரு பிடி பிடிக்கினம். தொப்பி அளவா இருக்கிறவை போட்டுக்கொள்ளுங்கோ எண்டு அரசு தன்ர வேலையைப் பார்க்குது....

***சின் :-*** *அப்பிடியெண்டால் அரசுக்கும் அந்த கண்டிப்புக்கும் எந்த சம்பந்தமுமில்லை எண்டிறியள்....மீட்புப் பணிக்கு இலங்கைக்கு வந்திருக்கிற வெளிநாட்டுப் படைகளை கண்டு மக்கள் அச்சப்படுகினமெண்டும் செய்திகள் பரவத் தொடங்கியிருக்கே..........*

**மன் :-** அதுதான் கொடுமை...அடுத்தது என்ன செய்யிறதெண்டு அநாதரவாக நிக்கேக்க மீட்புப் படைகள் சமான்களை அள்ளிக் கட்டிக்கொண்டு வரேக்க வாயைப் பிழந்த படி பார்த்த நாங்கள் அவயள் வாறதை அனுமதிச்சதாலதான் இன்னும் கூட பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இலங்கைக்கு வந்து போகினம். இதுதான் உண்மை. தவிரவும் எங்கட அரசால தனிச்சு நிண்டு இழந்தவையளை .....ஈடுசெய்ய ஏலாது. கட்டாயம் வெளிநாடுகளின்ர உதவி தேவை. மக்களுக்கு இதில பிரச்சினை இல்லை. மக்களின்ர பெயரால கொலை செய்யிற வைக்கும் கொள்ளையடிக்கிறவைக்குந்தான் இந்த படைகளின்ர வருகை தலையிடியாக் கிடக்கு...அதே நேரம் போங்கோவெண்டு நேரடியாச் சொல்லிற முதுகெலும்பும் அவையளுக்கு கிடையாது. மக்கள் அச்சப்படுகினம் எண்டு சொல்லிறதுதான் இருக்கிற ஒரே வழி. இதுவரைக்கும் மக்களிண்ட பெயரால என்னென்ன விரும்பத் தகாத சம்பவங்கள் நடந்ததெண்டது தெரியுந்தானே....

***சின் :-*** *தெரியும் தெரியும். அதே நேரம் மீட்புப் பணிக்கு வந்தவையளிட்டை இருந்து முழுமையா நாட்டை மீட்க வேண்டிய சூழல் வராமல் இருந்தால் சரிதான். பிறகு ஒட்டகத்துக்கு இடங் கொடுத்த கதையா இருந்திடக் கூடாது....இப்பவெல்லாம் பத்திரிகைகள் தம்பிமாரிட்டை இன்டர்வியூ கண்டு பக்கம் பக்கமாப் பிரசுரிக்கினமே. ஏதாவது உள்நோக்கம் இருக்குதோ.....*

**மன் :-** அப்பிடி ஒரு சந்தேகம் எனக்கும் இருக்கு. போகிற போக்கைப் பார்த்தா இனி வாற எலக்‌ஷனில, இப்ப எம்.பி.யெண்டு மார்தட்டிறவைப் யளுக்கு பென்சன் கொடுத்துப் போட்டு தம்பிமாரே நேரடியா வாக்கு வேட்டையில குதிப்பினம் போலதான் தெரியுது. பத்திரிகைகள் போடுறத நினைச்சுக் கவலைப்பட வேண்டியது இப்ப எம்.பி.ப் பதவியில சுகபோகமா இருக்கிறவையள் தான். நாங்கள் ஏன் யோசிக்க வேணும். வீரமான பத்திரிகை கொஞ்சம் நியுட்டல் லைனில நிண்டாலும் தினமும் குரல் கொடுக்கிறவையள் கரண்டிலேயே கையை வச்சுப் போட்டினம் போல தெரியுது.

***சின் :-*** *தம்பிமாரே, நேராகப் போட்டியிடக் கூடிய வாய்ப்பு இருப்பதாத் தெரியேல்லை. ஒருவேளை அது நடந்தால் சாகும் வரைக்கும் யாரின்ர காலைப் பிடிச்செண்டாலும் பார்ளிமெண்ட் சீற்றைத் தக்க வைக்கிற கனவில மிதக்கிறவையளின்ர நிலைமை படுமோசமாப் போயிடும்...அகதி முகாம்களில போதைப் பொருள் விற்பனை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறதே.....*

**மன் :-** உண்மைதான். விற்கிறது ஒரு கூட்டம். அதனை ஊக்குவிக்கிறது ஒரு கூட்டம். அது மட்டுமே! சமூகச் சீரழிவும் பெரியளவில எங்கட சனத்தை சீரழிக்கப் போகுது. இதையெல்லாம் கவனத்தில எடுத்து முடிச்சவிட்டு, மொல்லமாறிகளுக்கு வாய்ப்புக் குடுக்காம இந்த மக்களை நிரந்தர வாழ்வுக்கு திருப்ப அரசும், ஏனைய அமைப்புகளும் உடனடி நடவடிக்கை எடுப்பதே இப்போதைய தேவை.

**மன்னவரும் சின்னவரும்**

# ஓ......ஆண்டவனே!

**நாம்** அனைவருமே கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறோம்! ஆனால் அநேக நேரங்களில் நாம் செய்கிற பிரார்த்தனை எப்படி இருக்கிறது?

"கடவுளே, என் மனைவி சரியில்லை. அவளின் குணத்தை மாற்று! என் குழந்தைகள் சரியில்லை! அவர்களின் நடத்தையை மாற்று! என் பக்கத்து வீட்டுக்காரன் கலாசாரமே இல்லாமல் எதற்கெடுத்தாலும் என்னுடன் மோதிக்கொண்டே இருக்கிறான். அவனை மாற்று....!" என்று மற்றவர்களை மாற்றச் சொல்லித்தான் நாம் பிரார்த்தனை செய்கிறோம். இதையே சுற்றி வளைத்துச் சொன்னால், "இறைவா! இதை எல்லாம் பார்த்துக்கொண்டு கண்ணை மூடிச் சும்மா நிற்கிறாயே! நீ மாறு! நீ சும்மா இருப்பதை உடனே மாற்றிக்கொண்டு எனக்குச் சாதகமாக ஏதாவது செய்!" என்றுதான் நாம் பிரார்த்திக்கிறோம்.

என்ன விசித்திரம் பாருங்கள்....

பிரார்த்தனை என்பது நம்மை மாற்றுவதற்கா? இல்லை, கடவுளை மாற்றுவதற்கா?

உண்மை நன்கு தெரிந்திருந்தும் நாம் கடவுளை மாறச் சொல்லிப் பிரார்த்தனை செய்வது எத்தனை பேதமையானது!

இன்னும் சிலர் இருக்கிறார்கள். 'நான் தினமும் ஒரு மணி நேரம் பூஜை செய்வேன்' என்பதைப் பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள். இவர்களுக்குத் திருநீறும் குங்குமமும்கூட இமேஜ் சம்பந்தமான விஷயங்கள்.

வேறு ஒரு வகை பிரார்த்தனையும் இருக்கிறது.....

Prayer Moves Mountains என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி இருப்பது உங்களுக்குத் தெரியுமில்லையா....ஒரு பெண்மணி பொழுதுபோகாமல் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து மலைச் சரிவை இரசித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு இந்தப் பழமொழி நினைவுக்கு வர, அவள் கடவுளையே டெஸ்ட் செய்ய முடிவு செய்தாள்.

கண்களை மூடி முழங்கால் இட்டு, "ஆண்டவரே, கடலுக்கும் எனது வீட்டுக்கும் இடையே இருக்கும் இந்த மலையைக் கொஞ்சம் நகர்த்தினால் எனக்குக் கடல் காற்று வரும். ஆகவே, மலையை நகர்த்துவீராக!" என்று பிரார்த்தனை செய்துவிட்டுக் கண்களைத் திறந்து பார்க்கிறாள். மலை நகராமல், இருந்த இடத்திலேயே இருப்பதைப் பார்த்து இவளுக்கு ஒரே சந்தோஷம்.

'பிரார்த்தனை மலையை நகர்த்தும் என்பதெல்லாம் வெறும் பேச்சு. என் அனுமானம் சரிதான்' என்று இவள் தன்னைத் தானே முதுகில் தட்டிக் கொடுத்துக் கொண்டாள்.

இன்னும் ஒரு வகையான பிரார்த்தனை இருக்கிறது. அது மனசை எங்கோ அலைபாய விட்டுக்கொண்டு உதடுகளில் மட்டும் மந்திரங்களும் ஸ்லோகங்களும் வெளிப்படுத்தும் பிரார்த்தனை.

துறவி ஒருவர் தன் மதத்துக்கு அரிய பெரிய சேவைகள் செய்தார். அதைப் பாராட்டி மதகுரு அவருக்கு ஒரு விநோதக் குதிரையைப் பரிசளித்தார். அந்தக் குதிரையும் கடவுள் பக்தி நிறைந்த குதிரை!

'ஓ ஆண்டவனே!' என்று சொன்னால் அந்தக் குதிரை வேகமாக ஓடும். வேகம் குறையாமல் ஓட வேண்டும் என்றால், "ஓ ஆண்டவனே.... ஓ ஆண்டவனே" என்று திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். அதேபோல குதிரையை நிறுத்த வேண்டுமானால் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தால் போதாது. "நன்றி இறைவனே!" என்று சொன்னால்தான் குதிரை நிற்கும்.



குதிரையின் இந்தக் குணாதிசயத்தைத் துறவிக்கு விளக்கிவிட்டு மதகுரு போய்விட்டார். புதிதாகக் கிடைத்த குதிரையில் சவாரி செய்து பார்க்க ஆசைப்பட்ட துறவி குதிரையில் ஏறி உட்கார்ந்து "ஓ ஆண்டவனே..."என்றார். குதிரை நாலு கால் பாய்ச்சலில் ஓட்டமெடுத்தது. காற்றில் பறப்பதைப் போல துறவி உணர்ந்தார். உற்சாக மிகுதியில் குதிரையை இன்னும் வேகமாக ஓட வைக்க அவர், "ஓ ஆண்டவனே" என்று திரும்பத் திரும்பச் சொல்ல...... குதிரை புயல் வேகத்தில் மலைப் பாதையில் ஏறி ஓடுகிறது. குதிரை சவாரியில் தன்னை மறந்து லயித்திருந்த துறவி சுயநினைவுக்கு வந்தபோது திடுக்கிட்டுப்போனார்! ஆம்!

குதிரை ஒரு பள்ளத்தாக்கை நோக்கிப் புயல் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. துறவி குதிரையின் கடிவாளத்தைப் பற்றி இழுத்து அதை நிறுத்த முயன்றார். குதிரை நிற்காமல் தொடர்ந்து ஓடியது...அப்போது இந்தக் குதிரையின் குணாதிசயம் பற்றி மதகுரு சொன்னது நல்ல வேளையாக நினைவுக்கு வர, துறவி கண்களை இறுக மூடிக்கொண்டு, "நன்றி இறைவனே" என்று மரண பயத்தில் மலை முழுவதும் எதிரொலிக்கும்படி கதறினார். மந்திரம் போட்டது போல குதிரை நின்றது. ஆசுவாசப்பட்ட துறவி கண்திறந்து பார்த்தார். பள்ளத்தாக்கும் குதிரைக்கும் இடையே ஒரே ஒரு அடி தூரம் தான்! எதிரில் தலை சுற்ற வைக்கும் கிடுகிடு பள்ளத்தாக்கு! எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து தப்பியிருக்கிறோம் என்பது தெரிந்து மெய்சிலிர்த்துப் போன துறவி தன்னை மறந்து, "ஓ ஆண்டவனே!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட, குதிரை குபீரென்று வேகமெடுத்து ஓடிப்போய் பள்ளத்தாக்கில் பாய்ந்துவிட்டது.

கடவுளின் பெயரை இயந்திரத்தனமாக நாம் எப்படிச் சொல்கிறோம்...... பிரார்த்தனை என்பதை அதன் அர்த்தம் தெரியாமல் எப்படிச் செய்கிறோம் என்பதை விளக்கத்தான் இந்தக் கதை!

சரி, அப்படியென்றால், "எப்படித்தான் பிரார்த்தனை செய்வது?" இந்தக் கேள்விக்கு கபீர் வாழ்க்கையில் பதில் இருக்கிறது. கபீர் சொல்கிறார்.....

"நான் கடவுளைத் தேடாத இடம் இல்லை. கோயில், குளம், கோபுரம் என்று சுற்றிச் சுற்றித் தேடினேன். கடவுள் தென்படவில்லை. கடவுளைத் தேடித் தேடிக் களைத்துப்போன நான், சரி....கடவுள் தென்படாவிட்டால் என்ன? கடவுளைத் தரிசித்துவிட்டவனைப் போலவும் உணர்ந்துவிட்டவனைப் போலவும் என்னை நானே நினைத்துப் பார்த்துக்கொண்டேன். கடவுளை உணர்ந்துவிட்டவன் போலவே வாழவும் தொடங்கினேன். இறைத்தன்மை எனக்குள் தானாகவே வந்தது. அப்போது 'கபீர், நீ எங்கே இருக்கிறாய்? என்று கடவுளின் குரல் என்னுள்ளிருந்து கேட்டது" என்கிறார் கபீர்.

இதைத்தான் நவீன மனதத்துவ இயல் Act as it Theory என்கிறது இந்தத் தியரியின் மையமே 'நம்பு' என்பதுதான்.

'எதையும் நம்பிக்கையோடு செய். நீ தேடியது கிடைக்கவில்லையென்றால்...அது கிடைத்துவிட்டதுபோல நினைத்துச் சந்தோஷப்படு....அதன் பிறகாவது நிச்சயம் அது கிடைக்கும்' என்பதுதான் பிரார்த்தனையின் சாராம்சம்.

**நன்றி: சுவாமி சுகபோதானந்தா**

**(தொடர்ந்து வரும்)**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 103க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

தே.ஆனந்தகுமரன், 274/11, வலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1.ரஞ்சன் பஸ்டியன், 40/4B, பீட்டர்ஸ் லேன், தெஹிவளை.
2. எஸ் ஜெயச்சந்திரராசா, இராசேந்திரம் குளம், வவுனியா.
3. ஆர். அனஸ்ரினா, 65/3, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
4. க. கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் -03
5. கே. இராஜகோபால், 'அடைக்கலம் தோட்டம்', வட்டுக்கோட்டை.
6. ஜீ.ஏ. நிரோஷன், 158, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
7. வ.மன்னர் அன்ரனி, 16, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
8. எம் எம். ஹாலீத், 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் -03.
9. எஸ் ஷஞ்ஜித், 34, லவண்டர் வீதி, திருகோணமலை.
10. இதயமலர் ராஜ், கிராம சபை அலுவலக வீதி, குறிஞ்சாக்கேணி-02, கிண்ணியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 105

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | 8 | 9 |
| ■ | 10 | 11 | ■ | 12 |
| 13 | 14 | ■ | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | ■ |
| ■ | ■ | 21 | 22 | ■ |

### இடமிருந்து வலம்

1. இரவு வேளைக்கு பொருத்தமான ராகம்.
2. வட இந்தியாவில் அதிகம் பேசப்படும் மொழி (குழம்பியுள்ளது).
10. அங்கக் குறைபாடு ஒன்று.
13. கடற்கரைகளில் காணப்படுவது.
15. கடற்கோளினால் பலர் 'இந்த நிலையை அடைந்துள்ளனர் ஓர்எழுத்தைக் காணவில்லை.
17. அண்மைய இயற்கை அனர்த்தத்தால் பாதிப்படைந்த யாழ். மாவட்ட பிரதேசம் (குழம்பியுள்ளது).
21. தானியங்களுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. கமல்ஹாசன் - ஸ்ரீப்பிரியா இணைந்து நடித்த திரைப்படம் ஒன்று.
2. மறுமை - எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது).
4. கணவன்.
5. திராட்சை. இறுதி எழுத்து மறைந்து விட்டது (குழம்பியுள்ளது).
10. கண்முடித்தனமாக பணத்தை வீணே செலவு செய்பவன் (குழம்பியுள்ளது)
13. தந்திரமான மிருகத்தின் குரல் ஒலி.
15. தொண்டன் என்றும் பொருள்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 103 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கொ | 2 சு | 3 ழு | ■ | ■ |
| 4 ம் | 5 ம் | ■ | 6 தீ | ■ |
| 7 மூ | 8 க | 9 கு | ■ | 10 னி |
| 11 பு | 12 ன் | 13 அ | ■ | 14 தி |
| ■ | 15 ணா | 16 ஸ் | 17 ன் | 18 மூ |
| ■ | ■ | 19 க் | 20 தீ | 21 கு |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி **25.01.2005**க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-105**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.


## ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

**வண்ணச் சேலை பரிசுப் போட்டி**

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

79

பெயர்:.......................
முகவரி:.......................
.......................
தொழில்: .......................
கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **25-01-2005**

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? பூண்டுலோயா வாசகிக்கு அதிர்ஷ்டம்! 77

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்


**திருமதி.திலகேஸ்வரி.**
ஈட்டன் எஸ்டேட், பூண்டுலோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# நல்ல மனம்

காலைப் பொழுது புலர்ந்தது. பூபாள ராகங்கள் வெளியில் கேட்டுக் கொண்டிருந்தன. பனியின் தூறல் சூரியக் கதிரைக் கண்டு படிப்படியே நகர்ந்துகொண்டிருந்தது. பத்து வருடங்கள் வீட்டு வேலைக்காரியாக இருந்து வேலை செய்த அமீனா சோம்பலை முறிக்காமல் சுறுசுறுப்பாக எழுந்து வீட்டு வேலைகளைச் செய்தாள். அன்று அவளுடைய சேவைக் காலம் முடிந்து வெளியேறுவதற்குரிய ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தாள்.

"அமீனா! என்னம்மா, உன்னுடைய முடிவை மாத்திக்க மாட்டாயா"



முதலாளி கேட்கவே பதில் சொன்னாள்.

"முதலாளி! பத்து வருடங்கள் உங்களுடைய வீட்டில் வாழ்ந்து பார்த்து விட்டேன். நான் எனது வீட்டுக்குப் போகத்தான் வேண்டும்."

ஒரு கணம் தடுமாறினான். கடந்து போன காலங்களை நினைவு படுத்திப் பார்த்தான். அமீனா பத்து வயதாக இருக்கும்போதே வந்து சேர்ந்தவள். சொந்தம் பந்தம் பெரிசா இல்லாத போர்வழி. வீட்டு வேலைகளைச் செய்வதில் அவளுக்கு நிகர் யாரும் இல்லை. முன்பின் அறியாதவள். அவளுடைய தாய் கொண்டுவந்து சேர்த்துவிட்டு பல வாக்குறுதிகளைக் கூறிச் சென்றிருந்தாள்.

முன்பின் அறியாதவளாக இருந்தாலும் சொந்த வீட்டை விட்டு வேறு வீட்டுக்கு வந்ததில் சுதந்திரம் இருக்கவில்லை. இளம் வயசு. பெற்ற தாயை மறந்து வாழ்வதில் சிரமம் இருக்கத்தான் செய்தது. தன்னுடைய விதியை நினைத்து அவளால் அழ முடியவில்லை. பாடசாலைக்குச் சென்று படிக்க வேண்டிய வயதில், நிம்மதியாக வாழ வேண்டிய காலகட்டத்தில் அமீனா சிறைக் கைதி போல் நான்கு சுவர்களுக்குள் காலத்தைக் கழிக்க வேண்டிய நிலை.

அறிமுகம் இல்லாதவர்கள் ஆதரவாக இருப்பார்கள் என்று தன்னுடைய தாய் சொன்ன வார்த்தையை வேதமாக நம்பினாள். விபரம் அறியாதவள். கூலிக்கு வேலை செய்த அனுபவம் இல்லாதவள். எப்படியாவது வயசுக்கு வரும் வரை வாழ்வதுதான் என்று திடசங்கற்பம் கொண்டாள்.

நாட்கள் நகர்ந்து மாதங்களாகி வருடங்களும் கடந்துவிட்டன. முதலாளியும் முதலாளி வீடும் சுகமாக இருந்தது. எதையும் தாங்கிக்கொண்டு இரண்டறக் கலந்துவிட்டாள். பாவம் அறியாதவள். பார்ப்பதற்குரிய அழகை அடைந்திருந்தாள்.

"அமீனா! எங்களுக்கு தெரியாம எந்த இடத்துக்கும் போகக் கூடாது. அப்படி அவசியம் போக வேண்டுமானால் கேட்டுக்கொண்டுதான் போக வேணும்."

முதலாளியின் சொல்லை அப்படியே கேட்டுக்கொண்டாள். அப்படிப் பழக்கப்பட்டுப்போனாள்.

முதலாளிக்கும் அவருடைய மனைவிக்கும் இடையில் சிறு வாக்குவாதம். இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அமீனா, விடாப்பிடியாக போக வேண்டும் என்று உறுதியாய் இருந்தாள். வாட்டசாட்டமானவள். வயதுக்கு வந்தவளை இன்னும் வீட்டில் வைத்துக்கொண்டு வேலை வாங்குவதை முதலாளியின் மனைவி விரும்பவே இல்லை. வளர்ந்த பிள்ளைகள் உள்ள இடம். நாளை ஒரு நேரம் நடக்கக் கூடாதது நடந்துவிட்டால் ஊருக்கு பதில் சொல்ல இயலாது என்பது அவளுக்குத் தெரியும்.

"அமீனா! நீ உங்க வீட்டுக்குப் போ. எங்கு போனாலும் நீ நல்லா இருக்க வேணும்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் அமீனா அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை. பெண்ணுக்குப் பெண்தான் உறவு. பத்து வருடங்களிலும் அவள் அடைந்த இன்பத்தை விடத் துன்பமே அதிகம். இருந்தாலும் பொறுத்துக்கொண்டு காலத்தைக் கழித்தாள். எப்படி இருந்தாலும் மாதாமாதம் சம்பளம் கிடைப்பதில் அவள் மகிழ்ச்சியடைந்தாள். அவளுக்கு ஏற்பட்ட துன்பமெல்லாம் பனி போல் மெல்ல மெல்ல விலகிச் சென்றன. எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொண்டே இருந்தாள். பாவம் அவள் மீது இரக்கப்பட யாருமே முன்வரவில்லை.

இளமையோடிருந்த அமீனா பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருந்தாள். ஏழையாக இருந்தாலும் அவளுடைய பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. செல்வந்த இடத்தில் பிறந்திருந்தால் நிலைமை வேறாக இருக்கும். வேலைக்காரியாக இருந்தபோதே சொந்த வீட்டை மறந்து வாழ்ந்து வந்தவளுக்கு ஏற்பட்ட சங்கடமான நிலை அவளுடைய மனதைப் புண்படுத்தியது. இவற்றை எல்லாம் முதலாளியிடம் சொல்லி வேதனைப்பட அவள் விரும்பாமல் மனசுக்குள் வைத்தே வாழ்ந்தாள்.

"அமீனா! உன்னுடைய உம்மா உன்னைப் பார்த்துவிட்டுப் போக விரும்பி கடிதம் போடவில்லையா!"

"கடிதம் வருவதும் போவதும் உங்களுக்குத்தானே தெரியும்."

"அப்படியெல்லாம் சொல்லாதே. உன்னுடைய உம்மா உன்னைப் பார்க்க வரப் போகிறாவாம். நல்லதுதான். ஆனால் நடந்து போனதையெல்லாம் சொல்லி நடுத் தெருவில நிற்க வெச்சுப் போடாதே."

"முதலாளி! உங்களுடைய உணவை திண்டு வளர்ந்தவள் என்பதை நான் மறக்க மாட்டேன்."

அமீனாவின் உள்ளத்தைப் புரிஞ்சுக்காமல் பேசிவிட்டார். அதனால் சற்று வெட்கம் வந்து மேலிட்டது.

ஒருமுறை மகளைப் பார்த்துவிட்டு வரலாம் என்ற நினைப்பில் சென்றவளுக்கு அமீனாவைக் கண்டதும் அழுகை வந்தது. மகளுடைய கையில் கட்டப்பட்டிருந்த துண்டைக் கண்டாள். அதனுள் இருந்த காயம் தாயினுடைய மனதைப் புண்படுத்தியது. தேம்பித் தேம்பி அழுதாள்.

"அமீனா இந்தக் காயம் எப்படி மகளே வந்தது."

"வேலை செய்துகொண்டிருக்கும்போது தெரியாமல் நெருப்பு சுட்டுவிட்டது. இப்போ இலேசாகிவிட்டது" என்றாள்.

"மகளே! எல்லாம் நமது தலைவிதி. என்ன செய்யலாம்." மகளுக்கு ஆறுதல் கூறினாள்.

"இப்படிப்பட்ட கஷ்ட நிலை யாருக்குமே வரக் கூடாது" என்று பிரார்த்தனை செய்தாள். மகளைக் கையோடு கூட்டிக்கொண்டு போகலாம் என அவள் நினைத்தாலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை மீறி நடக்க அமீனா விரும்பாத காரணத்தால் அவளுடைய தாய் விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள்.

வேலைக்கு அமர்த்திக்கொண்டவர்கள் எத்தனையோ பேர் மற்றவர்களின் உரிமையை மீறுகிறார்கள். இவையெல்லாம் வெளிச்சத்துக்கு வருவதில்லை. வருவதற்குப் பாரிய தடைகள். இவற்றையெல்லாம் உணராதவள்தான் அமீனா. என்றாலும் இன்னும் அடிமைப்பட்டு வாழ அவள் விரும்பவே இல்லை.

வீட்டுக்கார முதலாளி அமீனாவை அழைத்தான். "நடந்துபோன விடயங்களையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு வஞ்சம் தீர்த்துக்க வேண்டாம்" என்று கெஞ்சினான். ஏதோ தெரியாத்தனமாக செய்ததையெல்லாம் மறந்துவிடச் சொன்னான். அமீனா அமைதியாக கேட்டுக்கொண்டே இருந்தாள். இருந்தாலும் அவளுடைய மனம் எதையோ வேண்டி நின்றது.

"முதலாளி! எனக்கு அடிச்சீங்க, காயப்படுத்திவிட்டீங்க. பசியோடு போட்டீங்க. இவற்றையெல்லாம் சின்ன வயசிலிருந்தே அனுபவிச்சுப் போட்டன். இவற்றையெல்லாம் பொறுத்தேன், ஏன் தெரியுமா? வீட்டு வேலைக்காரி என்பதற்காகஇ

அதெல்லாம் உண்மைதான் நான் மறுக்கவே இல்லை. அதற்காகத்தான் மன்னிப்புக் கேட்கிறேன்."

"இதையெல்லாம் மன்னித்துவிட்டாலும் நான் இந்த வீட்டில் இருந்து கற்பிழந்தவளாகத்தானே போகிறேன்."

முதலாளிக்கு உலகமே இருண்டது. அமீனா சொன்ன வார்த்தையைக் கேட்டதும் இடியேறு கேட்ட நாகம் போல ஆனான். அவளுடைய வார்த்தையை நம்பவே முடியவில்லை. ஆனால் நம்பவும் வேண்டும் போல இருந்தது. மனைவியை அழைத்தான். கணவனின் அழைப்பைக் கேட்டு ஓடோடி வந்து விடயத்தைக் கேட்டாள். அவளுக்கும் அதிர்ச்சியுண்டானது.

இவ்வளவு காலமும் கட்டிக் காத்து வந்த மானம், மரியாதை எல்லாம் காற்றில் பறந்து போய்விடப் போகிறதே என்று கவலைப்பட்டான்.

அமீனா பொய் சொல்லமாட்டாள் என்பதும், ஒழுக்கமானவள் என்பதும் முதலாளிக்கு மட்டுமல்ல, அவருடைய மனைவிக்கும் தெரியும். இவர்களோடு பத்து வருடங்கள் தெரிந்தோ, தெரியாமலோ வாழ்ந்தவள். வீட்டுப் பிள்ளை போல் பழகியவள். இப்படிப்பட்டவள் சொன்ன விடயத்தில் உண்மை இருக்குமா என்று விசாரித்துப் பார்க்க முற்பட்டார்கள்.

முற்றத்து வாயில் பக்கம் தபால்காரனின் மணி ஒலி கேட்டது. விரைந்து சென்று அவன் கொடுத்த கடிதத்தைப் படித்துப் பார்த்தான் முதலாளி. அவனது மகன் எழுதியிருந்தான்.

**-ஏ.எம்.எம்.பாறூக், மருதமுனை.**

அமீனாவை எங்கேயும் போக வேண்டாம் என்று சொல்லி வீட்டிலேயே வைத்துக்கொள்ளும்படியும் அவள் சொல்வதெல்லாம் உண்மைதான் என்றும் குறிப்பிட்டிருந்தது.

முதலாளி அமீனாவை அழைத்து, "அமீனா உன்னை எங்கேயும் அனுப்ப வேண்டாம் என்று உன் கணவன் கடிதம் எழுதியிருக்கிறார். நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு உள்ளே போ. நீ என் மருமகள்தான்" என்று திட்டமாகக் கூறி உள்ளே அனுப்பினார். இப்போது அமீனா உண்மையான மருமகளாக வீட்டுக்குள் சென்றாள்.

(யாவும் கற்பனை)

# அவனா இவன்..!!

கோடை வெய்யில் கொளுத்தியது. சாலையோரம் நிழலுக்கு ஒதுங்கக்கூட ஒரு மரமில்லை அங்கே. தொண்டை வேறு வறண்டு நா தழுதழுத்தது. அருகிலிருந்த தேநீர்க் கடைக்குள் நுழைந்தேன். அங்கு கிடந்த நாற்காலியில் போய் அமரவும் "என்ன சாப்பிடுகிறீர்கள்..." என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். எதிரே நின்றவனைக் கண்டதும் எனக்கு ஆச்சரியமாகவிருந்தது. அவனும் என்னை அடையாளம் கண்டுகொண்டான் போலும்.

"என்ன தம்பி இந்தப் பக்கம்?" என்றவாறு புன்னகைத்தான். மரணச்சடங்கொன்றில் கலந்துகொள்வதற்காக வந்ததாகச் சொன்னேன் நான்.

"எவ்வளவோ காலத்திற்குப்



பிறகு சந்தித்துள்ளோம்! எப்படிச் சுகம் சேதிகள்? இப்போ கொழும்போடுதானோ?"

அவன் கேட்டதற்குப் பதிலாய் நான் சிரித்துக்கொண்டு தலையாட்டினேன். நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு ஒரே ஊரைச் சேர்ந்த இருவர் சந்தித்துக்கொள்ளும்போது பல விடயங்கள் பற்றிப் பேசுவது இயல்புதானே! நாங்களும் பேசினோம். அவன் எனது வீட்டாரைப் பற்றியெல்லாம் குசலம் விசாரித்தான். அவனது தோற்றத்திலும், பேச்சிலும் நிறைய மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதை என்னால் உணர முடிந்தது. முன்பு அவனிருந்த விதமும் இன்று அவனிடம் காணப்படும் குணமும் எதிரும் புதிருமாக இருந்ததுதான் புதினம். எனது கண்களே நம்ப மறுக்கும் அளவுக்கு அவனது நடை, உடை, பாவனை யாவும் மாறுபட்டிருந்தன. கடந்த காலத்தை நோக்கி என் மனக்குதிரை காலடி எடுத்து வைத்தது.

எங்கள் ஊரிலே அவனைப் பெரும்பாலானோர்க்கு அடியோடு பிடிப்பதே இல்லை; அந்தளவுக்கு ஊராரின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதித்து வைத்திருந்தான். எடுப்பான தோற்றமும் கடுப்பான பேச்சும், மற்றவரை மதியாத திமிர், பீடிவாதப் போக்கும் கொண்டவன்தான் அவன்! ஊர்க்கோடியில் ஒரு ரேஷன் கடை நடத்தி வந்தான். ஆரம்பத்தில் அவனது தகப்பனார்தான் அதனை ஸ்தாபித்தார். அவரொரு முற்போக்குவாதி! கம்யூனிஸ சித்தாந்தம் பேசுபவர். ஆனால் அவருக்குப் பிறந்த அவனோ நேர்மாறாக விருந்தான். ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்ற உலர் உணவுப் பொருட்களில் இவன் பல மோசடிகளும் கலப்படமும் செய்து வந்தான். யாராவது அவனைத் தட்டிக் கேட்டுவிட்டால் போதும்; அவன் அவர்களை திட்டித் தீர்த்துவிடுவான். ஒருமுறை இவனோடு தகறாறு பண்ணப்போன ஒருவரை மண்டையில் அடித்து இரத்தக் காயத்திற்கு உள்ளாக்கினான். அப்போது நான் சிறுவனாயிருந்தேன். அந்தக் கோரக் காட்சியை நேரிலே கண்ணுற்றேன். அன்றிலிருச்து அவனைக் கண்டாலே எனக்கு ஒரு வித பயம் ஏற்படும். தான் வாழும் சமூகத்தோடு சேர்ந்து வாழாத ஒரு வித தான்தோன்றிப் போக்குடைய சுபாவம் அவனுக்கு. பெரியோரை மதிப்பதும் இல்லை. செய்யும் தொழிலிலும் சுத்தமில்லை. எப்போதும் ஏனையோரைக் கிண்டலடிப்பதும் கண்டபடி விமர்சிப்பதும்தான் அவன் பிழைப்பாய் போனது. நாங்கள் அவனை சாத்தான் என்றுதான் கூறுவோம். ஏனெனில் எங்களூரில் வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் எமது வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு இறைவழிபாட்டிற்காக நாம் பள்ளிவாயில் சென்றுவிடுவோம். ஆனால்.... ஊருக்குள்ளே இவன் மட்டும் கடையைத் திறந்து வைத்துக்கொண்டு எவனாவது ஒரு கிறுக்கனுடன் சேர்ந்தபடி வெட்டிப் பேச்சில் ஈடுபட்டிருப்பான் பாவி. அது கண்டு ஊரார் முகம் சுழிப்பதுண்டு.

"இவனும் ஒரு மனுஷனா....கொஞ்சம் கூட மனச்சாட்சிக்குப் பயப்படாத பரதேசி நாய்! இவனுக்கெல்லாம் இறைவனுடைய கோபப் பார்வை இறங்காமலா போய்விடும்." இவ்வாறு பலரும் பல விதமாய் அவனைக் கடிந்து கொள்வதனை என் காதுகளால் கேட்டிருக்கிறேன். ஒருமுறை அவன் மீதிருந்த வெறுப்பைத் தீர்ப்பதற்காக நான் அவனுக்கு தேநீர் வாங்கிக் கொடுத்த வேளை, தேநீர்ப் போத்தலில் எச்சிலைத் துப்பி கலக்கிக் கொடுத்துள்ளேன். அந்த அளவுக்கு அன்று என் பிஞ்சு மனதில் கூட அவன் வெறுப்பை உண்டாக்கியிருந்தான். ஆடாத ஆட்டமெல்லாம் ஆடியவர்கள் இறுதியில் அடங்கி ஒடுங்கி, ஆட்டம் காணும் உலகத்தில் இவன் மட்டும் வீதிவிலக்கா என்ன? இவன் போன்ற மிருகங்கள் மனம் திருந்தி மனிதர்களாக வாழத்தானோ என்னவோ அன்று எமக்கு அப்படி ஒரு சோதனை ஏற்பட்டது. ஆம்! தீமையில் விளையும் நன்மை போல் எமது சமூகத்தில் பல மாற்றங்கள் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பது வெள்ளிடைமலையாகும்! கடந்த காலக் கசப்பான அந்த அனுபவத்தில் கூட நல்ல படிப்பினை எமக்கு இருக்கத்தான் செய்தது.

தாகம் தீரத் தண்ணீர் குடித்துவிட்டு ஒரு கப் தேநீர் வரவழைத்தேன். தேநீர் பருகிவிட்டு ஒரு சிகரட் பற்ற வைத்தேன். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்ற குறள் வரியில் நானும் அவனுடைய கடந்த காலத் தவறுகளை அடியோடு மறந்து அவனோடு அன்பாய்ப் பழகினேன். அவனுக்கு இப்போது வயதாகிவிட்டது. கல்யாணமாகி இரண்டு மூன்று பிள்ளைகளும் உண்டாம். ஆனால் முன்பு போல் உடல் திடகாத்திரமாக இல்லை. அவன் பல வருடங்களாக அந்தத் தேநீர்க் கடையில்தான் ஊழியம் புரிகின்றானாம். "ஒரு நாளைக்கு நூற்றி ஐம்பது ரூபாதான் சம்பளம் தம்பி. இதற்குள்ளேதான் சீவியம் ஓட்ட வேண்டியுள்ளது" என்று அவன் கூறும் போதே அவனது விழியோரங்கள் நனைந்ததைக் கண்டேன். கண்ணீரால் அவனது பாவங்கள் கழுவப்படட்டும். மனதினுள் நான் நினைத்துக்கொண்டேன்.

"சரி தம்பி! மணி பன்னிரண்டாகுது, வீட்ட போய்க் குளித்துவிட்டு பள்ளிக்குப் போகனும். பிறகு சந்திப்போமே!" என்று கூறி அவன் என்னிடம் விடைபெற்றான்.

ஆம்! அன்று வெள்ளிக்கிழமை. அடடா... என்ன இது? உண்மையில் இவன் திருந்திவிட்டான்தான் போலும்! என்ற ஆச்சரியத்தில் நான் ஸ்தம்பித்து நின்றேன். ஒரு காலத்தில் இறைவனுடைய கட்டளையைச் செவிசாய்க்க மறுத்தவன் இன்று அதை சிரமேற்கொள்ள இப்படிப் பறக்கிறானே என்ற சந்தோஷம் ஒருபுறமும் ஊரோடு உறவுகொள்ளாமலிருந்தவன், இன்று இப்படி ஓர் உறவினன் போல் என்னோடு பாசமாய் உரையாடிவிட்டுப் போகின்றானே என்ற வியப்பு மறுபுறமுமாக எழவே, 'அவனா இவன்' என்று நான் என்னையே ஒருமுறை கேட்டுக்கொண்டேன்.

**-யாழமீர் மர்சூன், தெஹிவளை.**

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## அழிவுக்கு வித்து ஆணவம் எனும் சொத்து!

நல்ல புத்தகங்கள் நல்ல துணைவர்கள் போன்றவை. ஒழுக்கக்கேடான இலக்கியங்கள் மனதை மாசுபடுத்தித் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும்.

எத்தகைய பிரச்சினைகள் ஆயினும் குழப்பம் அடையாதீர்கள். நீங்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சைகள் என எண்ணி, அவற்றுக்கு முகம் கொடுக்கவும்.

வாழ்க்கையைப் பாழாக்கியவை; "நான்", "எனது", "நீர்", "உமது" என்பவையே அவற்றை மறந்துவிடுங்கள்.

ஞானம்தான் செல்வம் என்றால் உங்களைக் கேட்டுப் பாருங்கள்; "நான் எவ்வளவு செல்வந்தன்?"

உங்களுடைய வாயிலிருந்து கீழ்த்தரமான வார்த்தைகள் வந்தால் உங்களுடைய மனம் எப்படிப்பட்டதாக இருக்கும்?

உங்களை மதிப்பிடுவது உங்கள் செயல்களேயன்றி, நீங்கள் பேசும் மேன்மையான வார்த்தைகள் அல்ல.

இறப்பதற்குப் பயப்படுவதன் அர்த்தம் நீங்கள் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை விளங்கவில்லை என்பதாகும்.

உங்களுடைய உரிமைகள் பற்றி மட்டுமே அக்கறைப்படாதீர்கள். நீங்கள் சரியா, பிழையா என்பது பற்றியும் ஆலோசியுங்கள்.

லௌகீக ஞானம் அதிகம் ஆக ஆக, ஆணவம் வளர்கின்றது; ஆன்மீகக் கல்வி மென்மேலும் பணிவைத் தருகின்றது.

பிரச்சினை பற்றி நான் எவ்வளவு கடுமையாக வருந்தினாலும் வருந்திய மனம் ஒரு தீர்வை அடையுமா?

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

---

**Pல்லாயிரம் உயிர்களுக்குப் பசி தீர்க்கும் தாயாக இருந்த கடலுக்கு அன்று அகோரப் பசி எடுத்தது. நிலம் நடுங்கிய அதிர்வைத் தன்னுள் வாங்கிய கடல் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் மறைத்து வைத்திருந்துவிட்டுக் கரையில் எதிர்பாராத அதிர்ச்சிப் பாய்ச்சலை**

## வேறும் பிள்ளைகள் அங்கே நிக்குது பொடியைப் பார்த்துக்கொள் வாறன்

நிகழ்த்தியது.

எல்லாம் அறிந்ததாகப் பாவனை கொண்டிருந்த மனிதர்களை ஏமாற்றியது கடல். தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் சமுத்திரம் பெற்ற எழுச்சியை அறிந்து விலக இயலாதவர்களாய்ப் போனார்கள் இன்றைய மனிதர்களும்!



'என் அறிவினால் அள்ள முடியாதது எது?'

**தருவது முழுடில்யன்**

என்று நினைத்திருந்த மனித குலத்தை அள்ளி எடுத்துப் போனது இயற்கை! தன் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லி அமைந்திருக்கிறது என்றுதான் கொள்ள வேண்டும்.

ஆனால், இழப்புகளை தாங்கிக் கொள்ள முடிகிறதா? இதையெல்லாம் தாங்கும் வலிமையையும் அந்த இயற்கையே நமக்குத் தர வேண்டும்.

அதகளிப்பட்டு மாடியில் ஏறிக் கொண்டிருந்தபோதுதான் விசாலி கவனித்தாள், குமரன் கீழே எங்கேயோ தங்கிவிட்டான். அவளுக்குப் பதற்றம் தலையை உலுக்கியது. முன்னால் தயாளன் கடைக்குட்டியை அணைத்துப் பிடித்தபடி மேலேறிக்கொண்டிருந்தான்.

"இந்தாங்கோ, இதுகளைப் பிடியுங்கோ" என்று அவனிடம் கையில் பிடித்திருந்த மூத்தவளையும் அடுத்தவனையும் ஒப்படைத்துவிட்டு இறங்கியோடினாள்.

அம்மா கீழே அலைவது தெரிந்தது. தம்பியைக் காணவில்லை.

"அம்மா" என்று அலறியபடி மூத்தவள் கீழே ஓடினாள். பத்திரமாக மேலே ஏறிவிட்ட தயாளன் இப்போதுதான் பார்த்தான். மூவரும் மேலே வரவில்லை. கையிலிருந்த கடைக்குட்டியை இரண்டாவதிடம் ஒப்படைத்துவிட்டுக் கீழிறங்கினான்.

மனைவியிடம் "மூத்தவளை அழைத்துக்கொண்டு மேலே போ" என்று உரக்கக் கத்தினான்.

"ஐயோ குமரன்" என்று அலமலந்தாள் அவள்.

"நான் கூட்டிவாறன். நீ போ" காட்டுக் கத்தலாய்ச் சொல்லிவிட்டுக் கடற்கரையை நோக்கி ஓடினான். கடல் வெகுதூரம் பின்வாங்கியிருந்தது. கரை தூரம் போய் மணற்தரை நீண்டிருப்பதைச் சிறுவர்கள் வியப்போடு பார்த்தார்கள்.

கடல் மூச்சை இழுத்து வெளிவிடப் போகிறது என்பதைத் தயாளன் அறிந்திருந்தான்.

மாயக் கரையைத் தேடிப் போன சிறுவர்களிடையே குமரனைக் கண்டுபிடித்துக் கிடுக்கிப் பிடியோடு தூக்கித் தோளிலேற்றி விசாலியும் குழந்தைகளுமிருந்த மாடிக்கு ஓடி வந்தான்.

விசாலியிடம் குமரனைக் கொடுத்துவிட்டுத் திரும்ப ஓடினான்.

"எங்க போறீங்கள்...வேண்டாம்" என்று வீரிட்டாள் விசாலி... மூத்தவளும் இரண்டாமவனும் "அப்பா" என்று அலறினார்கள்.

"வேறும் பிள்ளைகள் அங்கே நிக்குதுகள். பொடியளைப் பார்த்துக் கொள். நான் இதோ வாறன்" என்று கத்திக்கொண்டு கடலை நோக்கி ஓடினான் தயாளன்.

"அப்பா" என்று பாய்ந்தோட முற்பட்ட மூத்தவளை இழுத்துப் பிடிக்கும் முயற்சியில், பெரும் திரைச்சீலை ஒன்று வானில் எழுந்து மடிந்து வீழ்ந்ததைக் காணத் தவறினாள் விசாலி.

என்ன நடந்திருக்கிறது என்பது புரியவில்லை. கீழ் வீட்டுக்குள் கடல் நீர் நிறைந்திருந்தது.

"அம்மா! அப்பா?" என்றான் கடைக்குட்டி.

"வந்திடுவார்" என்று மூத்தவளைப் பார்த்தபடி சொன்னாள் விசாலி. 'கடல் அவருக்குப் புதுசில்லை. எந்த அலையையும் சமாளித்துக்கொள்வார்' என்று உள் மனம் திரும்பத் திரும்பச் சொல்லியபடி இருந்தது.

இரண்டு நாட்களின் பின் அவரை அடையாளம் காட்ட வேண்டியிருக்கும் என்று அவளோ பிள்ளைகளோ நினைத்திருக்கவில்லை.

விழிகள் நிலைகுத்தியிருக்க விறைத்துப் போய் மரத்தில் சாய்ந்திருந்த விசாலியை உலுக்கி "அம்மா! அம்மா!" என்று மூத்தவள் அழுதாள். அக்காவைப் பார்த்து மற்ற இருவரும் அழுதார்கள். கடைக்குட்டி மணலில் சுதந்திரமாய் விளையாடினான்.

அழிந்து போனதை நினைத்து அழ அவர்களுக்கு அழகான வீடோ பொருட்களோ இருக்கவில்லை.

ஆனால், ஊர் அழகியதாக இருந்தது. மனிதர்கள் உதவி செய்கிறவர்களாகவும் விருந்தோம்புகிறவர்களாகவும் இருந்தார்கள்.

இப்போதும் எல்லோரும் உதவுகிறவர்களாகத்தான் இருக்கிறார்கள். வெளியூர்களிலிருந்தும் வந்து தங்கி நின்று உதவுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பழைய வாழ்க்கைக்கு மீள வேண்டும் என்கிற ஆர்வத்தோடும் கருணையோடும் எல்லோருமே அக்கறையெடுத்துக்கொள்கிறார்கள். நகரைக் கூட முன்னிலும் அழகாக மீளக் கட்டியமைத்துக்கொண்டிருக்கிறார்கள். குடிசையில் வாழ்ந்த நமக்கும் கூட மாடி வீடுகளில் ஒன்று கிடைத்துவிடக் கூடும்.

ஆனால் - முன்பிருந்தது போல அழகாயில்லையே ஊர்! எங்கள் தந்தை போன பின்பு எப்படி அழகாயிருக்கும் இந்த நகர்?

*குய் குரல் மலிந்த கொழுந்துவை*
*அடிசில் இரவலர்த் தடுத்த வாயிற்,*
*புரவலர் கண்ணீர்த் தடுத்த*
*தண் நறும் பந்தர், கூந்தல் கொய்து,*
*குறுந் தொடி நீக்கி, அல்லி உணவின்*
*மனைவியோடு இனியே*
*புல்லென்றனையால் - வளங்கெழு*
*திருநகர்! வான் சோறு கொண்டு*
*தீம்பால் வேண்டும் முனித்தலைப்*
*புதல்வர் தந்தை தனித்தலைப்*
*பெருங்காடு முன்னிய பின்னே.*
*(புறம் : 250)*

---

✉ **நம் முன்னோர் பெருமைகளைச் சொல்லிப் பூரிப்பதில் என்ன தவறு?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

எங்கள் தாத்தாவிடம் யானை இருந்ததைச் சொல்லிக்கொண்டிருக்கலாம். அதேநேரம் எங்கள் நாளைய சந்ததி பூனையையாவது வைத்துக்கொள்ள நாம் ஏதாவது செய்திருக்கிறோமா என்றும் கேட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

✉ **சோதிடத்தில் உங்கள் நம்பிக்கை எப்படி?**

-ச.நிரஞ்ஜலா, மஹியாவ.

அக்குளிலிருப்பது விழவும் கூடாது; உத்தரத்திலிருப்பதை எடுக்கவும் வேண்டும் என்பது மாதிரிதான். அதாவது கொள்கையைக் கைவிடவும் கூடாது; எதிர்காலம் பற்றித் தெரிந்துகொள்ளவும் வேண்டும்.

✉ **இலங்கையின் தமிழ் நாளிதழ்கள் எல்லாம் புலிகளின் ஊதுகுழல்களாகவே மாறிவிட்டனவே! என்ன சொல்கிறீர்கள்?**

-எம்.ஆறுமுகம், வெலிமடை.

அப்படி நான் நினைக்கவில்லை. ஒரு தமிழ் நாளிதழ் அரசாங்கத்தின் ஊதுகுழலாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறதே!

✉ **நான் எழுதி சில சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. நாவல் ஒன்று எழுத வேண்டும் என நீண்டநாள் ஆசை. ஆனால் என் மனம் சொல்கிறது, நான் அறிந்து வைத்திருப்பவை போதாது; இன்னும் படித்து விஷயங்களைத் திரட்டிக்கொள்ள வேண்டுமென்று.... நீங்கள் கூறுவது?**

-க.கமலதாசன், வந்தாறுமூலை.

நல்ல மனம் வாழ்க!

✉ **கமலுக்குப் பிறகு நடிப்பில் கலக்கப்போவது யார்? விக்ரமா, அஜித்தா, விஜய்யா, சூர்யாவா?**

-சு.சுதாகரன், கொட்டகலை.

அஜித்தையும் விஜய்யையும் விட்டுவிடலாம். அவர்கள் நடிகர்களுக்கு நடிப்பை விட முக்கியமாக வேறு விஷயங்களே இருப்பதாக நம்புபவர்கள். மற்ற இருவரில் விக்ரம் இதுவரை சேது, காசி, பிதாமகன் என்று மிகைப்படுத்திய அசாதாரண கதாபாத்திரங்களிலேயே நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பிதாமகன் 'சக்தி'யாகட்டும், காக்க காக்க 'இன்ஸ்பெக்ட'ராகட்டும் இயல்பான நடிப்பையும் நகைச்சுவையையும் காட்டி நம்பிக்கையளிப்பவர் திரையுலக மார்க்கண்டேயரின் மைந்தர்தான்!

✉ **பெண்களுடைய மூளையை விட ஆண்களுடைய மூளை அளவில் பெரியதென்று விசயம் தெரிந்தவர்கள் சொல்கிறார்களே! உண்மையா?**


-இ.தர்மராஜ், கண்டி.

அளவில் பெரியது எதுவும் வேகமாகச் செயல்படுவதில்லை என்று என் சிநேகிதி சொல்கிறார். அப்படியே இதுவும் உண்மைதானா என்று விஷயம் தெரிந்தவர்களிடம் விசாரித்து எனக்கும் சொல்லுங்கள்.

✉ **உங்களை விடப் புத்திசாலிகளைச் சந்திக்கும்போது என்ன நினைப்பீர்கள்?**

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

"கற்பனவும் இனியமையும்" என்று சொன்ன மாணிக்கவாசகரை!



✉ **நு.்மான், சேரன், யேசுராசா போன்றோர் தொகுத்த கவிதைத் தொகுப்புக்களில் புதுவை இரத்தினதுரை விடப்பட்டது குறித்து ஸ்ரீ பிரசாந்தன் கிளப்பியிருக்கும் சர்ச்சையை (மல்லிகை - 40ஆவது ஆண்டு மலர்) வாசித்தீர்களா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

-கே.எம்.கிருஷ்ணா, கொழும்பு - 13.

நு.்மான், ஜெயபாலன் போன்றோர் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களையும், கவிதைக்காகப் பிரசாந்தன் தந்திருக்கும் சில அளவுகோல்களையும் கொண்டு அவர் எழுப்பியிருக்கும் பிரச்சினைக்கு, வேறு சில கவிஞர் அபிப்பிராயங்களையும், அளவுகோல்களையும் கொண்டு எளிதாக மறுத்துவிடலாம் என்பதை கொஞ்சம் நிதானித்தால் அவரும் புரிந்துகொண்டுவிடுவார். பெரிய சைஸ் மல்லிகையில் ஆறு பக்கங்களைச் செலவு செய்திருக்கும் பிரசாந்தனின் கேள்விக்கு ஒரு வரியில் பதில் சொல்லலாம் : "தொகுப்பில் விடுபட்டவர்களாக எனக்குப் புதுவையை விடவும் முக்கியமான வேறு சில கவிஞர்களிருக்கிறார்கள்!

✉ **மனிதர்கள் கடவுளை விலக்கிவிடும் காலம் வருமா?**

-க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று.

மரணம் இருக்கும் வரை மனிதர்களிடம் கடவுளும் இருப்பார்.

✉ **விடையே இல்லாத கேள்வி உண்டா?**

-செ.கோகிலா, கோணப்பிட்டிய.

விடையே இல்லாத கேள்விக்கு தெரியாது என்பது விடை!

✉ **கமல்ஹாசன் நடித்த படங்களில் உங்களுக்குப் பிடித்தது எது?**

-பாத்திமா பர்ஸானா, வத்தளை.

படங்களை விடுங்கள். சுனாமிக்குப் பிறகு அவர் விகடனில் எழுதியிருந்ததும் பிடித்தது. அந்தக் கட்டுரையில் ஓரிடத்தில் அவர் சொல்வது :

கடலுக்கும் நமக்கும் கருணை ஒரே அளவுதான். தான் இடம் பெயரவோ, இடம் பிடிக்கவோ நினைக்கும்போது வழியில் உள்ள தடங்கல்களையெல்லாம் குப்பை மாதிரிக் கூட்டித் தள்ளிவிட்டு நடைபோடும் கொடூரம் நாமும் செய்வதுதானே!

## சிந்தியா பதில்கள்

✉ **மனிதர்களிடம் நீங்கள் கண்டு வியக்கும் குணம்?**

-எச்.எம்.எம்.பைறூஸ், ஏறாவூர்.

சாதாரண மனித அறிவுக்கும் ஜீரணிக்க முடியாத அடி முட்டாள்தனமான தொலைக் காட்சி நாடகங்களையும் இரசித்துப் பார்த்துக்கொண்டிருக்கும் பொறுமை!

✉ **ஈராக் யுத்தமும், அங்கு பாரிய அழிவாயுதங்கள் இருக்கின்றன என்று தேடப் புறப்பட்டதும் ஒரு சிறு தகவல் பிழையால் நேர்ந்துவிட்டது என்று அமெரிக்கா இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறதே?**

-எம்.எம்.முத்து, தலவாக்கலை.

பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்து, ஒரு பெரிய தேசம் சிதைந்து சீரழிந்து போய்விட்டது, சிறு தகவல் பிழை அவர்களுக்கு!

ஹ்ம்...எங்கள் சாவுகள் என்ன பிழையோ?

✉ **ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அடிப்பது சரியா?**

-எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம், ஏறாவூர் 3 ஏ.


க.நா.சு. மொழிபெயர்த்த 'உலக இலக்கியம்' என்ற தலைப்பில், பத்தொன்பது கதைகளைத் தொகுத்து நூலாக சந்தியா பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. அதில் வில்லியம் ஸரோயனின் ஒரு கதை. வகுப்பில் குழப்படியாகவும், மற்ற மாணவர்களைச் சிரிக்க வைப்பதற்காகக் குதர்க்கமான கேள்விகளைக் கேட்டு முரண்டு செய்யும் மாணவனை வகுப்பு முடிந்த பிறகு நிற்கச் சொல்கிறார் ஆசிரியர். நிறுத்தி வைத்து அவர் சொல்லும் சில வார்த்தைகள் உங்கள் கேள்விக்குப் பதிலாகவும் அமையும் :

"என் குழந்தைகளின் வெளித் தோற்றம் எப்படியிருக்கிறது என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. கறுப்பாகவோ வெள்ளையாகவோ, பணக்காரக் குழந்தையாகவோ ஏழையாகவோ, கெட்டிக்காரனாகவோ மந்தமாகவோ, மேதையாகவோ குழப்படியாகவோ இருக்கும். அது பற்றி எனக்குத் துளியும் கவலையில்லை. அவனிடம் மனிதத்தனம் இருந்தால், அவன் உண்மையையும் கண்ணியத்தையும் நேசிப்பவனாயிருந்தால், மற்றவர்களைச் சமனாக மதித்தும் நேசித்தும் நடப்பவனாயிருந்தால் எனக்குப் போதும். வெளிப் பழக்க வழக்கங்களைப் பார்த்து ஏமாந்துவிடமாட்டேன் நான். எல்லோரும் ஒரே மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் என்னென்ன வினோத நடத்தைகளுடன் இருந்தாலும் பரவாயில்லை. என் குழந்தைகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாதிரியில் இருப்பதுதான் எனக்குப் பிடித்தமானது. என் வேலை சுலபமாக இருக்க வேண்டியதற்காக, என்னைத் திருப்திப்படுத்துவதற்காக நீ உன்னை மாற்றிக்கொள்வது எனக்குப் பிடிக்காது. என் குழந்தைகள் ஜீவனுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொருவனும் தனிச் சுபாவமுள்ளவனாக உற்சாகம் தரும் விதத்தில் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டிருக்க வேண்டும். உன் குறும்புகளை நிறுத்தாதே. அவற்றுக்காக உன்னை நான் கண்டிக்கப்போவதில்லை...."




சனத் ஜெயசூரியவும் ரொஷான் மஹானாமவும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்து பெற்றுக்கொண்ட 576 ஓட்டங்கள் அதுவரையில் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே எந்தவொரு விக்கெட்டுக்காகவும் பெறப்படாத அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக கணிக்கப் பெற்றது.

இதற்கு முன்பதாக 1990 - 91 வருடங்களின்போது வெலிங்டனில் வைத்து இலங்கை அணிக்கு எதிராக நியூசிலாந்து அணி சார்பில் மார்ட்டின் சடரோவும் பீன் ஜோன்ஸனும் இணைந்து 467இணை ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இந்தச் சாதனையை சனத் ஜெயசூரியவும் ரொஷான் மஹானாமவும் முறியடித்தனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



முரளிதரன்

இப் போட்டியின்போது இலங்கை அணி சார்பில் அரவிந்த டி சில்வா 126 ஓட்டங்களையும் தலைவர் அர்ஜுன ரணதுங்க 86 ஓட்டங்களையும், மஹேல ஜயவர்தன 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளை இழந்து 952 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தனது இன்னிங்ஸை நிறுத்திக்கொண்டது.

இலங்கை அணி பெற்றுக் கொண்ட மேற்படி 952 ஓட்டங்களும் ஓர் உலக சாதனையாகும். 120 வருடகால வரலாற்றைக் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓர் அணி பெற்றுக்கொண்ட அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையாக இது கருதப்பட்டது.

இதற்கு முன்பதாக இந்தச் சாதனையை இங்கிலாந்து அணி நிகழ்த்தியிருந்தது. அதாவது 1938ஆம் வருடம் ஓவல் மைதானத்தில் வைத்து இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 903 ஓட்டங்களைப் பெற்றது.

இப் போட்டியின்போது இலங்கை அணிக்கு அர்ஜுன ரணதுங்கவும் இந்திய அணிக்கு சச்சின் டெண்டுல்கரும் தலைமை தாங்கினர்.

கே.டி.பிரான்ஸிஸ், எஸ்.ஆர். ரென்டோல் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

இதன் பின்னர் 1998ஆம் வருடம் ஜனவரி மாதம் 29ஆம் திகதி ஜமேக்காவில் கிங்ஸ்டன் நகரில் அமைந்துள்ள 'சபீனா பார்க்' மைதானத்தில் வைத்து இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் ஒரு டெஸ்ட் போட்டி ஆரம்பமானது.

பந்துவீச்சாளர்களுக்கு முகங்கொடுக்க இயலாத வகையில் பயங்கரமானதும் ஆபத்தானதுமான மைதானம் காரணமாக உத்தியோகபூர்வ டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஒன்று முற்றுமுழுதாக இரத்துச் செய்யப்பட்ட நிகழ்வு இப் போட்டியின் போதுதான் ஏற்பட்டது.

இப் போட்டியின்போது பத்து ஓவர்களும் ஒரு பந்துமே வீசப்பட்டன. 56 நிமிடங்கள் தான் இப் போட்டி நடைபெற்றது.



பிரைன் லாரா

17 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டுகளை இழந்திருந்தது. இந்த நிலையில் பந்து உடம்பில் பட்டதனால் 6 தடவைகள் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு முதலுதவி வழங்கப்பட்டது.

குளிர்பான இடைவேளையின்போது, ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான எலெக் ஸ்டுவர்ட் மது அணி துடுப்பாட்ட வீரர்கள் முகங்கொடுத்துள்ள ஆபத்தான நிலை பற்றி அணித் தலைவர் மைக்கல் அத்தர்டனிடம் எடுத்துக் கூறினார்.

போட்டி நடுவர்களான ஸ்ரீநிவாஸ் வெங்கடராமன் மற்றும் ஜர்மன் ஆகியோர் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிரையன் லாராவுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பின்னர் இப் போட்டி இரத்துச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இதன் பின்னர் இலங்கை அணி 10 விக்கெட்டுகளால் வெற்றி பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஒன்று 1998ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27,28,29,30,31ஆம் திகதிகளில் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின்போதுதான் இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் தனது திறமையை கிரிக்கெட் உலகுக்கு முதன்முதலில் எடுத்துக் காட்டினார் என்று குறிப்பிடலாம்.

1880ஆம் ஆண்டு முதல் அமையப் பெற்றுள்ள ஓவல் மைதானத்தில் வீசப்பட்ட மிகச் சிறந்த பந்து வீச்சு இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

-மைந்தன்.

## நீங்காத ஒரு வருட நினைவுகள்

தோற்றம்
01
02
1971



மறைவு
11
12
2003

**உமர் லெப்பை அப்துல் சலீம்**
**(தோழர் ரவி)**

(முன்னாள் உப தலைவர் : வலி/கிழக்கு பிரதேச சபை)

**தோழா,**

**நீ உடலால் எம்மை விட்டுப் பிரிந்து**
**ஒரு வருடம் நடந்துகொண்டிருக்கும்**
**இவ்வேளையில்**
**உன் எண்ணங்கள் வழியே**
**நாம் முன்னேற்றம் காண முயற்சிப்போம்.**
**என்றும் உனை மறவா**
**தோழர்கள்.**

## ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை)

**இன்ஷா அல்லாஹ் இம்முறையும் இஸ்லாமிய தஃவா நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) தொழுகை எதிர்வரும் வெள்ளிக்கிழமை (21-01-2005) சரியாகக் காலை 7.00 மணிக்கு, கொழும்பு 02 (சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்திருக்கும் இலங்கை வங்கிக்கு எதிரேயுள்ள) பெரேரா மாவத்தையில் இருக்கும் ஸ்டேன்லி ஜான்ஸ் மைதானத்தில் (மெட்டி பார்க்கில்) நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்துள்ளமையால், காலதாமதமின்றி குறிப்பிட்ட நேரத்திற்கு முன் குடும்ப சகிதம் சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**பெண்களுக்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

**முடியுமாயின் அங்கசுத்தி (வுளு) உடன் வருவதோடு, முஸல்லா விரிப்புகளையும் எடுத்து வரவும்.**

***ஏற்பாடு :- இஸ்லாமிய தஃவா நிறுவனம், 450, தெமட்டகொட வீதி (மல்லிகாராம), கொழும்பு - 09.***

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 7: பிறந்த கிழமை செவ்வாய்

லக்கி செவன் என்று அழைக்கப்படுகின்ற எண் ஏழு, ஆதிக்க எண்ணாகவும் சாந்தமும் அமைதியும் கொண்ட செவ்வாய்க்கிழமையினைப் பிறந்த கிழமையாகவும் கொண்டுள்ள நீங்கள், சேமிப்புமீது அதிக கவனம் உடையவராக இருப்பீர்கள். சேமிப்புப் பழக்கம் இல்லாதவர்கள் ஒன்று கடனாளியாக இருப்பார்கள்; மற்றது அன்றாடத் தேவைகளுக்குக் கஷ்டப்படுகின்றவர்களாகவும், உடனடித் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றவர்களாகவும் இருப்பார்கள். இந்த அம்சங்களை நன்றாக உணர்ந்துள்ள நீங்கள் எந்தத் தொழில் செய்வதாக இருந்தாலும் சேமிக்க வேண்டும் என்ற விருப்பத்திலேயே இருப்பீர்கள்.

நல்ல எண்ணங்களை முதலில் எண்ண வேண்டும். மனிதனின் நல்ல நினைவுகள் தான் பல சாதனைகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்பதைப் பூரணமாக அறிந்து வைத்திருப்பீர்கள். இதனால் நன்றாக ஓய்வில்லாமல் உழைக்க வேண்டும். எவ்வளவு வருமானத்தைப் பெறமுடியுமோ அவ்வளவிற்கு வருமானத்தை நன்றாகப் பெறவேண்டும் என்ற எண்ணங்கொண்டு செயற்படுவீர்கள்.

இந்த உழைப்பு, வருமானம் இவற்றைக் கொண்டு பிற்காலத்தில் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புவீர்கள்.

நீங்கள் நல்ல புத்திசாலியாகவும், திறமைசாலியாகவும் இருப்பீர்கள். உதாரணமாக மற்றவர்களின் செலவை வைத்துத் தன்னுடைய காரியத்தைச் சாதித்து விடுவீர்கள். உங்களது மனதையோ, பொருளையோ யாராவது தீண்டினால் உடனடியாக அவசரப்பட்டு ஆத்திரப்பட்டு ஒரு முடிவு எடுக்கமாட்டீர்கள். அடிபட்ட பாம்பு போல சமயம் பார்த்துத்தான் அவர்களுக்குப் பாடம் புகட்டுவீர்கள்.

உங்களை ஏமாற்ற வருபவர்களை நீங்கள் ஏமாற்றிவிடுவீர்கள். சிலரிடம் விட்டுக் கொடுப்பது போல நடந்து அவர்களால் இலாபம் பெறுவீர்கள். உங்களை நரித் தந்திரம் உடையவர்கள் கூட ஏமாற்ற முடியாது. அந்தளவுக்கு தந்திரவாதியும் புத்திசாலியும் ஆகிய உங்களை ஏமாற்ற யாரும் நினைத்தால் அவர்கள்தாம் ஏமாற வேண்டிவரும்.

நீங்கள் செய்கின்ற தொழிலைப் பொறுத்த வரையில் எவ்வளவுதான் சிரமங்கள் கஷ்டங்கள் இடையூறுகள் இருந்தாலும் அவற்றை மிக இலகுவாக முறியடித்து எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் தீரர்களாக விளங்குவீர்கள். இரக்க குணம் என்பது இயல்பாக உங்களிடம் இருக்கும். ஆனால் ஒன்று ; பணத்தைச் செலவு செய்துதான் இரக்கத்தைக் காட்டவேண்டும் என்ற அவசியம் உங்களுக்கு இல்லை. யாருக்கும் கொடுக்கின்ற மனநிலை உங்களிடம் கிடையாது.

16 வயது தொடக்கம் உங்கள் தொழில் ஆரம்பமானாலும் 21 வயது வரை எந்தவிதமான வருமானம் இலாபம் கிடையாது. 22 வயதிலிருந்து 28 வயதுவரை பல இடங்களில் மாறிமாறித் தொழில் செய்ய வேண்டிய நிலையிருக்கும். 29 வயதில்தான் ஒரு நிலையான இடத்தில் நிலையான தொழிலில் அமர்வீர்கள். 30, 33, 36, 39, 42 வயதுவரை நல்ல வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். இந்தக் காலங்களில் இடைக்கிடையே பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும் நீங்கள் உழைத்த பணம் மிச்சப்படும். 43, 45, 48, 51 வயது வரை உங்கள் வருமானமும் செலவும் சமநிலையில் இருக்கும். 52 வயதில் உங்களுக்குக் கூடிய பணத்தொகை வந்து சேரும். இதைக் கொண்டு நிம்மதியாக உயிருள்ளவரை வாழ்வீர்கள்.

5 வயது, 38 வயதுக் காலங்களில் உங்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டு பின்னர் குணமாகும். வாந்தி, தலைவலி, நெஞ்சு எரிவு, மயக்கம் போன்ற கோளாறுகள் அடிக்கடி ஏற்படும். இது உங்களுடைய 21 வயதிலிருந்து ஆயுள் வரை நீடிக்கும்.

இதற்குக் காரணம் உங்களுடைய உடம்பு பித்த உடம்பாக இருப்பதே. இந்தப் பித்தத் தொல்லையில் இருந்து நீங்கள் நீங்கவேண்டுமாக இருந்தால் பின்வரும் உணவு வகைகளைச் சாப்பிடுங்கள். இஞ்சி, எருமைத் தயிர், எலுமிச்சம் பழம், எள்ளு, நாரத்தங்காய் போன்றவற்றை அதிகமாக உட்கொள்ளுங்கள்.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் என்ன தெரியுமா? ஏழு அல்ல. ஒன்பதுதான். 9, 18, 27 ஆகிய திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். அதுவும் இந்தத் திகதிகளில் செவ்வாய்க்கிழமை வருமாக இருந்தால் அதன் பலன் நல்ல விசேடமாகும். நீங்கள் எந்த நிறத்திலும் ஆடை அணியலாம். எந்த இலக்க வீட்டிலும் வசிக்கலாம். எல்லாம் அதிர்ஷ்டமே.

ஆகவே, எண் 7ஐயும், செவ்வாய்க்கிழமையினையும் கொண்ட நீங்கள் வாழ்வில் வெற்றி பெற எண் வாழ்த்துக்கள்.

அதிக புத்தியும் தந்திரமும் உண்டு. ஆதிக்க எண் ஏழுக்கும் செவ்வாய்க்கிழமைக்கும் உரிய வாழ்வும் உயரிய செல்வமும் உரிமையாகும். அதனால் யோகம் உண்டு.

அடுத்து ஆதிக்கம் 7புதன்கிழமை
பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்!

# அன்டனி வான் லீயூவென்ஹுஃக் (1632 - 1723)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**ஆ**னால், அந்த முக்கியத்துவத்தை லீயுவென்ஹுஃக் தாம் கண்டு பிடித்த காலத்தில் அறிந்திருக்கவில்லை. எனினும், இவர் கண்டுபிடித்த அந்தச் "சிற்றுயிரினங்கள் தாம்" மனிதர்களின் வாழ்வையும் சாவையும் நிருணயித்தன. நீர்த்துளியில் இவர் அந்த நுண்ணுயிரினங்களைக் கண்டறிந்த பிறகு வேறு பல இடங்களிலும் அவற்றைக் கண்டார். கிணறுகளிலும், குட்டைகளிலும், மழைநீரிலும், மனிதர்களின் வாயிலும், குளங்களிலும் கூட அவை இருக்கக் கண்டார். இவற்றை ஆராய்ந்து பல்வேறு நுண்ணுயிர்களையும் (Bacteria) ஓரணு உயிர்களையும் (Protozoa) அவர் விவரித்தார். அவற்றின் வடிவளவுகளையும் கணக்கிட்டார்.

லீயுவென்ஹுஃக்கின் இந்தச் சிறந்த கண்டுபிடிப்பு 200 ஆண்டுகளுக்குப் பின் பாஸ்டர் தோன்றும் வரையில் *பயன்படுத்தப்படாமலேயே* இருந்தது. உண்மையைக் கூறின், 19ஆம் நூற்றாண்டில், சீர்திருத்திய நுணுக்குக்காட்டிகள் கண்டுபிடிக்கப்படும் வரையிலும் நுண்ணுயிரியல் (Microbiology) முழுவதுமே பெரும்பாலும் செயலற்றிருந்தது. இதனால், லீயுவென்ஹுஃக் தோன்றாமலிருந்து அவரது கண்டுபிடிப்புகளும் 19ஆம் நுற்றாண்டு வரையிலும் கண்டுபிடிக்கப்படாதிருந்திருந்தால், அறிவியல் முன்னேற்றத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்காது என்று வாதிடக் கூடும். எனினும் நோய் நுண்மங்கள் இருப்பதை இவர் மூலமாகவே அறிவியல் உலகம் அறிந்துகொண்டது என்பதையும் மறுப்பதற்கில்லை.

லீயுவென்ஹுஃக் தற்செயலான குருட்டு வாய்ப்பின் காரணமாக முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்பில் தடுக்கி விழுந்தார் எனச் சிலர் கூறுவர். இது சிறிதும் உண்மையன்று. வரலாறு கண்டிராத தரம் வாய்ந்த நுணுக்குக்காட்டிகளை மிகக் கவனமாகத் தயாரித்து, பொறுமையோடும், துல்லியமாகவும், லீயுவென்ஹுஃக் நடத்திய தீவிர ஆராய்ச்சிகளின் விளைவாகவே நுண்ணுயிரிகளை (Micro organisms) அவர் கண்டுபிடிக்க முடிந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. சுருங்கக் கூறின், அவரது கண்டுபிடிப்பு வெறுக் குருட்டு வாய்ப்பின் காரணமாகத் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதன்று. திறமையும் கடும் *உழைப்பும்* ஒருங்கிணைந்ததன் விளைவாகக் கிடைத்த பலன் அதுவாகும்.



ஒரு தனிமனிதரின் உழைப்பு மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகளில் ஒன்று நோய் நுண்ணங்கிகளின் கண்டுபிடிப்பு எனலாம். இதற்காக லீயுவென்ஹுஃக் தன்னந்தனியாகப் பாடுபட்டார். ஓரணு உயிரையும், நுண்ணுயிர்களையும் கண்டுபிடித்தது யாரும் எதிர்பார்த்திராத ஒன்று. உயிரியலின் மற்ற முன்னேற்றங்களைப் போலன்றி, முந்திய *அறிவியல்* அறிவிலிருந்து இந்தக் கண்டுபிடிப்பு இயற்கையாகத் தோன்றிவிடவில்லை.

அடுத்த வராம் ஜோசஃப் ஸ்டாலின்

# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

**சு**னாமி அனர்த்தத்துக்குப் பிறகெண்டாலும் அர்த்தத்தோட பேசுவாங்களெண்டு அரசியல்வாதிகளைத் தேடித் தேடிக் கதைச்சுப் பாத்தன் நாங்கள் எதிர்பாக்கிறதைக் கதைக்காம அவையளின்ர பொலிற்ரிக்ஸில நிண்டு கொண்டுதான் கதைக்கிறாங்கள். உலகத்தில என்னதான் மாற்றம் வந்தாலும் மனிசன் மாறயில்லையே எண்டு நினைக்கேக்க தான் எரிச்சலாக் கிடக்கு.

ஊரில வீடு வாசலெல்லாம் சுனாமியால சேதப்பட்டுப் போச்சு. ஊர் கிடக்கிற அலங்கோலத்தைப் பாக்கேக்க கடல் வந்து அழிச்ச தெண்டதை நம்ப ஏலாமக் கிடக்கு. தண்ணிக்கு இப்பிடியொரு சக்தி இருக்குமெண்டு நினைச்சுக் கூடப் பாக்க ஏலாமக் கிடக்கு. முந்தியெல்லாம் ஊருக்குப் போனா 'எங்கட வீட்ட இண்டைக்குச் சாப்பாடு' எண்டும் 'கட்டாயம் வீட்டுக்கு ஒருக்கா வர வேணும்' எண்டும் அன்புக் கட்டளை விடுக்கிற சனம், இப்ப வீடு வாசல்களை இழந்து கூடாரங்களுக்குள்ள அடுத்த வேளைச் சாப்பாட்டுக்குக் கையேந்தி நிக்கிற நிலைமையைப் பாக்கேக்க....அவையளுக்கு எப்பிடி ஆறுதல் சொல்லுறதெண்டதே தெரியுதில்லை.

ஒரு வேளைச் சாப்பாடெண்டாலும் எங்கட வீட்டிலை சாப்பிட வரவேணுமெண்டு சண்டை பிடிச்ச சனம், வாங்க ஒரு பிளேன்ரீ குடிப்பம் எண்டு கூடக் கூப்பிட முடியாத நிலைக்குப் போயிட்டினம். அவையளின்ர முகங்களை நேருக்கு நேர பாக்கிற தைரியம் எனக்கு இல்லாமப் போயிட்டதாத்தான் நினைக்கிறன். ஏனெண்டால் அவையளின்ர பார்வையே எல்லாத்தையும் இழந்து வாழ்க்கை மீது நம்பிக்கையில்லாம விரக்தியில நிக்கிற மாதிரித்தான் இருக்குது.

சுருங்கிப்போன கன்னத்தில கண்ணீர் வழிய நண்பரொருவர் அழுதுகொண்டிருந்தார். அவரைக் கூட்டிக்கொண்டு தேத்தண்ணி குடிப்பம் எண்டு கடைக்குப் போனன்.

பிள்ளையளையும் வாழ்க்கைத் துணையையும் கடலுக்குப் பலி கொடுத்துப் போட்டுத் தனிமரமா நிக்கிறவரிட்ட அதைப் பற்றி கேக்கக் கூடாதெண்டிட்டு கதையை வேறு பக்கமா திருப்பினன்.

"செய்திகளை கேக்கிறனீங்களோ.....என்ன சொல்லுது?"

"இப்பவெல்லாம் செய்தி கேக்கிற மனநிலையில நான் இல்லயடாப்பா. பெண்டாட்டி, பிள்ளையள் இல்லையெண்டது ரொம்பக் கொடுமையாக் கிடக்கு. ஏதோ விசர் பிடிக்கும் போல கிடக்கு. இதில நான் எங்க போய் செய்தி கேக்கிறது" எண்டு அவர் சொல்லும்போதே கண் கலங்கிவிட்டது. ரேடியோ எண்டாலும் சரி, ரீ.வி. எண்டாலும் சரி, எல்லா வேலைகளையும் விட்டுப்போட்டுச் செய்தி பாக்கிற மனிசன் இன்டைக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிருக்கிறார். அவ்வளவு ஏன் ஊடகங்களுக்குள்ளால வெளியில் வராத சில சம்பவங்களைக் கூடச் சொல்லி உற்சாகப்படுத்திற இவரே இப்பிடியெண்டால் மற்றவயளைப் பற்றி சொல்லத் தேவையில்லை. "அது சரி.... நிவாரணங்கள் எல்லாம் ஒழுங்கா கிடைக்குதோ" எண்டன்.

"கிடைக்குது......கிடைக்குது...கடலலை துரத்தி எந்தக் கொண்டிசனில ஓடி வந்தமோ அதே கொண்டிசனில இருக்கிற அளவுக்கு நிவாரணம் கிடைக்குது...வாற நிவாரணத்தைப் பங்கிட்டுத் தாறதில நடக்கிற இழுபறியிலயே பொழுது போகுது....குடுக்கிற நிவாரணத்தில கொள்ளையடிக்கிறது இங்க புதுசு இல்லையே. அது ஏற்கெனவே நல்லாக் கைவந்த விஷயம்தானே! முக்காப்புடி எனக்கு; காப்புடி உனக்கெண்ட கணக்கா நடக்குது."

எண்டு அவர் சொல்லுறபோதே, அதே உஷாரில அவரை வச்சுக்கொள்ளிறதுக்காகத் தொடர்ந்து கேட்டன்.

*"நீங்க இப்பிடி சொல்லிறீங்க...வெளியால* என்னடாவெண்டால் தாராளமாக் கிடைக்குதெண்டு ஒரு சாராரும் ஒண்டுமே கிடைக்கயில்லை எண்டு ஒரு சாராரும், கிடைக்கிறது போதாது எண்டு இன்னொருசாராரும் சொல்லினமே...."

"உப்பிடி மூண்டு விதமாச் சொல்லிறவங்கள் யாரெண்டு நினைக்கிறியள்? அரசாங்கமும், புலிகளும், தொண்டு நிறுவனங்களுந் தானே! பாதிக்கப்பட்ட சனம் இதுவரைக்கும் எதையெண்டாலும் சொல்லியிருக்கினமோ? இல்ல....ஏன் தெரியுமே? மக்களின்ர பேரில புதினமான அரசியல் நடக்குது. எல்லாரும் தங்கட தங்கட சுயலாபத்தில கருத்தா நிண்டு கொண்டு ஒருவரை மாறி ஒருவர் குற்றஞ் சாட்டுறதுதான் இப்ப நடக்குது. தானும் படுக்க மாட்டன் தள்ளியும் படுக்க மாட்டன் எண்ட கதையா. செய்யிறவனையும் விடாம தானும் செய்யாம இயக்கம்தான் குழப்புதெண்டு சனம் கதைக்குதுகள் அதில உண்மையிருக்கெண்டாலும் அரசாங்கமும் ஒழுங்கான முறையில திட்டமிட்டுச் செய்ததாத் தெரியேல்லை. இதில ஒருத்தரை மாறி ஒருத்தர் குற்றஞ்சாட்டிறதில ஒண்டுமில்லை. சனத்துக்கு உதவுறதுதான் முக்கியமானது."

எண்டு ஆள் தன்னை மறந்து வழமை மாதிரி பேசினதைக் கேக்கத்தான் கொஞ்சம் சந்தோசமாயிருந்திச்சுது. என்ர நண்பர் மட்டுமில்லை எல்லாருமே நடந்ததை நினைச்சுக் கவலைப்படாம இனி நடக்க வேண்டியதை யோசிக்கிறதுதானுங்கோ நன்மையா இருக்கும்....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்த வாரம் உங்கள் பலன்

(20.01.2005 தொடங்கி 26.01.2005 வரை)

### சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மகரம் - சூரியன், புதன், மேடம் - இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன்.
துலாம் - கேது, விருச்சிகம் - செவ்வாய், தனு - வெள்ளி.
சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை நன்மை, காரியானுகூலம், இனசன மகிழ்ச்சி, பணவரவு, உயர்ந்த நிலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நிலை உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால)
தொழில் மந்தம், செலவு மிகுதி, நண்பர்கள் உதவி, பெரியோர் பகை, குடும்பத் தொல்லை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் நன்மை, மனக்குறை நீங்கும், பணவரவு, உறவினர் மனஸ்தாபம், பெரியோர் சகாயம், உத்தியோகப் பேறு, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, குடும்ப மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் நன்மை, காரியானுகூலம், உறவினர் உபாதை, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோகக் குழப்பம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் கஷ்டம், பணச் செலவு, இனசன விரோதம், மனக் குழப்பம், அன்னியர் நட்பு, உத்தியோகக் குழப்பம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் மாற்றம், அன்னியர் நட்பு, கௌரவக் குறைவு, வெளியிடப் பயணம், வீண் பிரயாணம், உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை தருவர், மாணவர் கல்வியில் உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் கலக்கம், பணவரவு தடை, வீண் முயற்சி, அன்னியரால் தொல்லை, குடும்ப மகிழ்ச்சி, சுப காரிய நன்மை, உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் நன்மை, காரியானுகூலம், அன்னியர் சகாயம், இனசன மகிழ்ச்சி, குடும்ப சுகம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம் விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் மந்தம், பணவரவு தடை, பிரயாண மிகுதி, தேக சுகம் பாதிப்பு, குடும்பக் கலகம், உத்தியோகச் சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் அலைச்சல், எதிர்பாராச் செலவு, மனக் கலக்கம், வீண் குறை கேட்டல், குடும்பச் சிக்கல், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன மகிழ்ச்சி, குடும்ப சுகம், உயர்ந்த நட்பு, உத்தியோகப் பேறு, மாணவர் கல்வி மாற்றம், உயர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Registered as a News Paper in the G.P.O.(QD/31/NEWS/2004)

# எங்களால் முடிந்தது.....





சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட தெற்காசிய மக்களுக்கான மனிதாபிமானப் பணியில் தமது பங்களிப்பையும் வழங்குவதற்காக சர்வதேச கிரிக்கெட் சபைமுன்னணிக் கிரிக்கெட் வீரர்களை உலக தெரிவு லெவன் அணி, ஆசிய தெரிவு அணி எனப் பிரித்து முதலாவது சுனாமி நிவாரண நிதிப் போட்டியை நடத்தியுள்ளது. இப்போட்டியில் சுமார் 100 கோடி ரூபா நிவாரய நிதியாக கிடைத்துள்ளது.

இப் போட்டி அவுஸ்திரேலியாவின் மேல்போர்ன் மைதானத்தில் பகல் இரவுப் போட்டியாக நடைபெற்றது. இப் போட்டியை 120 நாடுகள் தொலைக்காட்சியிலும் 80,000 இரசிகர்கள் நேரடியாகவும் கண்டுகளித்தனர்.

இதில் குறிப்பிடக்கூடிய பல நிகழ்வுகள் நடைபெற்றிருந்தாலும் கிரிக்கெட் இரசிகர்களை பெரிதும் கவர்ந்தது அனைத்து அணி வீரர்களினதும் ஒற்றுமையாகும்.

## கிறிஸ்மஸ் 2005 அறிமுகம்



தமக்கிடையே மற்றும் தமது நாடுகளுக்கு இடையே சிற்சில கருத்து முரண்பாடுகளை கொண்டுள்ள அவுஸ்திரேலியா - நியூசிலாந்து, இந்தியா - பாகிஸ்தான் போன்ற அணி வீரர்கள் அவை அனைத்தையும் அத் தருணத்தில் மறந்து தாம் அனைவரும் ஒன்றே என்று விளையாடிய அனைத்து அணி வீரர்களுக்கு ஒருமுறை 'ஓ' போடத்தான் வேண்டும்.

சர்வதேசப் பிரச்சினை ஒன்றின் போது அனைவரும் இன,மத, மொழி பேதங்களை மறந்து சேர வேண்டும் என்பதற்கு இவர்களே சிறந்து உதாரணமாகும்.

---

கவர்ச்சி என்பது மனிதர்களுககு மட்டுமல்ல மதுபானங்களுக்கும் உரியது என பாதணி வடிவத்தில் மதுபானப்போத்தல் வடிவமைத்திருக்கிறார் ஒஸ்ரியா நாட்டு மதுபான உற்பத்தியாளர் ஒருவர் செறிப்பழ்தை கொண்டு தயாரிக்கப்பட்ட இம் மதுபானத்துக்கு சின்றெல்லா ஸூ (chinderella shoe) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் விலை 39.45 அமெரிக்க டொலர்களாகும். (3945 ரூபா) இது 350 லீற்றர் கனவளவைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

---



சுனாமிப் பேரலைகளால் மக்கள் இறந்த பின் சிவலோகம் காட்டுவது போல், பேரழிவை ஏற்படுத்தி, இலட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டபின் உலக நாடுகளுக்கு இப்போதுதான் ஞானோதயம் பிறந்திருக்கிறது. நடந்தது நடந்ததுதான். அதைத் திரும்பப் பெறுவது சாத்தியமாகாது. நடக்கப் போவது நல்லவையாக இருக்கட்டும். இங்கே சாதனை புரிந்து கின்னஸில் இடம்பிடித்த சில மனித முயற்சிகளைத் தான் (நாயும் கூடத்தான்) கீழே காண்கிறீர்கள். இவர்களின் சாதனையால் நாம் இழந்ததைத் திரும்பப் பெற முடியும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறதல்லவா?

அடர்ந்த ரோமமுள்ள 'டியோ' என்றழைக்கப்படும் இந்த நாய், மக்களின் கால்களிலிருந்து காலுறைகளைக் கழற்றும் போட்டியில் சற்றும் சளைக்காமல் 18 காலுறைகளைக் கழற்றிய காட்சியே இது. 2002 ஏப்ரல் 26இல் இச் சாதனை புரியப்பட்டது.





ஜேர்மனியைச் சேர்ந்த பீட்டர் வெஸல்ஸ் பேர்கர் 64 தேங்காய்களை வெறுங் கைகளால் அடித்து உடைத்த காட்சிதான் இது. இதற்கு அவர் எடுத்த நேரம் என்ன தெரியுமா? ஜஸ்ட் வன் மினிற். (காலம் : 2002 பெப்ரவரி 15ஆம் திகதி)

யூகோஸ்லேவியாவைச் சேர்ந்த 'பைபா' என்றழைக்கப்படும் சிலாவிஸா பெஜ்கிக் இவர். இவரது சாதனை என்ன தெரியுமா? நாளாந்த வீட்டுப் பாவனைக்கான மின்சக்தியை தனது உடம்பிலிருந்தே உற்பத்தி செய்வதாகும். 2001 நவம்பர் 24ஆம் திகதி பைபா ஒரு கப் தண்ணீரை (15 மில்லி லீற்றர்) 25 முதல் 97 சென்ரி கிரேட் வெப்பத்தில் சூடாக்கினார். இந்தச் சாதனைக்கான நேரம் ஒரு நிமிடம் 37 விநாடிகள்தான். உடம்பில் மின்சாரம் உண்டு என்பது இப்போது புரிகிறதல்லவா?


இது கிறிஸ்மஸ் பரிசாகக் கொடுப்பதற்குத் தயாரிக்கப்பட்ட செஸ் மதுபானமாகும். இது பண்டிகைக் காலம் என்றபடியால் மதுப்பிரியர்களுக்கு என வடிவமைக்கப்பட்டது. செஸ் விளையாட்டு காய்கள் போன்ற வடிவத்திலான கிளாஸ்களில் விலையுயர்ந்த மது விற்பனைக்கு வந்திருக்கிறது. விலையை கேட்டு தலையில் கை வைத்க வேண்டாம். பெரிதாக ஒன்றும் இல்லை 1,499,95 அமெரிக்க டொலர்களாகும் மதுவை குடிக்கும் முன்பே என்ன தலை சுற்றுகிறதா?


## முடியும்

கனடாவைச் சேர்ந்த பேன் யாங் என்ற இவர் ஒரு சவர்க்கார குமிழ் கலைஞர். 12 சவர்க்காரக் கூம்புகளை (தொட்டிகளை) ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து, அனைத்தையும் ஒரே தடவையில் ஊதிக் குமிழ்களை ஏற் படுத்துகிறார். முயன்றால் மனிதனால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இதுவும் உதாரணமல்லவா?











இப்பத்திரிகை கொழும்பு-6, வெள்ளவத்தை நெல்சன் பிளேஸ், 16 A ஆம் இலக்கத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் நாவலையில் உள்ள சமனல கிராபிக்ஸ் அச்சகத்தில் ஜனவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.